ஆங்கிலம் அறிவோமா?

ச.நாகராஜன்

நூல் தலைப்பு	:	ஆங்கிலம் அறிவோமா!
ஆசிரியர்	:	ச.நாகராஜன்
மொழி	:	தமிழ்
பதிப்பகம்	:	நிலாச்சாரல் லிமிடட்
காப்புரிமை	:	ஆசிரியருக்கு
பதிப்பாசிரியர்	:	நிலா
பதிப்பு எண்	:	2.0W
காலம்	:	அக்டோபர் 2012
அட்டை வடிவமைப்பு	:	பாலாஜி
Wrapper Image Courtesy	:	Sheelamohan, Rawich freedigitalphotos.net

“உலகம் முழுவதும் பரவியுள்ள தமிழ் சமுதாயத்திற்குத் தமிழ் இலக்கியங்களைப் படிக்க வாய்ப்பளிப்பதும், வளரும் எழுத்தாளர்களை ஊக்கப்படுத்துவதும், வருங்கால சந்ததிகளுக்குத் தமிழ் இலக்கியப் பொக்கிஷங்களை பாதுகாத்துத் தருவதுமே 'நிலா புக்ஸ்'-ன் இலட்சியம்”

Nilacharal Ltd
18 Collingwood Road
Crawley
RH10 7WG
UK
E-mail: team@nilacharal.com

TERMS OF USE:

- You may not sell, exchange, distribute or otherwise transfer this book in any form what so ever.
- You may make one (1) printed copy of this book for your personal use. You may not sell, exchange, distribute or otherwise transfer this copy to any other person for any reason.
- You may make one (1) electronic copy each of this book for archival purposes. Except for the single (1) permitted print copy and the single (1) archival copy, you may not make any other copies of this book in whole or in part in any form.

******

உபயோக நிபந்தனைகள் :

- நீங்கள் இந்த நூலை எந்த வடிவத்திலும் விற்கவோ, பண்ட மாற்றம் அல்லது விநியோகம் செய்யவோ அல்லது வேறு எந்த விதத்தில் கைமாற்றுவதோ கூடாது.
- நீங்கள் இந்த நூலின் ஒரு (1) பிரதியை உங்கள் சொந்த உபயோகத்துக்கு அச்சிட்டுக் கொள்ளலாம். அந்த அச்சுப்பிரதியை எந்த ஒரு நபருக்கும் எக்காரணம் கொண்டும் விற்கவோ, பண்ட மாற்றம் அல்லது விநியோகம் செய்யவோ அல்லது வேறு விதத்தில் கைமாற்றுவதோ கூடாது.
- நீங்கள் இந்நூலின் ஒரு (1) மின் பிரதியை ஆவணத்திற்காக உருவாக்கிக் கொள்ளலாம். ஒரே ஒரு (1) அனுமதிக்கப்பட்ட அச்சுப் பிரதியையும் ஒரே ஒரு (1) ஆவணப் பிரதியையும் தவிர இந்நூலின் முழுதையுமோ அல்லது பாகத்தையோ எவ்விதத்திலும் வேறு பிரதிகள் எதுவும் எடுக்கக்கூடாது.

******

முன்னுரை

ஒவ்வொரு மொழியைக் கற்கும்போதும் ஒரு புதிய உலகைக் காண்கிறேன் என்றார் ஒரு அறிஞர். எட்டு லட்சம் சொற்களைக் கொண்டுள்ள ஆங்கிலம் உலக மொழியாக இயங்குகிறது.

இதைக் கற்பதால் உலகளாவிய அளவில் வணிகம் செய்ய முடிகிறது. லட்சக்கணக்கான நூல்கள்மூலம் பல்வேறு துறைகளில் ஆழ்ந்த கருத்துக்களை அறிய முடிகிறது. ஒரு மொழி உலகப் புகழ்பெற என்னெவெல்லாம் கொண்டிருக்க வேண்டும் என்று அறிய முடிகிறது!

தமிழ் இனிய மொழி. உள்ளத்தை உருக்கும் தெய்வ மொழி!

தனித் தமிழ் என்று பேசி அதை வளரவிடாமல் செய்கிறோமா என்று ஐயப்பாடு எழும்போதே அதில் ஏராளமான கலப்புகளை ஏற்படுத்தி அதன் தனித் தன்மையை, தெய்வீகத்தை இழந்துவிடக்கூடாது என்ற எச்சரிக்கையும் தோன்றுகிறது.

ஆகவே காழ்ப்புணார்ச்சி இன்றி யாருடனும் பகைமை பாராட்டாது தமிழ் நலன் ஒன்றை மட்டுமே கருதி அதை வளர்க்கப் பாடுபட வேண்டும். இதற்கு ஆங்கில அறிவு இன்றியமையாதது!

ஆங்கிலம் என்றாலே கசப்புணர்வு கொள்வோர் ஏராளம். அவர்களுக்கு வேடிக்கையாக ஆங்கிலத்தை அறிமுகப்படுத்தி பின் அதை அவர்களாகவே கற்பதற்கான ஆர்வத்தைத் தூண்டவேண்டும் என்பது என் நெடு நாளைய அவா. தினபூமி செய்தி ஆசிரியராக இருந்த திரு. கே.வி. செல்வராஜ் இதை எழுத பெரிதும் ஊக்கம் கொடுத்தார். தினபூமி மாணவர் பூமியில் இது சுமார் தொண்ணூறு வாரங்கள் வெளியானது.

ஆங்கிலக் கடலின் ஒரு சிறிய அறிமுகம் இது. இதைப் படிப்போம் ஒவ்வொரு நாளும் ஒரு சில நிமிடங்கள் ஆங்கில அறிவைப் பெருக்க ஒதுக்கினால் அவர்கள் வாழ்வு வளம் பெறுவது உறுதி! ஆங்கில அறிவு

வளரும்போதே அதிலுள்ள அற்புதமான கருத்துக்களைத் தமிழுக்கும் கொண்டுவரவேண்டும். முக்கியமாக அறிவியல் தமிழ் இன்னும் வேகமாக வளர வேண்டும். இந்த உணர்வுடன் ஆங்கிலம் கற்க அனைவரையும் வேண்டுகிறேன்.

நூலைப் பற்றிய கருத்துக்களை என்னுடன் பகிர்ந்து கொள்ள வேண்டுகிறேன்.

நூலாக்கத்தில் பெரிதும் உதவி புரிந்த என் மனைவி மற்றும் மகள்களுக்கு என் நன்றி!

சென்னை

ச. நாகராஜன்

2.10.2002

ஈமெயில் முகவரி snagarajans@yahoo.com

பொருளடக்கம்

1. ஆங்கில மொழி விநோதங்கள் 1

2. சொற்கள் பிறந்தவிதம் 74

3. பிழைகளைத் தவிர்ப்போம் 113

4. IDIOMS AND PHRASES 130

5. சில வினாக்களும் விடைகளும் 185

1. ஆங்கில மொழி விநோதங்கள்

1. நூல் அறிமுகம்

ஏழு ஸ்வரங்களுக்குள் எத்தனை ராகம், எத்தனை இன்பம்......! என்பர்.

26 எழுத்துக்களுக்குள் எத்தனை பேரறிவு எனச்சொல்லி ஆங்கில அறிவுக்கடலை இசைக்கடலுடன் ஒப்பிடலாமல்லவா? இசை தருவதுபோல இன்பம் தருவதோடு, வாழ்க்கை ஆதாரமான பொருளுக்கும் இன்றைய உலகில் வழி வகுக்கிறது ஆங்கிலம்.

வணிகத்திற்கு ஒரு மொழி – ஆங்கிலம்.

தத்துவத்திற்கு ஒரு மொழி – பிரெஞ்சு

அன்பிற்கு ஒரு மொழி - இத்தாலி

என்றால் உள்ளத்தை உருக்க ஒரு மொழி தெய்வீகத் ‘தமிழ்’ என மொழிகளை இனம் பிரித்து மொழி அறிஞர் கூறுவர்.

வணிகத்திற்கான மொழியாக வந்த ஆங்கிலம், உலக மொழியாக உயர்ந்து கலை, இலக்கியம், விஞ்ஞானம், வரலாறு, பூகோளம், மருத்துவம், தொழில்நுட்பம், ஜோதிடம் எண்கணிதம், வானவியல் என இப்படி எல்லாத் துறைகளிலும் பேரறிவை வளர்க்கும் புத்தகங்களைக் கொண்டு தன் உயர்வுக்குச் சரியான காரணத்தை ஒவ்வொரு கணமும் நிரூபிக்கிறது.

நாடு, இனம், மொழி, மதம், அந்தஸ்து, வயது வேறுபாடின்றி அனைவரும் வேண்டி விரும்பும் மொழியாக இருக்கிறது.

3450 லட்சம் பேர்களின் தாய்மொழி ஆங்கிலம். இதே அளவுப் பேர்கள் இதை தமது இரண்டாம் மொழியாக உபயோகிக்கிறார்கள். இதே அளவு இன்னொரு மடங்கு இதை அறிந்தவர்களாக இருக்கிறார்கள்.

அப்படி என்றால்............

உலகின் ஐந்தில் ஒரு பகுதியினருக்கு ஆங்கிலம் தெரியும்.

பல நாடுகளில் ஆங்கில அறிவே சமுதாய அந்தஸ்திற்கும், தொழிலில் பதவி உயர்வுக்கும் இன்றியமையாததாக இருக்கிறது.

உலகமொழியான ஆங்கிலத்திற்கு போட்டியே இல்லை. அது தொடர்ந்து வளரும் என்பது அறிஞர்களின் கணிப்பு. இதைக் கற்பதும், அதில் மூழ்கி முத்து எடுப்பதும் கஷ்டம் என நினைப்பவர் பலர். இது உண்மை அல்ல. விளையாட்டாக, ஆங்கிலம் கற்கலாம். இந்த மொழியின் பல நுட்பங்களை பல்வேறு கோணத்திலிருந்து பார்க்கவிருக்கிறோம் நாம்.... இந்நூலில், மாணவர்களுக்கும், மற்றவர்களுக்கும் ஆங்கிலம் கற்பதில் ஒரு ஆசையை ஏற்படுத்துவதே இந்த நூலின் நோக்கம்!

2. எழுத்தின் சிறப்புகள்

ஆங்கில எழுத்துக்கள் இருபத்தியாறுக்கும் ஒரு பெரும் வரலாறே இருக்கிறது. ஒவ்வொரு எழுத்திற்கும் தனிச் சிறப்பு உள்ளது.

'E' எழுத்து இல்லாத நாவல்

எர்னஸ்ட் ரைட் (ERNEST WRIGHT) என்பவர் காட்ஸ்பி (CADSPY) என ஒரு நாவலை எழுதி உள்ளார்.

50,110 வார்த்தைகள் அடங்கிய நாவல் இது. இந்த வார்த்தைகளில் ஒன்றில்கூட 'E' என்ற எழுத்தே இல்லை. இந்த 'E' இல்லாத நாவலை எழுத அவருக்கு 165 நாட்கள் ஆனதாம்.

1939–ம் வருடம் அமெரிக்காவில் இந்த நாவல் முதன்முதலாக வெளியிடப்பட்டபோது அதன் விலை 3 டாலர். இன்றோ அதை வாங்க

புத்தகம் சேகரிப்போர் தரும் விலை ஆயிரம் டாலர். (சுமார் ஐம்பதாயிரம் ரூபாய்)

இதில் ஆச்சரியம் என்னவென்றால் ஆங்கில மொழியிலேயே அதிகமாக உபயோகப்படுத்தப்படும் எழுத்து 'E'

குறைவாக பயன்படுத்தப்படும் எழுத்து 'Q'

ஒரு சின்ன பாரா

கீழே உள்ள பாராவைப் படித்து அதன் சிறப்பு என்ன? என்பதை ஊகியுங்கள் பார்க்கலாம்.

"THIS PARAGRAPH IS UNUSUAL, BUT WHAT IS UNUSUAL OR ODD ABOUT IT IS WHAT THIS QUIZ IS ALL ABOUT. YOU MUST FIND OUT WHAT IT IS, IF YOU WANT TO GAIN TWO POINTS. NOW DON'T JUMP TO CONCLUSIONS. THINK ABOUT IT FROM ALL POINTS. NOTHING IS ACTUALLY WRONG WITH IT. SO DON'T HUNT FOR WRONGS. THE TRICK IS IN ITS PICK OF WORDS. IF YOU COULD NOT SPOT IT UNTIL NOW, DON'T WORRY TRY AGAIN. WITH A BIT OF LUCK YOU MAY BACK TWO POINT. BUT, IF YOU STILL FAIL DON'T BRAND IT AS A TOUGH TASK OR A CRAZY QUIZ."

என்ன சிறப்பு என ஊகிக்க முடிந்ததா?

இந்த பாராவில் உள்ள சொற்களில் ஒரு 'E' கூட இல்லை.

'E' யின் மகிமை

'E' யின் மகிமையைச் சொல்லிக் கொண்டே போகலாம்!

கீழே உள்ள ஒரு சிறிய பாராவைப் படியுங்கள்.

MY TYPWRITR WORKS QUIT WLL XCPT FOR ON KY. SOMTIMS IT SMS TO M THAT OUR GROUP IS LIK MY TYPWRITR. NOT ALL TH KYS AR WORKING PROPRLY. YOU MAY SAY "WLL I AM ONLY ON PRSON. IT WON'T MAK MUCH DIFFRNC." BUT YOU S FOR TH GROUP TO B FFCTIV. IT NDS TH ACTIV PARTICIPATION OF VRY PRSON.

SO TH NT TIM YOU THINK THAT YOUR FFORT IS NOT NDD RMMBR MY TYPWRITR AND SAY TO YOURSLF, "I AM KY PRSON AND NDD VRY MUCH."

ஒரே ஒரு எழுத்து இல்லாததால் பாராவே விபரிதமாகத் தெரிகிறது. மூளையைக் குழப்புகிறது. அந்த ஒரு எழுத்து என்ன தெரியுமா? 'E' தான்!

மேலே உள்ள பாராவின் சரியான வடிவம் இதோ....

MY TYPEWRITER WORKS QUITE WELL EXCEPT FOR ONE KEY. SOMETIMES IT SEEMS TO ME THAT OUR GROUP IS LIKE MY TYPEWRITER. NOT ALL THE KEYS ARE WORKING PROPERLY. YOU MAY SAY "WELL I AM ONLY ONE PERSON. IT WON'T MAKE MUCH DIFFERENCE." BUT YOU SEE FOR THE GROUP TO BE EFFECTIVE. IT NEEDS THE ACTIVE PARTICIPATION OF EVERY PERSON.

SO THE NEET TIME YOU THINK THAT YOUR EFFORT IS NOT NEEDED REMEMBER MY TYPEWRITER AND SAY TO YOURSELF, "I AM KEY PERSON AND NEEDED VERY MUCH."

ஒரு குழுவின் ஒவ்வொரு தனி நபரும் முக்கியமானவரே. ஒருவர் செயலற்று இருக்க ஆரம்பித்தால் குழுவின் வலிமைபோய், குழப்பமாகிவிடும் என்பதை 'E' ஐ வைத்து சொல்லும் இந்தத் துணுக்கு அபாரம் தானே!

‘Q’

‘Q’ ஆங்கில எழுத்துவரிசையில் 17 – வதாக வருவது. இது லத்தீன் மொழியிலிருந்து வந்தது. ’KPORA’ என்ற கிரேக்க எழுத்திலிருந்து வந்தது ‘Q’. ‘Q’ வை அடுத்து ‘U’ என்ற எழுத்து பல மொழிகளிலும் இத்தாலி, ஆங்கிலம் உட்பட்ட மொழிகளில் உடனடியாக வருகிறது.

‘O’

‘O’ என்ற எழுத்துதான் ஆங்கில எழுத்துக்களில் மிகவும் பழைய, மாறாத எழுத்து. போனீசியன் (PHONICIAN) எழுத்துக்களிலிருந்து கி.மு.1300–ல் எடுத்துக் கொள்ளப்பட்ட இந்த ‘O’ இன்றுவரை மாறவே இல்லை. ஒ! ஆச்சரியமாக இல்லை?

எழுத்தும் எண்ணும்

ரோமன் எண்கள் எழுத்தால் குறிப்பிடப்படுபவை.

MCMLXXIII என்றால் என்ன?

ஒன்றும் பயப்பட வேண்டாம். ரோமன் எண்கள் அறிந்தவர்கள் எளிதில் இதைப் புரிந்து கொள்வார்கள்.

M = 100

CM(1000 – 100) = 900

L = 50

XX = 20

III = 3

1973

வருடம் 1973 என்பதை எழுத MCML XXIII என்ற 9 எழுத்துக்களை எழுத வேண்டும்!

கண்ணாடி பிரதிபலிப்பு எழுத்துக்கள்

A H I M N O T U V W X

இந்த எழுத்துக்களில் ஒரு ஒற்றுமை உள்ளது. என்ன என்று தெரிகிறதா?

எழுத்துக்களை சரிபாதியாகப் பிரித்தால் ஒரு பாதிபோலவே அடுத்த பாதி அதன் கண்ணாடி பிரதிபலிப்பாக (MIRROR REFLECTION) இருக்கும்.

A to Z

பிரபல தமிழ் வார இதழின் ஆசிரியர் தனக்கு வந்த கேள்விக்குப் பதிலாக தமக்குப் பிடித்த, பிடிக்காத எழுத்துக்களை அழகாகப் பட்டியலிட்டார்.

யோசிக்க வைக்கும் எழுத்து Y (WHY)

வியக்க வைக்கும் எழுத்து O

எரிச்சலூட்டும் எழுத்து E (i.....i....)

கேட்க விரும்புவது S (YES)

கோஷம்போடும் எழுத்து X 'O' எப்படி எழுத்து மகாத்மியம்?!

3. ஐந்து வௌவல்

A, E, I, O, U எனப்படும் 5 எழுத்துக்களும் VOWEL எனப்படும்.

5 வௌவல் எழுத்துக்களும் அடங்கிய ஆங்கில வார்த்தை எவை எவை தெரியுமா?

EDUCATION

5 வௌவல் எழுத்துக்களும் அடங்கிய மிகச்சிறிய ஆங்கில வார்த்தை.

SEQUOIA (A type of coniferous)

தொடார்ந்து 5 முறை வௌவல் வரும் சிறிய வார்த்தை – QUXUEING

வரிசைப்படி வௌவல் எழுத்துக்கள் ஐந்தும் ஒரே ஒரு முறை வரும் இரண்டே இரண்டு ஆங்கில வார்த்தைகள் இதோ –

FACETIOUS

ABSTEMIOUS

4. பொருள் பொதிந்த பத்து வார்த்தைகள்

மொழி இயல் வல்லுநரை பிலோலாஜிஸ்ட் (PHILOLOGIST) என்பர். இதில் பெயரும் புகழும் பெற்றவரான டாக்டார் வில்ப்ரட் ஃபங்கை (DR WILFREDFUNK) ஒரு முறை ஆங்கில மொழியில்

பொருள் பொதிந்த பத்து வார்த்தைகளைப் பட்டியலிட்டுத்தர வேண்டிக் கொண்டார்கள்.

அவர் தந்த பத்து வார்த்தைகளின் பட்டியல் இது.

1. மிகவும் கசப்பான (BITTER) வார்த்தை ALONE

2. மிகவும் பூஜிக்கத்தகுந்த (REVERENT) வார்த்தை MOTHER

3. மிகவும் துயரகரமான (TRAGIC) வார்த்தை DEATH

4. மிகவும் அழகிய (BEAUTIFUL) வார்த்தை LOVE

5. மிகவும் கொடூரமான (CRUEL) வார்த்தை (REVENGE)

6. மிகவும் அமைதியான (PEACEFUL) வார்த்தை TRANQUIL

7. மிகவும் வருத்தகரமான (SADDEST) வார்த்தை FORGOTTEN

8. மிகவும் இதமளிக்கும் (WARMEST) வார்த்தை FRIENDSHIP

9. மிகவும் கடுமையான (COLDEST) வார்த்தை NO

10. மிகவும் ஆறுதல் அளிக்கும் (COMFORTING) வார்த்தை FAITH

5. சிறிய சொற்களே சிறந்தவை!

பெரிய சொற்களையும், சிறிய சொற்களையும் பற்றி 'தி இங்கிலீஷ் டைஜஸ்ட்' என்ற ஆங்கில பத்திரிகை கூறுவது இது –

"பெரிய நீளமான வார்த்தைகளைக் கொண்டு நீங்கள் மிரள வேண்டாம். நீண்ட வார்த்தைகள் அற்ப விசயங்களையே குறிக்கின்றன.

LIFE, DEATH, PEACE, WAR, MORNING, DAY, NIGHT, HOPE, LOVE, HOME (வாழ்வு, சாவு, அமைதி, போர், காலை, பகல்,

இரவு, நம்பிக்கை, அன்பு, வீடு) போன்ற பெரிய விசயங்களையெல்லாம் சிறிய வார்த்தைகளே குறிக்கின்றன. பெரிய தோரணையில் சிறிய வார்த்தைகளை உபயோகிக்கக் கற்றுக் கொள்ளுங்கள். இது சற்றுக் கஷ்டமான காரியம்தான். ஆயினும், நீங்கள் எண்ணுவதைச் சொல்ல இதுதான் வழி. கருத்து ஒன்றும் இல்லாதபோது பெரிய வார்த்தைகளை உபயோகியுங்கள். அவையே மூடர்களைப் பெரிதும் ஏமாற்றும்."

6. பெரிய வார்த்தைகள், நீளமான வார்த்தைகள்

ஆங்கிலத்தில் பெரிய, நீளமான வார்த்தை எது என்பதை அறியத்தான் எவ்வளவு ஆவல்!

இதுபற்றிப் போட்டி போட்டுக்கொண்டு விவரங்களைத் தருகின்றனர்அறிஞர்கள்.

ஆங்கிலத்தில் மிக நீளமான வார்த்தை எது.

'SMILES' என்பது பதில்.

முதல் 'S' க்கும் 'S' க்கும் இடையில் உள்ள தூரம் ஒரு மைல்!

இப்படி விளையாட்டாகக் கூறினாலும் உண்மையில் நீளமான வார்த்தை எது? ஆக்ஸ்போர்டு ஆங்கில அகராதியில்உள்ள சொற்களில் நீளமானது, இதுதான் -

FLOCCIPAUCINIHILIPILIFEGATION இதில் 29 எழுத்துக்கள் உள்ளன.

வெப்ஸ்டார்அகராதியில் (WEBSTER's THIRD NEW INTERNATIONAL DICTIONARY) 45 எழுத்துக்கள் உள்ள வார்த்தை ஒன்று உள்ளது. நுரையீரல் வியாதியைக் குறிக்கிறது இது!

நீளமான பெயர்

ஹோனலூலூ நகரசபையில் ஓர் அங்கத்தினரின் பெயர் கேசோர்வாடி நூபர். இவரைப் பற்றி சர்ச்சை எழுந்தது. காரணம் இவரது பெயர் மிக நீளமானது. அது குறித்தே சர்ச்சை!

51 எழுத்துக்கள் கொண்டே அவர் பெயர் - KEKOALAVLIINAPALI HAULI OLIO DAAND KAAPUAWAOKAMI KAMEHX.

28 எழுத்துக்கள் உள்ள ஒரு நீளமான வார்த்தை இது – ANTIDISES TABLISHMENTANIANISM இதற்கு அர்த்தம் என்ன தெரிமா? அரசையும், மதத்தையும் பிரிப்பதை எதிர்ப்பது என்பதாகும். (The Act of opposing the separation of church and state)

புரோட்டினைக் குறிக்கும் ரசாயன வார்த்தை ஒன்று உண்டு.

முழுதாக எழுதினால் 1913 எழுத்துக்கள் கொண்டது அந்த வார்த்தை. "KETHIANYLGLUTAMILNYL......." என ஆரம்பித்து "ALANYLALANYLI HRL. ONYLAR GINYLSERINE" என்று முடியும் இதை ரசாயனக் குறியீடாக எழுதினால் $C_{1289}H_{2051}N_{343}O_{0375}B$ என்று சுருக்கமாக எழுதி முடித்துவிடலாம்.

நீளமான பெயருடைய ஊர்

நீளமான பெயருடைய ஒரு ஊரைத் தெரியுமா? வடக்கு வேல்ஸில் (NORTH WALES) உள்ள இந்த கிராமத்தின் பெயர்.

"LLANFAIR PWLLGWYN GYLLGOGERY CHERND ROBWLLLLANTYSILIO GOGOGOCH"

58 எழுத்துக்கள் உள்ள இந்த ஊரின் பெயரை 20 அடி நீளமுள்ள போர்டில் எழுதி ஸ்டேசனில் வைத்திருக்கிறார்கள்.

ஒரு லட்சம் டிக்கெட்டுகள் வருடாவருடம் யாத்ரிகர்களுக்கு விற்பனையாகின்றது. சரி, இந்த ஊர் பெயருடைய அர்த்தம் என்ன? "ST MARY'S CHURCH IN A HOLLOW BY THE WHITE HAZEL NEAR THE FIERCE WHIRLPOOL BY THE RED CAVE OF SETYSILIO"

“பெரிய பெயர்” ஏரி!

மசாகசெட்ஸில் (MASSACHUSETS) உள்ள ஒரு ஏரியின் பெயர் இது –

CHARGO GGAGOGG MANCHAUGGA GOGG CHAUBANAGUN GAMAUGG இதன்பொருள்: “உன் பக்கம் நீ மீன்பிடி. என் பக்கம் நான் மீன் பிடிக்கிறேன். யாரும் நடுவில் பிடிக்க வேண்டாம்.”

சின்னப் பெயருடைய ஊர்

ஒரே எழுத்தை உடைய பெயர் கொண்ட கிராமம் ஐரோப்பாவில் பிரான்ஸில் உள்ளது. ஊரின் பெயர் ‘Y’.

7. சிறப்பான சில வார்த்தைகள்

ஆங்கிலத்தில் சிறப்பான வார்த்தைகளை இனம் பிரித்து அதன் சிறப்பைக் காண்பது வார்த்தை பிரியர்களுக்கு பெரும் மகிழ்ச்சியைத் தரும் விசயம்!

மறைந்த இரட்டையர்

சில வார்த்தைகளில் இரட்டை எழுத்துக்கள் வரும் இவற்றைக் கண்டுபிடிப்பது சுவையான விசயம்தான்.

BA......N என்ற வார்த்தையில் ‘L’ மற்றும் ‘O’ வை இரண்டு முறை எழுதினால் வருவது BALLOON

எட்டு எழுத்து வார்த்தை

எட்டு எழுத்து வார்த்தை ஒன்று. உலகில் பெரும்பாலானோரைக் கவர்வது. மூன்று ஜோடி இரட்டை எழுத்துக்கள் உள்ள வார்த்தை என்ன?

COMMERCE (C, M, E இருமுறை வருகிறது)

இன்னும் சில வார்த்தைகள்

COLLECTOR (C, L, O - இருமுறை)

CONTINUOUS

CONCERNED

COMMITTEE

இதில் COMMITTEE என்ற வார்த்தையில் M,T,E எழுத்துக்கள் இருமுறை அடுத்தடுத்து வருவது ஒரு சிறப்பு ஆகும்!

இப்படி இரட்டை எழுத்துக்கள் மூன்று ஜோடி அடுத்தடுத்து இடைவெளியின்றி வரும் வார்த்தை எது!

BOOKKEEPER

கீழே உள்ள வார்த்தைகள் என்ன

VE-I-I-I-I-U-E

VERISMILITUDE

I-I-I-I-I-I-I-E (ஏழு I கள் தொடர்ந்து வருவதைப் பாருங்கள்)

INDIVIBILITIES

'UNDER' இல் ஆரம்பித்து 'UNDER' இல் முடியும் வார்த்தை சிறப்பானது என்பதில் என்ன சந்தேகம்!

UNDER..... UNDER

UNDER GROUNDER

மாறுபட்ட அர்த்தங்கள்!

'CLEAUE' என்ற வார்த்தையில் ஒரு சிறப்பு உள்ளது. இருநேர்எதிரான அர்த்தங்களைத் தருவது இந்த வார்த்தை!

TO SEPARATE AND TO JOIN OR COME TOGETHER என்பதே இதன் பொருள்!

பிரிப்பது, இணைப்பது என மாறுபட்ட இரு அர்த்தங்களைத் தரும் வார்த்தை CLEAUE

டைப்ரைட்டர்

10 எழுத்துக்கள் அடங்கிய 'TYPEWRITER' என்ற வார்த்தையின் சிறப்பு என்ன தெரியுமா?

இதை டைப்ரைட்டரில் அடிக்கும்போது மேலே உள்ள வரிசையில் உள்ள எழுத்துக்களை பயன்படுத்தினால் மட்டுமே போதும்! இதுவே இதன் சிறப்பு.

'DERMATGLYPHICS'

கைரேகைப்பதிவைக் குறிப்பிடும் 14 எழுத்துள்ள நீளமான சொல் இது. இதில் ஒரு முறை வந்த எழுத்து மறுமுறை வரவில்லை பாருங்கள்.

OVERNER VOUSNES

கீழே கோடு இழுத்து எழுத வேண்டிய 'p' 'd' போன்ற எழுத்து எதுவும் இல்லாத நீளமான வார்த்தை இதுவேயாகும்.

'LATCHSTRING' என்ற வார்த்தை ஆறு அடுத்தடுத்து வரும் 'CONSONANTS' அடங்கிய சிறிய வார்த்தையாகும்.

STRENGTHS என்ற வார்த்தையே ஒரே ஒரு SYLLABLE அடங்கிய ஒரே ஒரு வௌவல் அடங்கிய நீளமான வார்த்தை ஆகும்.

ஒரு 'சிலபிள்' வார்த்தைகள்

LIEN, CAME, SMILE

மேலேகண்ட மூன்று வார்த்தைகளும் ஒரு சிலபிள் (SYLLABLE) வார்த்தைகள்தாம்! ஆனால் இவற்றின் முன்னே ஒரே ஒரு எழுத்தைச் சேர்த்துவிட்டால் போதும் அவை மூன்று சிலபிள் வார்த்தை ஆகிவிடும் எப்படி?

ALIEN, CAMEO, SIMILE

கீழே உள்ளவை ஒரு சிலபிள் வார்த்தைகள்.

DRUGGED, RAGED

ஒரே ஒரு எழுத்தை எடுத்துவிட்டால் இவை இரண்டு சிலபிள் வார்த்தை ஆகிவிடும்.

'RUGGED' 'AGED'

கண்டங்களின் சிறப்பு!

ஐரோப்பா நீங்கலாக ஏனைய கண்டங்களின் பெயரை ஆங்கிலத்தில் எழுதும்போது 'A' என்ற எழுத்தில் ஆரம்பித்து 'A' என்ற எழுத்தில் முடிப்பதை காணலாம்!

AMERICA, ANTARTICA, ASIA, AFRICA, AUSTRALIA

ஐரோப்பாவின் பெயர் மட்டும்தான் 'E' இல் ஆரம்பித்து 'E'யிலேயே முடிகிறது!

'EUROPE'

8. வாக்கிய அமைப்பு

ஆங்கில வாக்கிய அமைப்பு விநோதமானது.

இலக்கணச் சுத்தமாக ஐந்து "That" களை அடுத்தடுத்து ஒரே வாக்கியத்தில் உங்களால் உபயோகிக்க முடியும்.

உங்கள் நண்பர் ஒருவர் உங்களிடம் வந்து ஒரு வாக்கியத்தில் யாரோ ஒருவர் 'That' என்ற வார்த்தையை உபயோகித்துள்ளது இலக்கணப்படி சரிதான் என்று சொல்வதாக வைத்துக் கொள்வோம்.

அவர் கூறும் வாக்கியம் இதுதான்.

HE TOLD ME THAT THAT 'THAT' THAT THAT PERSON HAD USED WAS GRAMMATICALLY CORRECT.

இது மட்டுமல்ல, ஐந்து 'AND' களை அடுத்தடுத்து கொண்டுள்ள வாக்கியத்தையும் பார்க்கலாம்.

'BULL AND BEAR' என்ற தங்கும் விடுதிக்கு நீங்கள் சொந்தக்காரார் என வைத்துக் கொள்வோம். தங்கும் விடுதிக்கான போர்டை பெயிண்ட் அடித்துக் கொடுத்த பெயிண்டர் எழுத்துகளுக்கு இடையே விடவேண்டிய இடைவெளியைச் சீராக, சரியாக விடவில்லை. இதைச் சொல்ல வேண்டுமென்றால் எப்படிச் சொல்ல முடியும்?

"THE DISTANCE BETWEEN 'BULL' AND 'AND' AND 'AND' AND 'BEAR' ARE NOT THE SAME."

இது ஒரு புறமிருக்க பதினொன்று 'HAD'களை அடுத்தடுத்துக் கொண்டுள்ள வாக்கியமும் உண்டு.

ஆங்கிலத் தேர்வு ஒன்றை அனிதாவும், புனிதாவும் எழுதுகிறார்கள். ஏதோ ஒரு வாக்கியத்தில் அனிதா HAD HAD என்று இருதடவை உபயோகித்துள்ளபோது புனிதாவோ அந்த இடத்தில் ஒரு HAD மட்டுமே உபயோகித்துள்ளாள். விடையைத் திருத்தியவர் HAD HAD தான் சரி என்று தீர்மானித்து அனிதாவிற்கே உரிய மதிப்பெண்களைக் கொடுத்துவிட்டார்.

இதை எப்படிச் சொல்ல முடியும்?

PUNITHA, WHERE ANITHA HAD

HAD ‘HAD HAD’ HAD HAD ‘HAD’

‘HAD HAD’ HAD HAD A BETTER

EFFECT ON THE EXAMINER”

எப்படி வாக்கியங்கள்?

சிறப்பான வாக்கியம் ஒன்று

கீழே உள்ள ஒரு வாக்கியத்தைப் பாருங்கள் -

“SHOW THIS BOLD PRUSSIAN THAT PRAISES SLAUGHTER. SLUGHTER BRINGS ROUT”

இதில் சிறப்பு என்ன தெரியுமா?

ஒவ்வொரு வார்த்தையிலும் உள்ள முதல் எழுத்தை எடுத்துவிட்டு வாக்கியத்தைப் படியுங்கள். முற்றிலும் புதிதான வாக்கியம் ஒன்று வரும்.

“HOW HIS OLD RUSSIAN HAD RAISES LAUGHTER. LAUGHTER RINGS OUT!”

வேகமாகப் படிப்பவரா நீங்கள்?

கீழே உள்ள வாக்கியத்தை ஒரே ஒரு முறை படியுங்கள்.

“FINISHED FILES ARE THE RESULT OF YEARS OF SCIENTIFIC STUDY COMBINED WITH THE EXPERIENCE OF YEARS.

சரி, இதை மீண்டும் பார்க்காது கூறுங்கள். இதில் எத்தனை ‘F’ உள்ளன?

4 என்றால் நீங்கள் சராசரி

5 என்றால் சராசரியை விட கெட்டிக்காரன்.

6 என்றால் புத்திசாலி, ஆனால் உங்களுக்கு வேகமாகப் படிக்க வராது!

நூறாண்டு வாழ்ந்ததன் ரகசியம்

நூற்றாண்டுகள் வாழ்ந்த பெரியவரை அணுகி, “உங்கள் நீண்ட ஆயுளின் ரகசியம் என்ன, சுருக்கமாகக் கூறுங்கள்” என்றார்கள் சிலர்.

அவர் பதில் அளித்தார் பன்னிரண்டே வார்த்தைகளில் அழகாக.

அவர் கூறினார் - “எனது நூற்றாண்டு ரகசியம் பனிரெண்டு வார்த்தைகளில் உள்ளது” அவர் கூறிய வார்த்தைகள் இதோ –

BEST FRIENDS

1. DOCTOR DIET

2. DOCTOR QUIET

3. DOCTOR MERRY

FOR A STURDY HEART

4. NO CURRY

5. NO HURRY

NO WORRY

9. மீண்டும் மீண்டும் வரும் வார்த்தைகள்

சில வார்த்தைகள் திருப்பித் திருப்பி வந்து தரும் பொருள் நம்மை பிரமிக்க வைக்கும் ஒரே வார்த்தை இருமுறை இடம்மாறி வரும்போது தரும் அர்த்தம் சுவையாக இருக்கும். சில சுவையான வாக்கியங்களைப் பார்க்கலாம்.

1. HEAVEN MUST BE IN ME BEFORE I CAN BE IN HEAVEN

2. WEALTH IS NOT HIS THAT HAS IT. BUT HIS THAT ENJOYS IT.

பர்க்கின் கொள்கை!

கடைக்காரர் ஒருவர் பர்க்கை (BURKE) தனது பில்லுக்கான பணத்தைத் தருமாறு வற்புறுத்திக் கேட்டார். குறைந்த பட்சம் அசலைத் (PRINCIPAL) தராவிட்டாலும்கூட வட்டியையாவது (INTEREST) தருமாறு கேட்டார்.

அதற்கு பர்க் அளித்த பதில் உலகப் புகழ் பெற்றுவிட்டது.

"SIR, IT IS MY PRINCIPLE TO PAY THE INTEREST OR MY INTEREST TO PAY THE PRINCIPAL.

ஓ நீலின் பதில்!

பிரபல நாடக ஆசிரியர் ஓ நீல் (O NEILL) அவர்களுக்கு ஒரு தந்தி வந்தது. பிரபல நடிகை ஜீன் ஹார்லோவிடமிருந்து (JEAN HARLOW)

மிஸ் ஹார்லோ தனக்கு உலகிலேயே சிறந்த அமெரிக்க நாடக ஆசிரியர் கதை வசனம் எழுதித்தர வேண்டும் என்று விரும்பினார். ஓ நீல் இதற்கு சம்மதிப்பாரா?

ஓ நீல் உடனே பதில் தந்தியை அனுப்பினார்.

NO NO NO NO NO NO NO NO NO NO

NO NO NO NO NO NO NO NO NO NO

இருபது 'NO'க்கள்!

ஜான்சனின் விமரிசனம்

டாக்டார் ஜான்சனிடம் தனது படைப்பை விமரிசிக்குமாறு ஒரு எழுத்தாளர் கேட்டபோது அவர் கூறியது –

"YOUR MANUSCRIPT IS BOTH GOOD AND ORIGINAL BUT THE PART THAT IS GOOD IS NOT ORIGINAL AND THE PART THAT IS ORIGINAL IS NOT GOOD!"

விவேகானந்தரின் மெஸேஜ்!

சுவாமி விவேகானந்தரிடம் ஒருமுறை ஒரு 'MESSAGE' தருமாறு சிலர் வேண்டினார். அதற்கு அவர் அளித்த பதில் -

"MESSAGE? TAKE THE MESS OUT OF THE AGE!"

அண்ணாவின் பதில்

அறிஞர் அண்ணா பதவி ஏற்றவுடன் அவரது அரசின் கொள்கையை விளக்குமாறு பத்திரிகை நிருபர்கள் வேண்டினர்.

ரத்தினச் சுருக்கமாக பதில் அளித்தார் அண்ணா.

"TO TAP THE RICH, TO PAT THE POOR"

எத்தனை TROUBLE?

சுவாமி சின்மயானந்தர் ‘இடரைக் கண்டு கலங்காதே’ என்பதை விளக்குகிறார் ஒரு முறை இப்படி –

“WHEN TROUBLES COME TO TROUBLE DO NOT ALLOW THE TROUBLES TO TROUBLE: BUT ALLOW THE TROUBLES TO TROUBLE THE TROUBLES; LET NOT THE TROUBLES TROUBLE YOU; BUT LET THE TROUBLES TROUBLE THE TROUBLE!”

எத்தனை TROUBLE பாருங்கள்!

தொன்றுதொட்டு வழங்கிவரும் மூதுரை ஒன்று!

HE WHO KNOWS NOT AND KNOWS NOT

HE KNOWS NOT, HE IS A FOOL, SHUN HIM

HE WHO KNOWS NOT AND KNOWS HE KNOWS NOT

HE IS SIMPLE, TEACH HIM

HE WHO KNOWS AND KNOWS NOT

HE KNOWS, HE IS ASLEEP, AWAKE HIM,

HE WHO KNOWS AND KNOWS

HE KNOWS, HE IS WISE, FOLLOW HIM

இதன் பொருள் என்ன?

எவனுக்கு ஒன்றும் தெரியாதோ, தனக்கு எதுவும் தெரியாது என்பதும் தெரியாதோ, அவன் ஒரு முட்டாள். அவனை அணுகாதே!

எவனுக்கு ஒன்றும் தெரியாதோ, தனக்கு எதுவும் தெரியாது என்பது தெரியுமோ, அவன் எளிமையானவன், அவனுக்குச் சொல்லிக்கொடு!

எவனுக்கு எல்லாம் தெரியுமோ ஆனால் தனக்கு எல்லாம் தெரியும் என்பது தெரியாதோ, அவன் உறக்கத்தில் இருக்கிறான்: அவனை விழித்தெழச் செய்.

எவனுக்கு எல்லாம் தெரியுமோ, தனக்கு எல்லாம் தெரியும் என்பதும் தெரியுமோ அவன் அறிஞன்: அவனைப் பின்பற்று! எப்படிப்பட்ட அழகான, அருமையான அறிவுரை அற்புதமான சொற்களில்!

LITTLE BY LITTLE

'LITTLE' என்ற சின்ன வார்த்தை மீண்டும் மீண்டும் வந்து மெருகூட்டுவதைப் பார்க்கலாம்

MR.LITTLE LIVE IN A LITTLE HOUSE IN A LITTLE TOWN. AND HE WORKED FOR A VERY LITTLE SALARY. THE NEIGHBOURS WONDERED HOW MR. LITTLE AND THE WHOLE LITTLE FAMILY COULD GET ALONG ON SUCH A SMALL SALARY. HE WAS ASKED, "MR. LITTLE HOW DO YOU AND MRS. LITTLE AND THE SEVEN LITTLE LITTLES GET ALONG ON SUCH A LITTLE SALARY?

HE REPLIED, "EVERY LITTLE HELPS."

லிங்கனின் வாசகம்

ஆபிரகாம் லிங்கனின் கூற்று இது.

"I BEAR EXPLANATIONS EXPLANATORY OF THINGS EXPLAINED"

பேச்சும் போக்கும்

வொர்னான் ஹோவர்டு என்பவர் கூறிய அழகிய வாக்கியம் -

"TALK THE WAY YOU LIKE TO BE, AND YOU WILL BE THE WAY YOU TALK"

புதிர் கவிதை!

'கலிவர்ஸ் டிராவல்ஸ்' என்ற பிரபல நாவலை எழுதிய ஜோனாதன் ஸ்விப்ட். புதிர் கவிதை ஒன்றை இயற்றி இருக்கிறார்.

WE ARE LITTLE AIRIY CREATURES

ALL OF DIFFERENT VOICE AND FEATURES

ONE OF US IS 'GLASS' IS SET

ONE OF US YOU'LL FIND IN 'JET'

TO OTHER YOU MAY SEE IN 'TIN'

AND THE FOURTH A 'BOX' WITHIN

IF THE FIFTH YOU SHOULD PURSUIT

IF CAN NEVER FLY FROM YOU.

இந்தப் புதிர் கவிதையில் வரும் ஐந்து காற்று உருவங்கள் (AIRY CREATURES) எவை, எவை? உயிருள்ள பிராணிகள் அல்ல!

ஐந்து காற்று உருவங்கள் A, E, I, O, U முதலான ஐந்து வௌவல்கள் தாம்.

காற்று உருவம் என ஏன் சொல்கிறார் ஸ்விப்ட்? 'VOWEL CORDS' ஒலிக் குழாய் வழியே காற்றுமூலம் வருவதால் 'காற்று உருவங்கள்' என்கிறார்.

வௌவல் ஜோக்

வௌவலைப் பற்றிய ஒரு சிறு ஜோக்! டாக்டர்.பார்டன் வாரனிடம் (DR. BARTON WARREN) டாக்டர் வௌவல் (DR. VOWEL) இறந்துவிட்டார் என்று தெரிவித்ததும் அவர் உரக்கக் கூவினார்.

"WHAT? VOWEL DEAD? WELL. THEN HEAVEN, IT WAS NEITHER YOU NOR I !"

இடம் மாறிப் போனால் பொருள் மாறிப்போகும்!

அந்தந்த வார்த்தையை அந்தந்த இடத்திலேயே பயன்படுத்த வேண்டும், ஆங்கிலத்தில்! இடம்மாறிப் போனால் பொருள் மாறிப்போகும்!

'ONLY' எனும் வார்த்தை

உதாரணத்திற்கு ஒரு வார்த்தை

ONLY என்ற வார்த்தை

ONLY JOHN REPORTED THE ACCIDENT TO ME

JOHN ONLY REPORTED THE ACCIDENT TO ME

JOHN REPORTED ONLY THE ACCIDENT TO ME

JOHN REPORTED THE ACCIDENT ONLY TO ME

முதல் வாக்கியத்தின் பொருள்:

ஜான் ஒருவனே விபத்தை எனக்கு அறிவித்தான்.

'ONLY' இடம் மாறியவுடன் பொருள் மாறுவதைப் பார்ப்போம்.

இரண்டாம் வாக்கியத்தின் பொருள்

ஜான் தான் விபத்தை எனக்கு தெரிவித்தான்.

மூன்றாம் வாக்கியத்தின் பொருள்

ஜான் விபத்தை மட்டுமே எனக்குத் தெரிவித்தான்.

நான்காம் வாக்கியத்தின் பொருள்

ஜான் விபத்தை எனக்கு மட்டுமே தெரிவித்தான்.

'ONLY' என்ற வார்த்தை இன்னும் மிகச் சிறப்பானது.

பேராசிரியர் அமைத்த வாக்கியம்

கொலம்பியாவைச் சேர்ந்த பேராசிரியர் எர்னஸ்ட் பிரென்னக் (PUOFELFOV ERNEST BRENNECKE OF COLUMBIA)) ஒரு வாக்கியத்தை அமைத்துள்ளார். ஏழு வார்த்தைகள் அடங்கியுள்ள இந்த வாக்கியத்தில் 'ONLY' என்ற வார்த்தையை எல்லா இடங்களிலும் மாற்றி மாற்றி அமைப்பதன்மூலம் எட்டு வெவ்வேறு அர்த்தம் கிடைக்கும்.

I HIT HIM IN THE EYE YESTERDAY

ONLY I HIT HIM IN THE EYE YESTERDAY

I ONLY HID HIM IN THE EYE YESTERDAY

I HIT ONLY HIM IN THE EYE YESTERDAY

I HIT HIM ONLY IN THE EYE YESTERDAY

I HIT HIM IN THE ONLY EYE YESTERDAY

I HIT HIM IN THE EYE ONLY YESTERDAY

I HIT HIM IN THE EYE YESTERDAY ONLY

இதே போன்ற இன்னொரு வாக்கியத்தைப் பார்க்கலாம்.

ONLY MY SISTER ASKED ME TO LEND HER SOME MONEY

MY ONLY SISTER ASKED ME TO LEND HER SOME MONEY

MY SISTER ONLY ASKED ME TO LEND HER SOME MONEY

MY SISTER ASKED ONLY ME TO LEND HER SOME MONEY

MY SISTER ASKED ME ONLY TO LEND HER SOME MONEY

MY SISTER ASKED ME TO LEND HER ONLY SOME MONEY

MY SISTER ASKED ME TO LEND HER SOME MONEY ONLY

10. சக்தி வாய்ந்த 'கமா'

ஆங்கிலத்தில் PUNCTUATION MARK எனப்படும் குறிகளுக்கு ஒரு தனி மதிப்பு உண்டு.

அவற்றிலுள்ள கமாவிற்கு இருக்கும் மதிப்பே தனி!

ஒரு வாக்கியத்தை, அதன் உட்பொருளை சரியான விதத்தில் புரிந்துகொள்ள உதவி செய்வதே இந்த கமா தான்.

சில எடுத்துக்காட்டுக்களை இங்கே பார்க்கலாம்.

ஒரு ஆசிரியை தனது மாணவ – மாணவியர்க்கு ஒரு வாக்கியத்தைத் தந்து தகுந்த இடத்தில் கமாவைப் போட்டு பொருள் காணுமாறு கூறினார்.

வாக்கியம், இதுதான்

WOMAN WITHOUT HER MAN IN A SAVAGE

மாணவர்கள் கமாவைப் போட்டுத் தந்தனர்.

WOMAN WITHOUT HER MAN, IS A SAVAGE

தனக்குரிய ஆள் இல்லாத பெண்மணி ஒரு அனாதை.

மாணவிகளோ வேறு வேறு விதமாக கமாவைப் போட்டார்கள்.

WOMAN, WITHOUT HER, MAN IS A SAVAGE

பெண்! அவள் இல்லாவிடில், ஆண் ஒரு அனாதை!

எப்படி கமாவின் மகிமை! இடம் மாறியவுடன் பொருளையே மாற்றிவிட்டது பாருங்கள்.

ஷெரிடன் கேட்ட மன்னிப்பு

ரிச்சார்டு ஷெரிடன் (RICHARD SHERIDAN) என்பவர் பிரிட்டிஷ் பார்லிமெண்டின் ஒரு உறுப்பினார். ஒருமுறை அவர் சக உறுப்பினர் ஒருவரைக் கடுமையாகச் சாடினார்.

தனது வார்த்தைகளுக்கு மன்னிப்பு கேட்கவேண்டும் என்று அவருக்கு அறிவுறுத்தப்பட்டது.

ஷெரிடன் எழுந்து நின்று கூறினார்.

“MR. SPEKER. I SAID THE HONOURABLE MEMBER WAS A LIAR, IT IS TRUE AND I AM SORRY FOR IT”

இதைச் சொல்லிவிட்டு முத்தாய்ப்பாக மேலும் கூறினார்.

“THE HONOURABLE MEMBER COULD PLACE THE PUNCTUATION MARKS WHERE HE PLEASED”

“மதிப்பு மிக்க உறுப்பினார் தனக்குப் பிடித்த இடத்தில் கமாவைப் போட்டுக் கொள்ளட்டும்”

“கமாவை எந்த இடத்தில் வேண்டுமானாலும் போட்டுப் பாருங்கள்! அவர் மன்னிப்பே கேட்கவில்லை என்பது புரியும்”

பிரிட்டனுக்கு பாடம்

எழுபதுகளில் பிரிட்டனில் இனவேறுபாடு தனது கோர உருவத்தைக் காட்டத் தொடங்கிய நேரம். இனவெறி பிடித்த கன்சர்வேடிவ் கட்சியைச் சேர்ந்த அமைச்சரான வொய்ட்லா என்பவர் கறுப்பர்களை பிரிட்டனுக்குள் அனுமதிக்கக்கூடாது என கோரிக்கை வைத்தார்.

இதை ஆதரித்த அவரது ஆதரவாளர்கள் ஒரு சிறிய சுலோகனை எழுப்பினார்கள்.

“KEEP BRITAIN WHITE”

வி.எஸ். ஐநபால் எனும் பிரபல எழுத்தாளர் இந்த சுலோகனின் அர்த்தத்தையே ஒரு கமாமூலம் மாற்றிவிட்டார்.

KEEP BRITAIN, WHITE!

பிரிட்டனில் வெள்ளையரே இருக்க வேண்டும் என்பதை வெள்ளையரே, பிரிட்டனை இருக்க விடுங்கள்’ என்று கூறி இனவெறி மூண்டால் பிரிட்டன் சிதறிவிடும் என எச்சரித்தார் ஒரு கமா மூலம்.

சட்டமும் கமாவும்

கமாவின் இந்த சக்தி சட்ட வல்லுநர்களின் மூளையைக் கசக்கிவிடும்! சட்டங்களை வகுக்கும்போது கமாவை அதற்குரிய இடத்தில் போடவேண்டும்!

இல்லாவிடில் வழக்கறிஞர்கள் தங்களுக்குப் பிடித்த இடத்தில் கமாவைப்போட்டு சட்டத்தையே மாற்றிவிடுவார்கள். (சட்டத்தை ஏமாற்றி விடுவார்கள்). ஆகவே கமாவைப் போடுவதில் மிக்க கவனம் செலுத்துவார்கள்.

இதை வலியுறுத்தும் ஒரு சிறிய உரையாடல் சட்ட அமைச்சகத்தில் உள்ள இரண்டு சட்ட வல்லுநர்களிடையே நடந்தது. இதோ –

“என்ன செய்து கொண்டிருந்தாய் இன்று முழுவதும்” என்று ஒரு நிபுணர் இன்னொரு சட்ட நிபுணரைக் கேட்டார்.

முதலாமவர் கூறினார் - “முக்கியமான மசோதா ஒன்றில் ஒரு முக்கிய பகுதியில் ஒரு இடத்தில் கமா போடுவதிலேயே இன்று என் நேரம் கழிந்தது. அது இருக்கட்டும். நீ என்ன செய்து கொண்டிருந்தாய் இன்று முழுவதும்?”

ஆழ்ந்த யோசனைக்குப்பின் அடுத்தவர் கூறினார் - சட்ட மசோதா ஒன்றின் அமலாக்கப் பகுதி ஒன்றில் ஒரு கமாவை எடுத்துவிட்டேன், இன்று முழுவதும் வேலை செய்து!

“OH! I SPENT THE MORNING INSERTING A VITAL COMMA IN A VERY SIGNIFICANT CLAUSE OF A DRAFT BILL. AND YOU?

“I REMOVED A COMMA FROM A REGULATION WE ARE PROMULGATING”

கொக்கியில் தொங்கிய உயிர்

ஒரு உயிரையே காப்பாற்றி இருக்கிறது கமா!

தூக்கிலிடப்பட வேண்டிய கைதியை தாமதிக்காமல் தூக்கிலிட ஜெயிலருக்கு தந்தி வந்தது.

"HANG HIM NOT DELAY" என்பதே தந்தி வாசகம்.

ஜெயிலரர்படித்தார். 'NOT' என்ற வார்த்தைக்கு அருகில் ஒரு கமாவைப் போட்டு!

"HANG HIM NOT, DELAY" என்று (தூக்கிலிட வேண்டாம், தாமதிக்கவும்) கைதியின் உயிர் காப்பாற்றப்பட்டது.

இந்தச் சம்பவத்தையே இன்னொரு விதமாகவும் கூறுவதுண்டு.

தீவிரவாதியைத் தூக்கிலிடுமாறு சிறைத் தலைமை அதிகாரிக்கு தந்திமூலம் உத்தரவு வந்தது, அவன் அனுப்பிய கருணை மனுவை நிராகரித்து!

PARDON IMPOSSIBLE TO BE EXECUTED (மன்னிப்பு தர இயலாது. தூக்கலிடவும்) தந்தியில் கமா இல்லை. சிறை அதிகாரி 'PARDON'க்கு அருகில் கமாவைப் போட்டுக் கொண்டார்.

PARDON, IMPOSSIBLE TO BE EXECUTED மன்னித்தோம்! தூக்கிலிடுவது கூடாது!

இங்கே இருக்கிறார் கடவுள்

GOD IS NOWHERE என்று முழக்கினான் நாத்திகன் ஒருவன். அதைச் சுவரிலும் பெரிதாக எழுதினான். பெரியவர் ஒருவர் NOW – ற்குப் பக்கத்தில் கமா ஒன்றைப் போட்டார்.

GOD IS NOW, HERE

அர்த்தம் புரிய, நாத்திகன் வெட்கித் தலை குனிந்தான்.

PUNCTUATION குறி இல்லாமல் சில வாக்கியங்களில் பொருளையே கண்டுபிடிக்க முடியாது.

எடுத்துக்காட்டாக ஒன்று

THAT THAT IS IS THAT THAT IS NOT IS NOT IS THAT IT THAT IS IT

ஒன்றுமே புரியாத இந்த வார்த்தை யில் தகுந்த இடங்களில் குறிகளைப் போட்டால் பொருள் விளங்கும்.

THAT THAT IS, IS: THAT THAT IS NOT, IT NOT. IS THAT IT? THAT IS IT

எது எதுவோ அதுவேயாகும். எது எது இல்லையோ அது இல்லை. அப்படியா? ஆம்!

இறுதியாக PUNCTUATION பற்றிய ஜோக் ஒன்று.

Professor:- HOW WOULD YOU PUNCTUATE THIS SENTENCE? "MARY WENT SWIMMING AND LOST HER BATHING SUIT"

STUDENT:- "I WOULD MAKE A DASH AFTER MARY"

11. எப்படியும் மாற்றலாம்!

லஞ்சம் வாங்கும் அரசியல்வாதியைப் பற்றியும் சம்பவம் ஒன்று பரபரப்பாகக் கூறப்படுவது உண்டு.

அமைச்சரான அவர் தனது லஞ்சத் தொகையை வந்தவருடன் நிர்ணயித்தவுடன் அவர் முன்னாலேயே அவர் பைலை எடுத்து மனுவின் மேலே அதிகாரி எழுதிய குறிப்பிற்கு பக்கத்தில் 'APPROVED' என்று எழுதிக் கையெழுத்துப் போடுவாராம்.

பேசிய பணம் வந்துவிட்டால் பைல் உரிய இலாகாவிற்குப் போய்விடும். நம் கண்முன்னாலேயே தான் கையெழுத்துப் போட்டுவிட்டாரே, இனி பணம் தர வேண்டாம் என எண்ணும் குயுக்தியாளரை அவர் எச்சரிக்கை கொடுத்து அழைப்பாராம்.

'இதோ பார்' என்று APPROVED க்கு மேலே NOT என்று எழுதி அதை NOT APPROVED ஆக்கிவிடுவாராம்.

பதறியபடியே பேசிய தொகையை தந்தவுடன், 'NOT'க்கு அருகே ஒரு E.சேர்த்து விடுவாராம். இப்போது NOTE APPROVED ஆகிவிடும்! அதாவது அதிகாரி எழுதிய NOTE APPROVED எப்படிப்பட்ட மொழி ஆங்கிலம் பார்த்தீர்களா?

12. அடிப்படைச் சொற்கள் 850! மொத்தச் சொற்கள் எட்டு லட்சம்!

ஆங்கில மொழியில் எட்டு லட்சம் சொற்கள் உள்ளன என்பர்.

நாள்தோறும் இது பெருகிக்கொண்டே வேறு போகிறது.

இவை அனைத்தையும் தெரிந்துகொள்வது எளிதல்ல.

60,000 சொற்களுக்குமேல் தெரிந்தவர் யாரும் இல்லை என்பர்.

'அடிப்படை ஆங்கிலத்தில்' 850 சொற்களும், எழுதும் ஆங்கிலத்தில் 10,000 சொற்களும், பேசும் ஆங்கிலத்தில் 5000 சொற்களும் மட்டுமே ஆங்கில அறிவு மிக்கவருக்கும் தெரியும் என்பர்.

அடிப்படை ஆங்கிலம்

எல்லா சொற்களையும் தெரிந்துகொள்வது எல்லோருக்கும் சாத்தியமல்ல. தான் சொல்ல விரும்பும் கருத்தை எளிமையாகச் சொல்ல உதவக்கூடிய சொற்களை, அடிப்படைச் சொற்களை, தொகுக்க வேண்டும் என்று சார்லஸ் கே. ஒக்டன் (CHARLES K.

DGEN) என்பவருக்கு ஒரு எண்ணம் உதித்தது. இப்படிப்பட்ட அடிப்படை ஆங்கிலச் (BASIC ENGLISH) சொற்களை 850ஐ வைத்து அடிப்படை ஆங்கிலத்தை அவர் உருவாக்கினார். 1926 – 30 ஆண்டில் இது பிரபலம் அடையத் தொடங்கியது. இதில் பெயர்ச் சொற்கள் (NOUNS) 600–ம், உரிச்சொற்கள் (ADJECTIVES) 150–ம், ஏவல் வினைச் சொற்கள் (OPERATIVE WORDS) 100–ம் உள்ளன.

400 வினைச்சொற்களை அலசி ஆராய்ந்து, பின்னர்இந்த அடிப்படை ஆங்கிலத்தில் சேர்க்கப்பட்டுள்ள வினைச்சொற்கள் எவ்வளவு தெரியுமா?

வெறும் 18 தான்!

'MONO SYLLABLE' எனப்படும் சிறு சொற்கள் 60மூ அதாவது 514 சொற்கள் உள்ளன. இதில், ஆகவே உச்சரிப்பில் தவறும் எளிதில் ஏற்படாது.

ஒக்டன் ஆங்கிலத்தை எளிமையாக்கும் முயற்சியில் 1927–ல் THE ORTHOLOGICAL INSTITUTE என்னும் நிறுவனத்தை அமைத்தார். முப்பதுகளில் அடிப்படை ஆங்கிலம் வேகமாகப் பரவத் தொடங்கியது.

ஆரம்பித்த பத்து வருடத்திற்குள்ளாகவே 30 நாடுகளில் அடிப்படை ஆங்கிலத்தில் 100 புத்தகங்கள் வெளியிடப்பட்டன. இரண்டாம் உலகப் போரினால் ஏற்பட்ட காகிதத் தட்டுப்பாடு அடிப்படை ஆங்கில இயக்கத்தை வெகுவாகப் பாதித்தது.

வின்ஸ்டன் சார்ச்சில் இதற்கு உதவி அளிக்க பெரு முயற்சி செய்தார். அடிப்படை 1949–ல் பைபிள் கூட அடிப்படை ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டது என்றாலும்கூட பின்னால் இது பிரபலம் அடையாது மங்கி, ஒளி இழந்துவிட்டது.

ஆனால் ஆங்கிலம் அறிய விரும்புவோர் தவறாது, இந்த 850 சொற்களை முதலில் படித்தல் நல்லது.

850 அடிப்படைச் சொற்களில் நூறு OPERATIONS சொற்கள் கீழே தரப்பட்டுள்ளன.

OPERATIONS (100 சொற்கள்)

COME	GET	GIVE	GO
KEEP	LET	MAKEPUT	DO
SEEM	TAKE	BE	SEND
HAVE	SAY	SEE	ACROSS
MAY	WILL	ABOUT	AT
AFTER	AGAINST	AMONG	DOWN
BEFORE	BETWEEN	BY	ON
FROM	IN	OFF	UNDER
OVER	THROUGH	TO	FOR
UP	WITH	AS	THE
OF	TILL	THAN	NO
ALL	ANY	EVERY	
OTHER	SOME	SUCHTHAT	YOU
THIS	I	HE	BUT
WHO	AND	BECAUSE	WHILE
OR	IF	THOUGH	WHY
HOW	WHEN	WHERE	FORWARD
AGAIN	EVER	FAR	OUT

HERE	NEAR	NOW	TOGETHER
STILL	THEN	THERE	EVEN
WELL	ALMOST	ENOUGH	ONLY
LITTLE	MUCH	NOT	TOMORROW
QUITE	SO	VERY	EAST
YESTERDAY	NORTH	SOUTH	

13. மொழி பெயர்ப்புக் கலை

மொழி பெயர்ப்பது ஒரு பெரும் கலை, மூலத்தில் உள்ள வார்த்தைகளை அதன் உண்மையான அர்த்தத்தை வெளிப்படுத்தும் வண்ணம் மொழி பெயர்க்க வேண்டும். வார்த்தை பிரயோகம் மாறினாலோ, மொழி இயல்பு பிரயோகம் மாறினாலோ விபரிதமே விளைந்துவிடும்!

தமிழில் நினைத்து ஆங்கிலத்தில் கூறிய சில 'விபரித' வாக்கியங்களையும் அது விளைவிக்கும் வினோத அர்த்தங்களையும் பார்க்கலாம்.

மாணவர் ஒருவர் எழுதிய கடிதம்:

I am well and I hope you are also in the same well. நான் நலம். நீயும் நலமென நம்புகிறேன்.- இது நினைத்தது! நான் கிணற்றில் இருக்கிறேன். நீயும் அதே கிணற்றில் இருப்பாய் என நம்புகிறேன் - இது கூறியது.

குறித்த தேதிக்கு முன்னால் கட்டணத்தைச் செலுத்திவிட்டேன் என முதல்வரிடம் கூற நினைத்த மாணவன் கூறியது:

I have tied my school fees in front of the due date!

நான் என் மனைவியுடன் சினிமாவிற்கு வந்தபோது உன்னை நான் அங்கு பார்த்தேன். இதைச்சொல்ல நினைத்தவர் கூறியது.

I saw you with my wife in the cinema.

உன்னை என் மனைவியுடன் சினிமாவில் பார்த்தேன் என்ன விபரிதம்!

வகுப்பிற்கு லேட்டாக வந்த மாணவனைப் பேராசிரியர் கேட்டபோது வழியில் ஒரு நல்ல பாம்பு படமெடுத்ததாகக் கூறினான்.

A good snake was taking the picture.

சித்திர வகுப்பில் ஒருவர் பையன் பென்சில், ரப்பர் கொண்டு வராததற்கு கண்டித்து அவனை வெளியே அனுப்பியபோது கூறியதாவது –

Pencil no, paper no, rubber no, either you get out or me get out

முதல்வரிடம் பேசிக்கொண்டிருந்த பேராசிரியரை இடைவெட்டி ஒரு மாணவன் பேசியபோது எரிச்சல் அடைந்த பேராசிரியர் கூறியதாவது –

Here I tak, he talk, why you middle middle talk?

வகுப்பில் மாணவர் பேச, எரிச்சல் அடைந்த விரிவுரையாளர் கூறியதாவது

I talk or you talk When I talking centre to centre no talk!

“சுற்றுலாவில் அவரவர் செலவிற்கு அவரவர் பணம் கொண்டுவரவேண்டும்” என்று அறிவிக்க நினைத்தவர் கூறியதாவது –

“Their their expenditure for the tour with their their money”

விடுதியில் ரேடியோ கேட்பதாக ஒரு மாணவரைப் பற்றி மற்றவர் புகார் செய்தபோது, விரிவுரையாளர் கூறியதாவது:

"WHY IS HE ASKING THE RADIO, LET HIM COME HERE AND ASK MY LECTURE"

பழத்தை தின்றுவிட்டு தோலை வெளியே எறி என்று சொல்ல நினைத்தவர் கூறினார்.

முருகா, PLANTAINஐத் தின்றுவிட்டு LEATHER - ஐ வெளியேபோடு.

ஏன் என்னிடம் பொய் சொல்கிறாய்? எனக்கேட்க வந்த ஆசிரியர் மாணவியிடம் Why are you lying with me என்று கேட்டார்.

வழக்குச் சொற்கள், பிரயோகம், IDIOM, PHRASE முதலியன அறியாமல் பேசுவது ஆபத்து.

ரோம்நகார் எப்போது கட்டப்பட்டது என நண்பரிடம் கேட்டபோது, அவர், "ரோம் நகார் ஒரு நாள் இரவில் கட்டப்பட்டது!" என்றார். "இதை நீ எப்படி அறிந்தாய்" என்று கேட்டார் நண்பர். அவர் வகுப்பில் ஆங்கிலப் பேராசிரியர் " ROME IS NOT BUILT IN A DAY" என்று கூறினாரே என்றார்.

பிரபல ஆங்கில நாளிதழில் CLASSIFIED என்ற விளம்பரப் பகுதியில் வந்த விளம்பரம் இது:

"WANTED: COOKER. AN OLD LADY COOKER PREFERABLY TAMILIAN"

"RICE COOKER, MILK COOKER , . OLD LADY COOKER பற்றிக் கேள்விப்பட்டதில்லை அல்லவா? ஆக மொழி பெயர்த்ததன் விளைவே மேற்கண்ட தவறு.

HUNDRED RAIL SLEEPERS WERE WASHED என்பதை மொழி பெயர்த்த தவி பத்திரிகை ஆசிரியர், தண்டவாளத்தில் படுத்து உறங்கிய நூறு பேர் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டனஎன்று மொழி பெயர்த்து பத்திரிக்கையில் வெளியிட்டுவிட்டார்.

உண்மையில் நூறுபேர் சாகவேயில்லை. ரயில்வே தண்டவாளங்களை குறுக்கே இணைக்கும் கட்டைக்கு SLEEPER என்று பெயர். SLEEPER ஐ அப்படியே உறங்குபவர்கள் என மொழி பெயர்த்ததன் விளைவு, "நூறு பேர் செத்துவிட்டனர்!"

சூழ்நிலைக்கும் இடத்திற்கும் ஏற்ப பொருளை மனதில் வாங்கி, பின் அதை மொழி பெயர்க்க வேண்டும்.

"ஸ்ரீதேவியைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தீர்கள். அதைக் கேட்க எனக்குப் பிடிக்கவில்லை. ஆகவே நான் சென்றுவிட்டேன்!" என்று சொல்ல நினைத்தவர் கூறியது –

THEY WERE TALKING ABOUT SRIDEVI, I DID NOT LIKE TO HEAR, SO I JUST PASSED AWAY.

இங்கு PASSED AWAY என்பது இறந்துவிட்டவரையே குறிக்கும் "ஆகவே நான் இறந்துவிட்டேன் எனக் கூறினால் சிரிப்பார்கள். "SO I HAVE JUST PASSED BY" என்று சொல்ல வேண்டும்.

BLOODY என்பது திட்டுவதற்கு உபயோகிக்கும் சொல். குரூரமான அல்லது ரத்தவெறி பிடித்த என்ற அர்த்தம் தரும் இந்த சொல்லை AFTER ALL I AM YOUR BLOODY BROTHER (நான் உன் ரத்த சகோதரன்) என்று சொல்லக்கூடாது. I AM RELATED TO YOU BY BLOOD AS A BROTHER என்று கூற வேண்டும்.

துணியை வாங்கிக்கொண்டு கீழே போவோம் என்பதை சொல்ல நினைத்தவர் கூறியது:

LET US BUY CLOTH HERE, AND ROLL DOWN STAIRS

ஆங்கிலம் கற்றுக் கொண்டிருக்கும் ஆசிரியர் சூப்பர் மார்க்கெட்டிற்கு சென்று பேனா ஒன்றின் விலை கேட்டார்.

"OUT OF STOCK" என்றார் கடைக்காரார். அப்படி என்றால் என்ன அர்த்தம்? என்று கேட்டார் ஆங்கிலம் பயில்பவர். இப்போது இல்லை! என்று அர்த்தம் என்றார் கடைக்காரார்.

மறுநாள் ஆசிரியர் ஓய்வு அறைக்கு வந்த முதல்வர், ஆசிரியரிடம் ராமன் எங்கே? என்று கேட்டார். தன் ஆங்கில அறிவைக் காட்ட நல்ல சந்தர்ப்பம் கிடைத்தது எனறு நினைத்த ஆசிரியர் பளிச்சென்று OUT OF STOCK என்றார்.

மொழியை நன்கு கற்று வார்த்தைகளை உபயோகிக்க வேண்டும். கூற நினைப்பதை தக்கமுறையில், உரிய சொற்களால் கூறவேண்டும்.

14. குறுக்கெழுத்துப் புதிர்

“கத்தியைத் தீட்டாதே; உந்தன் புத்தியைத் தீட்டு” என்ற பாடலைக் கேட்டிருப்போம். புத்தியைத் தீட்டப் பயன்படுவதில் புதிரும் ஒன்று.

குறுக்கெழுத்துப் புதிர் என்று குறுக்கும் நெடுக்குமாக உள்ள கட்டங்களில் எழுத்துக்களை நிரப்பச் சொல்லி அதற்கான குறிப்பு அல்லது துப்பை (CLUE) அருகே கொடுத்து எத்தனை எழுத்துக்கள் உள்ள வார்த்தையைக் கண்டுபிடிக்கவேண்டும் என்றும் குறிப்பிடப்படும் குறுக்கெழுத்துப் புதிர் எல்லா ஆங்கிலப் பத்திரிகைகளிலும் உலகெங்கும் வெளியிடப்படுகின்றன.

செய்திப் பத்திரிகை வந்தவுடன் பேனாவும் கையுமாக இந்தப் பகுதிக்கு விரைபவர் பல்லாயிரக் கணக்கானோர்!

NEW YEAR WORLD என்ற பத்திரிகையில் ஞாயிறு இணைப்பு இதழில் 1913–ம் வருடம் டிசம்பர் மாதம் 21–ம் தேதி முதலாவது குறுக்கெழுத்துப்போட்டி வெளியானது.

வாசகார்களின் கவனத்தை இது வெகுவாகக் கவரவே இந்தப் பகுதி பிரபலமானது.

1,25,000 வார்த்தைகளைக் கொண்ட குறுக்கெழுத்துப் புதிர் ஒன்றை பிரான்சை சோர்ந்த ரின் கார்பென்டியர் (RENE CARPENTIER) என்பவர் அமைத்தார். 270 சதுர மீட்டார்ர்பரப்பளவு தேவையாம் இதை அமைப்பதற்கு!

7347 சதுரங்களில் 1628 குறிப்புகளுடன் 1969–ம் வருடம் 3 ஆப்பிரிக்க நாளிதழ்களில் முழுப்பக்கத்திற்கு குறுக்கெழுத்துப் புதிர் ஒன்று வெளியானது.

குறுக்கெழுத்துப் புதிரை தீர்ப்பதில் எத்தனை பேர்பைத்தியமாக இருக்கிறார்கள் என்பதை எடுத்துக்காட்ட ஒரு சிறு உதாரணம்:

லண்டனிலிருந்து வெளியாகும் 'TIMES OF LONDON' பத்திரிகைக்கு 1966 மே மாதம் பிஜி தீவிலிருந்து ஒரு பெண்மணி எழுதிய கடிதம் வந்தது. 4-4-1932 தேதியிட்ட இதழில் வெளிவந்த குறுக்கெழுத்துப் போட்டி எண் 6733–ஐ அப்போதுதான் வெற்றிகரமாக கண்டுபிடித்து விட்டதாகப் பெருமிதப்பட்டு எழுதி இருந்தார் அந்தப் பெண்மணி. விடாப்பிடியாக முயன்று 34 வருடங்களில் குறுக்கெழுத்துப் புதிரில் வெற்றியைப் பெற்றே விட்டாராம் அவர்!

மிகவும் ஆச்சரியப்பட வைக்கும் அதிசய ஒற்றுமை ஒன்று 1944–ம் ஆண்டு நடந்தது.

லண்டனிலிருந்து வெளியாகும் டெய்லி டெலிகிராப் (DAILY TELEGRAPH) பத்திரிகை நான்கு நாட்கள் குறுக்கெழுத்துப் போட்டியின் நான்கு சொற்களை வெளியிட்டது.

OMAHA

OVERLORD

MULBERRY

NEPTUNE

என்ற இந்த நான்கு சொற்களும் ராணுவ முக்கியத்துவம் வாய்ந்தவை.

நார்மண்டி படை இறக்கத்தின்போது (இரண்டாம் உலகமகா யுத்தத்தில்) உபயோகப்படுத்தப்பட இந்த நான்கு வார்த்தைகளும் நார்மண்டி நடவடிக்கைகளுக்கு முன்பாகவே குறுக்கெழுத்துச் சொற்களாக அந்தப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

OMAHA என்பது படையெடுக்கப்பட்ட கடற்படையில் ஒன்று!

OVERLORD என்பது அந்த ராணுவ நடவடிக்கைகளுக்கு இடப்பட்ட பெயர்!

MULBERRY என்பது செயற்கைத் துறைமுகம்!

NEPTUNE என்பது நேசநாட்டு கடற்படையினர்இந்தத் தரையிறக்க நடவடிக்கையில் ஈடுபடுவதற்காக வைத்த பெயர் (CODE NAME)

குறுக்கெழுத்துப் புதிர் பிரசுரிப்பதில் TRIBUNE பத்திரி கையில் ஒரு குளறுபடி நடந்துவிட்டது அதைப்பற்றி அது விவரித்த விதமே சிக்கல் நிறைந்த ஒருபுதிர்போல ஆகிவிட்டது.

"THE CROSSWORD PUZZLE WHICH SHOULD HAVE APPEARED IN TODAY'S TRIBUNE APPEARED INSTEAD IN YESTERDAY'S TOGETHER WITH THE ANSWER TO THE PUZZLE THAT SHOULS HAVE PRINTED YESTERDAY. THEREFORE, THE PUZZLE THAT SHOULD HAVE APPEARED YESTERDAY IS IN TODAY'S TRIBUNE TOGETHER WITH THE ANSWER TO WEDNESDAY'S TO THE ONE THAT SHOULD HAVE BEEN PRINTED YESTERDAY ARE PRINTED" என்ன தலை சுற்றவில்லை?

ஒரு வார்த்தையில் உள்ள எழுத்துக்களைக்கொண்டு மாறுபட்ட பொருளைத் தரும் வேறு வார்த்தையை உருவாக்குதல் அனக்ராம் (ANAGRAM) எனப்படும். உதாரணமாக GOD என்பது DOG ஆக மாறுவதைச் சொல்லலாம். MEAT என்ற சொல் TEAM ஆக மாறலாம் ANGLE என்ற சொல் GLEAN ஆக மாறலாம்.

POWER OF LONDON என்ற சொற்றொடார்ர்மிகப் பொருத்தமான வகையில் NOW ONE OLD FORT ஆக மாறலாம். இந்த அனக்ராம் குறுக்கெழுத்துப் புதிர் அமைப்பாளர்களுக்கு மிகவும் பிடிக்கும். உதாரணத்திற்கு SUNDAY TIMES - இல் வெளிவந்த குறுக்கெழுத்துப் புதிரில் ஒன்றைப் பார்க்கலாம். புதிர் இதுதான் "MAKE OUR WENCH GET IT INTO OPPOSITE SCALE!" (7-6) பிராக்கெட்டில் குறிப்பிட்டுள்ள ஏழு மற்றும் ஆறு என்பது

கண்டுபிடிக்கவேண்டிய வார்த்தையில் இருக்கும் எழுத்துக்களின் எண்ணிக்கை. 'MAKE' என்ற சொல்லையும் 'INTO' என்ற சொல்லையும் கவனித்தால் புதிர் போட்டவர் என்ன சொல்கிறார் என்பது புரியவரும். 'OUR WENCH GET IT' என்ற சொல் தொடரை 'THE OPPOSITE SCALE' என்ற அர்த்தம் தரும் சொல்லாக மாற்ற வேண்டும். அதாவது OUT WENCH GET IT - இன் அனக்ராமைக் கண்டுபிடிக்கவேண்டும். சற்று சிந்தித்தால் COUNTER WEIGHT என்ற சொல்லைக் கண்டுபிடித்து புதிர் கட்டங்களை நிரப்பிவிடலாம்.

குறுக்கெழுத்துப் புதிர்களைக் கண்டுபிடிக்கவென்Nறு பல அகராதிகள் உள்ளன. ஒருமுறை இதில் ஆர்வம் பிறந்துவிட்டால் போதும். சாப்பிடக்கூட மறந்து நேரும் போவது தெரியாமல் இதில் ஈடுபட ஆரம்பிப்போம். ஆங்கில மொழி அறிவும் பெருகும்!

15. ANAGRAM

அனாக்ராம் (ANAGRAM) என்றால் என்ன?

ஒரு சொல் அல்லது பெயரில் உள்ள எழுத்துக்களைக் கொண்டு மாறுபட்ட பொருள்தரும் வேறொரு சொல்லோ, சொல் தொடரோ உண்டாக்குதல் என்று இதற்குப் பெயர். எடுத்துக்காட்டாக TELEGRAPH என்ற வார்த்தையில் 9 எழுத்துக்கள் உள்ளன.

இதையே மாற்றி (GREAT HELP) என்ற இரு வார்த்தைகளாக அமைக்கலாம். TELEGRAPH மக்களுக்கு பேருதவி புரிகிறதல்லவா? இப்படி மூலச் செல்லும் புதியதாக உருவாக்கப்பட்ட சொல்லும் ஏதோ ஒரு விதத்தில் விசித்திரமான தொடார்பு கொண்டிருப்பது சுவையான விசயம்.

சில அனாக்ராம்களைப் பார்க்கலாம்.

1. SWEET HEART - (அன்பிற்கினியாள்)

2. MINISTER - (மந்திரி)

3. DEMOCRATIC - (ஜனநாயகம்)

4. PARTLIAMENT - (மக்கள் சபை)

5. ASTRONOMERS - (வானியல் நிபுணார்)

6. THERE WE SAT - (அங்கே நாம் அமார்ந்தோம்)

7. REMIT SIN - (பாவத்தை செலுத்துதல்)

8. COMIC TRADE - (தமாஷ் வியாபாரம்)

9. PARTIAL MEN - (அரைகுறை மனிதர்)

10. NO MORE STARS - (இனிமேலும் நட்சத்திரங்கள் இல்லை)

மேலே உள்ளவற்றில் 1 முதல் 5 வரை உள்ள சொற்கள் 6 முதல் 10 வரை உள்ள வார்த்தைகளாக அதே எழுத்துக்களை மாற்றி அமைப்பதன்மூலம் உருவாகி உள்ளன. இவை ஒன்றுக்கொன்று பொருத்தம் உள்ளவையாக இருப்பதைப் பார்த்து ரசிக்கலாம். இன்னும் சில எடுத்துக்காட்டுகள்.

1. A SHARP LIFTER – HAS TO PILFER

2. THE EYES – THEY SEE

3. A DECIMAL POINT – I'M A DOT IN PLACE

4. THE COUNTRY SIDE – NO CITY DUST HERE

5. THE DETECTIVES – DETECT THIEVES

6. THE NUDIST COLONY – NO UNTIDY CLOTHES

நேர் எதிர்மாறான பொருள்தரும் சில அனக்ராம்கள்:

1. MISFORTUNE – ITS MORE FUN

2. VIOLENCE – NICE LOVE

3. EVANGELISTS – EVIL'S AGENTS

இப்படி எழுத்துக்களை மாற்றியமைத்து புதுச்சொற்களை அமைப்பது ஐரோப்பாவில் ஒரு காலத்தில் பிரபலமான பொழுதுபோக்காக இருந்தது.

17–ம் நூற்றாண்டில் நடந்த உண்மைச் சம்பவம் இது.

பிரான்ஸில் ஆந்த்தேபோல்லே (ANDRE POSLE) என்ற குரல் போர்வழியிடம் அவனுடைய நண்பன் ஒருவன் ஒருநாள் சொன்னான்.

ஆந்த்ரே போஸ்லே! உன்னுடைய பெயரில் உள்ள எழுத்துக்களை மாற்றி அமைத்தால் PERDXUA LYONS என்று வருகிறதே இதற்குப் பொருள் லியோன்ஸில் சாவு. ஒருவேளை உனக்குச் சாவு லியோன்ஸில் தானா?

இயற்கையாகவே பயப்படும் மனப்போக்கை உடைய ஆந்த்ரே இந்த தமாஷ் பேச்சைக் கேட்டு கதிகலங்கிப் போனான். பிரான்சிலுள்ள லியோன்ஸ் என்ற நகரத்தில் பயங்கர குற்றவாளிகளுக்குத் தண்டனை அளிக்கும் விசேச நீதிமன்றம் இருந்தது.

அந்தக் கோர்ட்டில் தன்மீது வழக்குப் போடப்படலாம் என்று அவன் எண்ணினான். விடாது இந்த நினைவு அனைத் துன்புறுத்தத் தொடங்கியது.

தனக்குத் தண்டனை நிச்சயம் என்ற உள்ளுணார்வால் உந்தப்பட்ட அவன், தன்னை ஏதோ ஆட்டிப் படைப்பதாக உளறவானான். கடைசியில் ஒரு கொலை வழக்கில் சிக்கிய அவனுக்கு அதே லியோன்ஸ் நகர நீதிமன்றத்தில் தூக்குத் தண்டனை வழங்கப்பட்டது.

இதைப்போன்ற மாவீரன் நெப்போலியன் போன பார்ட்டின் பெயரிலேயே அவனது எதிர்காலம் பற்றிய எச்சரிக்கை இருந்ததாம்!

NAPOLEON BONAPARTE: என்பதன் அனக்ராம் NO APPEAR NOT ON ELBA!வேண்டாம், எல்பாவுக்கு வராதே என்பதாகும். இறுதியில் அவள் எல்பா தீவிற்கு அனுப்பப்பட்டு அங்கேயே இறந்தது வரலாறாகும்.

16. ஆங்கில எழுத்திலக்கணமும் உச்சரிப்பும் (ALPHABET)

ஆங்கில மொழியின் எழுத்துக்கள் இருப்பத்தாறையும் ALPHABET என்கிறோம். இந்த எழுத்துக்கள் தேவைக்கு அதிகமானதோடு, குறைபாடுடையதும்கூட என்பது அறிஞர்ர்கணிப்பு. ஆச்சரியப்பட வேண்டாம்! C, Q, X என்ற மூன்று எழுத்துகளுடைய ஒலிகளும் மற்ற எழுத்துக்களின் ஒலியால் குறிப்பிடப்படுகின்றன.

உதாரணமாக

C = K அல்லுத S

Q = k

X = KS அல்லது GS

என்ற எழுத்துக்களால் குறிப்பிடப்படுகின்றன. குறைபாடுடையது என்று ஏன் கூறப்படுகிறது என்றால், 34 ஒலிகளைக் குறிக்க ஆங்கிலத்தில் இருப்பது 26 எழுத்துக்கள் மட்டுமே (உண்மையில் அதிகமாக உள்ள C, Q, X–ஐ நீக்கினால் இருப்பது இருபத்திமூன்றே)

அதிகப்படியான 11 ஒலிகளைக் குறிக்க தனி எழுத்துக்கள் இல்லை. ஆனால், இரு எழுத்துக்கள் சேர்ந்த இணைப்பு எழுத்துக்களால் இந்த ஒலிகளைக் குறிப்பிடுகிறோம். உதாரணமாக NG, EE, AX, SH என்பனவற்றைக் குறிப்பிடலாம்.

DEFECTS IN SPELLING

ஆங்கிலச் சொற்களின் எழுத்துக் கூட்டலை அல்லது எழுத்திலக்கணத்தை SPELLING என்கிறோம்.

ஒரு முழுமையடைந்த மொழியின் SPELLING அல்லுத WRITING உச்சரிப்புக் கலையைச் சார்ந்ததாக இருக்கவேண்டும். அதாவது பேசும்போது எந்த ஒலிகள் வருகிறதோ அவற்றை எழுத்துக்கள் குறிப்பிட வேண்டும். இதற்கு தேவையானவை மூன்று –

1. பேசப்படும் ஒவ்வொரு ஒலிக்கும் ஒரு எழுத்து இருக்க வேண்டும்.

2. ஒவ்வொரு எழுத்தும் ஒரு ஒலிக்காக மட்டுமே இருத்தல் வேண்டும்.

3. ஒரு வார்த்தையில் ஒரு ஒலியும் நீக்கப்படக்கூடாது. அல்லது உச்சரிக்கப்படாத எழுத்துக்கள் கூடுதலாக இருக்கக்கூடாது.

இந்த விதிகளையும் ஆங்கிலம் மீறுகிறது. 34 ஒலிகளைக் குறிப்பிட்ட 23 எழுத்துக்கள் மட்டுமே இருப்பதால் 11 ஒலிகளுக்குச் சரியான எழுத்துக்கள் இல்லை.

A:-

உதாரணமாக 'A' என்ற எழுத்து என்பதில் FALL, FAR, FAT, WANT என்பதில் வருவதுபோல 'A'. VOWEL – களைக் குறிப்பிடுகிறது. FATE என்பதில் வருவதுபோல DIPTHONG -ஐக் குறிப்பிடுகிறது.

E:-

MELEE, PET, HERD, CLERK, PRETTY என்பதில் வருவதுபோல 'ஒ' ஐந்து ஒலிகளைக் குறிப்பிடுகிறது.

I:-

PET, FIR என்பதில் வருவதுபோல I இரண்டு ஒலிகளையும் BITE என்பதில் வருபதுபோல DIPTHONG ஐயும் குறிக்கிறது.

O:-

POKE, POT, FOR

என்பதில் வருவதுபோல 'O' - மூன்று ஒலிகளைக் குறிக்கிறது.

U:-

RUDE, PULL, FUN, FUR என்பதில் வருவதுபோல 4 ஒலிகளை 'U' குறிக்கிறது.

எழுத்துக்களை எழுதி, ஆனால் உச்சரிக்காமல் இருப்பதும் உண்டு. இவை உச்சரிப்பைப் பொறுத்தவரை உபயோகமற்றவையே.

DUCK, SCENE என்ற வார்த்தைகளில் வரும் 'C' உச்சரிப்பில் இல்லை.

GNAT, REIGN என்ற வார்த்தைகளில் வரும் 'G' உச்சரிப்பில் இல்லை.

KNEE, KNOW என்ற வார்த்தைகளில் வரும் 'K' உச்சரிப்பில் இல்லை.

விளையாட்டு வீரரின் ஸ்பெல்லிங்

உச்சரிப்பும் (PRONOUNCIATION) எழுத்திலக்கணமும் ஆங்கிலத்தில் முக்கியமானவை. ஒரு வேடிக்கையான சம்பவத்தைப் பார்ப்போம்.

ஒரு சிறந்த ஆட்டக்காரருக்கு ஒரு கல்லூரியில் இடம்கொடுக்க மறுத்துவிட்டார் கல்லூரி முதல்வர். கல்லூரி மாணவர்கள் அவரை முற்றுகையிட்டுக் கெஞ்சினார்கள். அவனில்லாவிட்டால் வெற்றிக் கோப்பைகள் வராது என்று மன்றாடினார்கள்.

ஒரு சிறு பரிட்சையில் அவன் தேறினால் ஏற்றுக்கொள்வதாக முதல்வர் சொல்லிவிட்டுப் பரிட்சை நடத்தினார். அதாவது COFFEE என்ற வார்த்தையில் உள்ள எழுத்துக்களைச் சரியாகச் சொல்லவேண்டும். ஒரு எழுத்து மட்டும் சரியாகச் சொன்னால்கூட போதும்!

'K' என்று ஆரம்பித்தான் ஆட்டக்காரன் கூடி இருந்தவர்கள் மண்டையில் அடித்துக்கொண்டார்கள். 'A' என்று தொடார்ந்தான் அவன். யார் முகத்திலும் ஈயாடவில்லை. பிறகு மெதுவாக 'U' என்றான். COFFEE - இல் KAU வந்ததாகிவிட்டது. அடுத்த எழுத்து? திடீரென்று ஆட்டக்காரனுக்கு பௌதீக ஞானம் வந்தது. PHYSICS என்ற வார்த்தையில் இருக்கும் 'PH' - இன் உச்சரிப்பு நினைவுக்கு வந்தது KAUPH.....

எல்லோரும் கண்ணை மூடிக்கொண்டு தியானம் செய்தார்கள். இன்னும் ஒரு எழுத்து இருக்கிறது. அந்த எழுத்தாவது COFFEE–ல் இருக்கும் ஒரு எழுத்தாக இருக்க வேண்டுமே என்று!

ஆட்டக்காரன் மூச்சைப் பிடித்துக்கொண்டு முடித்தான் KAUPHI!

17. பாலிண்ட்ரோம் (PALINDROME)

ஆங்கிலத்தில் PALINDROME என்று கூறப்படுவது என்ன என்பதைப் பார்ப்போம். ஒரு வார்த்தையோ, வரியோ, கவிதையோ அப்படியே திருப்பி மாற்றினாலும் முதலில் இருப்பதுபோலவே அமைந்தால் அது PALINDROME ஆகும்.

தமிழில் ஒரு உதாரணம் பார்க்கலாம்.

விகடகவி, தேருவருதே. எழுத்துக்களை, திருப்ப வாசித்தாலும் அதே வார்த்தைகளே வருகிறது.

MALAYALAM, RACE CAR ஆகியவற்றை திருப்பி வாசித்தாலும் அதே வார்த்தைகளே வருகின்றன. ஒரு வார்த்தையில் அமைந்துள்ள பல PALINDROME உள்ளன. அகராதியை எடுத்துப் புரட்டினால் பலவற்றைக் காணலாம்.

1. நடுப்பகல் (4 எழுத்து) NOON

2. பார்ப்பது (4 எழுத்து) PEEP

3. இரான் ஆட்சியாளர் (5 எழுத்து) IMAMI

4. செயல் (4 எழுத்து) DEED

5. கன்யாஸ்தீரி (3 எழுத்து) NUN

ஆங்கில வார்த்தையிலேயே மிகப்பெரிய PALINDROME என்று ஒன்பது எழுத்துக்களில் அமைந்த REDIVIDER என்ற வார்த்தையை

குறிப்பிடுகிறார்கள். ஆனால் உண்மையில் ஆக்ஸ்போர்டு ஆங்கில அகராதியில் உள்ள TATTARRATTAT என்ற 12 எழுத்து வார்த்தையே மிகப்பெரிய PALINDROME ஆகும்.

ஆங்கிலத்தில் “எல்பாவை என்று காண்பேனோ?” என்று நெப்போலியன் கூறியது பிரபலமான PALINDROME ஆகும்.

‘ABLE WAS I ERE I SAW ELBA’

ஏவாளைப் பார்த்தவுடன் ஆதம் தன்னை அறிமுகப்படுத்திக்கொண்ட சொற்றொடரும் ஒரு அழகிய PALINDROME

MADAM I’M ADAM

பாலிண்ட்ரோமைக் கண்டுபிடித்தது பற்றி ஒரு வரலாறே உண்டு. கிரேக்க கவிஞர்ர்சொடாடட் (SOTATED) கி.மு.மூன்றாம் நூற்றாண்டில் இதைக் கண்டுபிடித்தாராம். ஆகவே அவரைக் கௌரவிக்கும் விதமாக பாலிண்ட்ரோமை ‘SOTADICS’ என்று கூறுவதுண்டு.

ஜான் டெய்லரே (JOHN TAYLOR – 1580 – 1653) ஆங்கில மொழியிலான முதல் பாலிண்ட்ரோமை அமைத்ததாக நம்பப்படுகிறது. அவரது காலத்தில், வழங்கப்பட்ட ஸ்பெல்லிங் முறையில் அமைந்த அவரது பாலிண்ட்ரோமை மிகச்சிறந்த ஒன்று என அனைவரும் கருதினர். அது இதுதான்:

LEWD DID I LIVE & EVIL I DID DWEL அதையே இன்று மாற்றிக்கூறினால் வருவது. “EVIL I DID DWELL LEWD DID I LIVE”

இதையே நீளமாக்கினால் வருவது: “REVILED DID I LIVE SAID I, AS EVIL I DID DELIVER”

பாலிண்ட்ரோம் விரும்பிகள் நீளமான வாக்கியத்தை அமைக்க விடாது முயல்கிறார்கள். இதை அமைக்க சில சூத்திரங்களையும் கண்டுபிடித்துள்ளனர். எடுத்துக்காட்டாக சிறிய வாக்கியம் ஒன்றை முதலில் பார்ப்போம்.

DENNIS AND EDNA SINNED

இதையே பல பெயர்களை உள்ளே நுழைத்து நீளமாக்கிவிடலாம்.

DENNIS,NELL, EDNA, LEON, NOEL, AND ELLEN SINNED – சில நிபுணர்கள் இப்படியே 263 எழுத்துள்ள பாலிண்ட்ரோமை உருவாக்கியுள்ளனர். முயன்றால் இதை இன்னும் அதிக நீளமுள்ள வாக்கியமாக ஆக்கலாம்!

இன்னொரு 'ஃபார்முலா வாக்கியம்' உண்டு 'SIDES REVERSED IS' என்பதே இது.

இதுவே ஒரு பாலிண்ட்ரோம் தான்.

இதை நடுவிலே அமைத்து வாக்கியத்தை நீளமாக்கிக் கொண்டே போகலாம்.

EVIL BATS IN A CAVE REVERSED IS, EVA CAN IS TABLIVE"

சில அழகிய, பாலிண்ட்ரோம்களை பார்ப்போம்.

1. LIVE NOT ON EVIL
2. WAS IT A CAR OR A CAT I SAW
3. DO NOT STARTAT RATS TO NOD
4. PULL UP IF I PULL UP
5. SOME MEN INTERPRET NINE MEMOS
6. NO MISSES ORDERED ROSES, SIMON
7. NIAGARA, O ROAR AGAIN
8. YAWN A MORE ROMAN WAY
9. LEW, OTTO HAS A HOT TOWEL
10. NOT NEWYORK, ROY WENT ON

TONGUE TWISTER ஐப்போல உள்ள ஒரு பாலிண்ட்ரோமை பிரிட்டிஷ் பாலிண்ட்ரோமிஸ்ட் லீமொர்சார்(BRITISH PALINDROMIST LEIGH MERCER) அமைத்துள்ளார்.

"SUMS ARE NOT SET AS A TEST ON ERASMUS"

இறுதியாக ஒரு விசித்திரமான பாலிண்ட்ரோமை பார்ப்போம். இதில் வலமிருந்து இடமாகத் திருப்பி பார்த்தால் மட்டும் அதே வார்த்தைகள் கிடைப்பதில்லை. மேலிருந்து கீழாக, அதாவது தலைகீழாக திருப்பி படித்தாலும் அதே வார்த்தைகள் வரும்.

NO X IN NIXON

18. ஆங்கில உச்சரிப்பு!

ஆங்கில ஸ்பெல்லிங்கால் மிகவும் குழம்பிப்போன ஒரு அயல்நாட்டு மாணவன் தனது ஆங்கில இலக்கிய பேராசிரியரிடம் ஒரு கவிதையை சமர்ப்பித்தான். அது இது தான்:

THE WIND WAS ROUGH

AND COLD AND BLOUGH

SHE KEPT HER HANDS INSIDE HER MOUGH.

IT CHILLED HER THROUGH.

HER NOSE TURNED BLOUGH.

AND STILL THE SQUALL THE FASTER FLOUGH

AND YET ALTHOUGH.

THERE WAS NO SNOUGH.

THE WEATHER WAS A CRUEL FOUGH.

IT MADE HER COUGH.

(PLEASE DO NOT SCOUGH);

SHE COUGHED UNTIL HER HAT BLEW OUGH!

கவிதையில் மனம் போனபடி குழம்பிய ‘ஸ்பெல்லிங்’குகளை ரசிக்க முடிகிறதா?

உட்ஹவுஸின் நகைச்சுவை

ஆங்கில உச்சரிப்பு ஒரு கஷ்டமான விசயம்!

பி.ஜி. உட்ஹவுஸ் (P.G. WODEHOUSE) உலகின் பிரபலமான நகைச்சுவை எழுத்தாளர். அவர் தமது நாவல் ஒன்றில், ஒரு கதாபாத்திரத்தை உருவாக்கி இருக்கிறார். அந்த கதாபாத்திரம் தன்னைத்தானே அறிமுகப்படுத்திக் கொள்ளும் கட்டத்தில், “MY NAME IS P. SMITH. THE ‘P’ SILENT AS IN PNEUMONIA, PSYCHOLOGY ETC…..” என்று கூறுகிறது. (எனது பெயர் பி. ஸ்மித் பெயரின் முதலில் உள்ள ‘P’யை நியு+மோனியா, சைக்காலஜி ஆகிய வார்த்தைகளில் எப்படி முதலில் உள்ள ‘P’யை நீக்கி உச்சரிக்கிறீர்களோ அதுபோல நீக்கி ஸ்மித் என்று உச்சரிக்க வேண்டும்)

PNEUMONIAவை எழுத்து முறைப்படி உச்சரித்தால், பிநியு+மோனியா என்றும், PSYCHOLOGYயை பிஸிக்காலஜி என்றும் கூற வேண்டும். உச்சரிப்பில் சொல்லக் கூடாது என்றால், அனைத்து எழுத்துக்களையும் ஏன் எழுத வேண்டும், சொல்வதுபோலவே எழுதிவிட வேண்டியதுதானே! நல்ல கேள்வி:

சமஸ்கிருதம் முதலான மொழிகள் எழுத்துப்படி உச்சரிக்க கூடியவை (PHONETIC) ஒவ்வொரு எழுத்தாக சொல்லலாம். இதை SYLLABLE TIMED என்பார்கள். பிரெஞ்சு, ஜப்பானிய மொழி, ஹிந்தி, ஹங்கேரியன் இவற்றை உதாரணமாக சொல்லலாம். ஆங்கிலம் STRESS TIMED மொழி எனப்படும். அகராதியைப் பார்த்தால் எந்த இடத்தில் அழுத்தம் தர வேண்டுமோ அங்கே ‘|’ என்ற குறியைப் பார்க்கலாம்.

இந்தியாவில் பல மாநிலங்களிலும் 14 விதங்களில் ஆங்கிலத்தை உச்சரிக்கிறார்கள்.

‘O’ ஒலி

‘GO’ என்பதில் ஒலிக்கும் ‘O’ ஒலியை 17 விதமாகக் கூறலாம். இதோ அவை –

OW – KNOW

PUGH – DOUGH

EW – SEW

EAU – BEAU

OE – TOE

OT – DEPOT

OH – OH

OA – OAT

OWE – OEW

EO – YEOMAN

OU – SOUL

OG – COLOGNE

OL – YOLK

OO – BROOCH

OS – APROPS

OST – PROCOST

O – O !

“OUGH” – 7 விதம்

“OUGH” என்பதற்கு, 7 வெவ்வேறு விதமான உச்சரிப்பு இருக்கிறது ஆங்கிலத்தில்!

PLOUGH, THROUGH, ROUGH, THOUGHT, THROUGH, THOUGH, THOROUGH

மேலே உள்ள வார்த்தைகளை சொல்லிப் பாருங்கள். 7 வித உச்சரிப்பு தெரியவரும்.

EA – 3 விதம்

GREAT, BREAK, STREAK என்ற 3 வார்த்தைகளில் வரும் ‘EA’ என்பது ‘A’ என்பது போலவே உச்சரிக்கப்படுகிறது. இந்த 3 வார்த்தைகள் மட்டுமே ஆங்கிலத்தில், இப்படிப்பட்ட உச்சரிப்பு உடைய வார்த்தைகள்.

உலகமகாயுத்தமும் உச்சரிப்பும்

ஆங்கில உச்சரிப்பு இரண்டாம் உலக மகாயுத்தத்தில் ஒரு சரித்திரத்தையே படைத்துவிட்டது!

ஜப்பானியர்களுக்கு ‘N’ ‘L’ என உச்சரிக்க முடியாது என்பதை ஒரு அமெரிக்க அதிகாரி நன்கு உணர்ந்திருந்தார். HOTEL என்பதை ‘ஹோட்டரு’ என்றோ SLOGAN என்பதை சுரோகன் என்றோ தான் அவர்களால் உச்சரிக்க முடியும் ‘y’ – ‘u’ ஆகிவிடும். அவர்களின் இந்த உச்சரிப்புக் கோளாறை புரிந்துகொண்ட அந்த அதிகாரி, ‘y’ அதிகமாக வரும்படியான சங்கேத வார்த்தை ஒன்றை அமைத்தார்.

1942–ம் வருடம் ஜனவரி 20–ம் தேதி ‘LALLA PALOOSA’ என்ற சங்கேத வார்த்தையை உபயோகப்படுத்த உத்தரவிடப்பட்டது. இதைச் சரியாக சொல்லாதவரை, உச்சரிக்காதவரை சுடுமாறும் காவலருக்கு உத்தரவிடப்பட்டது. மிகக் கஷ்டப்பட்டு, சரியாக உச்சரிக்க முயன்ற

ஜப்பானியரின் உச்சரிப்பு 'ராரபரூஸா'. இந்த விதமாக அமெரிக்கர்கள் ஜப்பானிய ஊடுருவலை தகர்த்தனர். என்னே உச்சரிப்பின் மகிமை!

19. சொற்களின் மகிமை

TOAST, DOUBT, INDICT, HANDSOME, TWITCHED, FEIGN, RHYME, SUIT, KNOW, FOLK, MNEMONIC, HYMN, PEOPLE, PSYCHOLOGY, ISLAND, OFTEN, BUILD, ANSWER, PRAYER, RENDEZVOUS மேலே உள்ள 20 சொற்களில் ஒரு ஒற்றுமை உள்ளது. என்னவென்று தெரிகிறதா?

இவற்றில் ஒரு எழுத்து உச்சரிப்பின்றி, 'SILENT' ஆக வருகிறது. அகர வரிசைப்படி 'A' முதல் 'Z' வரை உச்சரிப்பின்றி இல்லாத எழுத்துக்களையுடைய வார்த்தைகளே இவை. இந்த சொற்களில், F, J, Q, R, U, X முதலான ஆறு எழுத்துக்கள் மட்டும் உச்சரிப்பின்றி, Silentஆகவரும் வார்த்தைகள் இல்லை. முடிந்தால், அப்படி ஏதேனும் இருந்தால் கண்டுபிடியுங்கள்!

கடினமான 20 வார்த்தைகள்

ஆங்கில மொழியிலேயே எந்தெந்த வார்த்தைகளை நன்கு படித்த மனிதர்கள்கூடத் தவறாக உச்சரிப்பர்?

இதற்கு சரியான விடையைக் காண 800 பல்கலைக்கழக பட்டம் பெற்ற பட்டதாரிகளுக்கு 60 வார்த்தைகள் தரப்பட்டன. அந்த 800 பேரில் ஆசிரியர்கள், பத்திரிகை ஆசிரியர்கள், செய்தியாளர்கள், புரூப் பார்ப்போர், விளம்பரத் தொழிலில் ஈடுபட்டோர் ஆகிய அனைவரும் அடங்குவர். இவர்களுள் ஒருவராவது நூற்றுக்கு நூறு மார்க் வாங்கவில்லை.

மொழியியலில் புலமை பெற்றவர்கள்கூட தப்பவிட்ட 20 வார்த்தைகள் கீழே தரப்பட்டுள்ளன. இந்த 20 வார்த்தைகளும் சராசரி மனிதர்கள் பலருக்கும் தரப்பட்டன.

ஆறு சரியாக இருந்தால், நீங்களும் சராசரி மனிதர்.

12 சரியாக இருந்தால் சரியாகச் சொல்லும் பத்துப்பேரில் ஒருவர்.

18 சரியாக இருந்தால் ஆங்கிலப் பேராசிரியருக்கு இணையானவர் நீங்கள்!

உச்சரிப்பிற்கான 20 வார்த்தைகள்

1. ASS – N – 9

2. BRAG – UH – DOE C – O

3. RARE – UFF – I

4. LICK – W UFF – I

5. PUN – VILL – YUN

6. VER MILL – YUN

7. IM – PO – STIR

8. MOCK – UH – SUN

9. VH – KOM – UH – DATE

10. KON – SEN – SUSS

11. ROE – KO – KU

12. TIT – IL – 8

13. SCDK – RUH – LI – JUS

14. MAY – UH – NAZE

15. IM – PRAY – SUR – RY – O

16. IN – OCK – U – LATE

17. SOO – PER – SEED

18. OBLY – GAH – TO

19. DES – SUG – KATE

20. RE – SUS – SUH – TATE

இந்த 20 வார்த்தைகளுக்கான சரியான SPELLING ஐ பார்ப்போம்.

1. ASININE

2. BRAGGADOCIO

3. RAREGY

4. LIQUEFY

5. PAUILION

6. VERMILLION

7. IMPOSTOR

8. MOCCASIN

9. ACCOMMODATE

10. CONSENSUS

11. ROCOCO

12. TITILLATE

13. SACRIEGIOUS

14. MAYONNAISE

15. IMPRESARIO

16. INOCULATE

17. SUPERSEDE

18. OBLIGATO

19. DESICCATE

20. RESUSCITATE

‘கோக்காகோலா’

பிரபலமான விளையாட்டு நிறுவனங்கள் தங்களது தயாரிப்புகளைப் பல நாடுகளிலும் விற்கும்போது, உச்சரிப்பைப் பற்றிக் கவலைப்படுகின்றன. ஆங்கில உச்சரிப்புகள் பிற மொழிகளில் கேவலமான ஆபாசமான அர்த்தம் தரும் வார்த்தையாக இருந்துவிடக்கூடாதே என்று எச்சரிக்கை உணர்வுடன் செயல்படுகின்றன.

இதை அலசி ஆராய்வதற்கெனகூட நிபுணர்களை நியமித்துப் பெயரையும், உச்சரிப்பையும் தேர்ந்தெடுக்கின்றன.

உதாரணம்: கோக்காகோலா நிறுவனம்

சீனாவில் கோக்காகோலா நிறுவனம் தனது பானத்தை அறிமுகப்படுத்தியபோது அங்குள்ள கடைகளுக்கு விளம்பர பலகைகளை ஆங்கிலத்தில் எழுதித் தந்து உதவியது. சீன வணிகர்கள் கோக்காகோலாவை சீன மொழியில், ‘கீ கோ கேலா’ என சீன மொழிக்குத் தக்கபடி மாற்றி எழுதினார்.

இதற்குச் சீன மொழியில் பொருள்: “BITE THE WAX TADPOLE.” கோக் நிறுவனம் 40,000 சீன வார்த்தைகளை ஆராய்ந்து கோகோகோலா என்ற சீன எழுத்துக்களை அறிமுகப்படுத்தியது. இதன் பொருள் ‘வாய் மகிழட்டும்’ (MAY THE MOUTH REJOICE)

குயுக்தி வார்த்தைகள்

குயுக்திக்காரர்கள் எந்த மொழியையும் விடுவதில்லை!

'குளறுபடி' என்ற தமிழ் வார்த்தையையும் CONFUSION என்ற ஆங்கில வார்த்தையையும் சேர்ந்து விளையாட்டாக மாற்றி கொளர்பிகேசன் என்று புதிய வார்த்தையை அமைத்து கொச்சையாகவும் வேடிக்கையாகவும் கூறுவதில் சிலருக்கு அலாதி இன்பம்! இது அங்கீகரிக்கப்படாத வார்த்தைதான் என்றாலும் இப்படிப் பேசுவதில் மகிழ்ச்சி அடைகிறார்கள் அவர்கள்.

தமிழில் மட்டுமில்லை இப்படி ஆங்கிலத்திலேயேகூட இப்படி 'வேடிக்கையாக' வார்த்தைகளாக மாற்றி அமைத்து மகிழ்வதுண்டு. பிரபல பத்திரிகையான ரிடர்ஸ் டைஜெஸ்ட் பிரசுரித்த சில வார்த்தைகள் இதோ –

careful speech: Elocaution (Elocution – பேச்சு Caution – முன் எச்சரிக்கை: இரண்டும் இணைந்து உருவானது Elocaution)

Jammed Roadways : trafficulties

Traffic போக்குவரத்து: Difficulties – கஷ்டம் இரண்டும் இணைந்து உருவானது இது.

இப்படி நூற்றுக்கணக்கான வார்த்தைகளை உருவாக்கி மகிழலாம்.

தமிழையும் ஆங்கிலத்தையும் இணைத்து நகைச்சுவை எழுப்புவது சிலருக்குக் கை வந்த கலை!

உதாரணத்திற்கு ஒன்று:

"சுலோ ஏன் இப்படி மெதுவாக நடக்கிறாள்?"

"அவள் பெயரே சுலோ (Slow) வாச்சே!"

இன்னொன்று:

டெலிபோன் அருகே நடக்கும் பேச்சு:-

Call மேல் Call போட்டுப் பேசாதே!

நான் நின்று கொண்டுதானே பேசுகிறேன்!

அதிகம் Call போடாதே என்பதைப் புரிந்து கொள்ளாததுபோல் “கால் போட்டுப் பேசவில்லை, நின்றுகொண்டு தான் பேசுகிறேன் என்று மாற்றிக் கூறுவது ஒரு சாமர்த்தியம் தானே!”

தமிழ் ரிடர்ஸ் டைஜஸ்டான மஞ்சரியின் வாசகார் சங்கீதப் பைத்தியமான ஆங்கிலப் புலமைபடைத்த ஒருவர் தயாரித்த பாடல் ஒன்றை அனுப்பிப் பிரகரித்தார்!

வாதாபி கணபதி பஜேhum

இன்னும் பாராமுகமே NO

காலைத் தூக்கி நின்றாடும் தெய்வmay

பாடேரா தெய்வமு மனsaw

பிபரே ராமரsum

ஆரம்ப way

நீ இரங்காயெnil

கிருஷ்ணா நீ பேகனே borrow

அலை பாயுthey

ஏறு மயிலேறி விளையாடு முகமொன்ray

எப்படி இருக்கிறது பட்டியல்?

20. DOUBLETS

Doublets என்றால் என்ன?

ஒரே நீளமுள்ள இரண்டு வார்த்தைகளை எடுத்துக்கொண்டு முதலாவது வார்த்தையை இரண்டாவதாக மாற்றவேண்டும். ஒவ்வொரு முறையும் ஏதேனும் ஒரு எழுத்தை மாற்றியவாறு அடுத்த வார்த்தையை குறைந்தபட்ச மாறுதலில் அமைக்க வேண்டும். இடம், மனிதர் பெயர்களை உபயோகிக்காமல் அகராதியில் உள்ள வார்த்தைகளை மட்டுமே அமைக்க வேண்டும்.

எடுத்துக்காட்டாக, 'Pig' என்ற வார்த்தையை 'Sty' என்ற வார்த்தையாக மாற்ற வேண்டும்.

PIG

WIG

WAG

WAY

SAY

STY

ஒவ்வொரு எழுத்தாக மாறி ஆறாவது மாறுதலில் 'PIG' 'STY' ஆகிவிட்டது.

'Alice in Wonderland' எழுதி உலகப் புகழ்பெற்ற லூயிஸ் கரோல், இந்தப் புத்தகத்தை எழுதிப் புகழ்பெற்றதைவிட 'Boublets' அமைப்பதில் உள்ள திறமைக்காகப் பெரிதும் மதிக்கப்பட்டவர்.

'Vanity Fair' என்ற பத்திரிக்கைகாக அவர் அமைத்த ஆறுகளைக் கீழே பார்ப்போம்.

பிராக்கட்டுகளில் உள்ள எண் எத்தனை மாறுதலில் லூயிஸ் கரோல் இரண்டாவது வார்த்தையை அமைத்தார் என்பதைக் குறிக்கிறது.

முயன்று பாருங்கள் நீங்களும்!

இதில் சரியான விடை என்று ஒன்று இல்லை. எப்படி வேண்டுமானாலும் விதிகளின்படி அடுத்த வார்த்தையை அமைக்க வேண்டும். அவ்வளவுதான்.

1. Prove 'GRASS' to be 'GREEN' (8)
2. Evolve 'MAN' from 'APE' (6)
3. Raise 'ONE' to 'TWO' (8)
4. Change 'Blue' to 'PINK' (9)
5. Turn 'WINTER' into 'SUMMER' (14)
6. Put 'ROUGE' On 'CHEEK' (16)

இதேபோல WORD ஐ DEED ஆக 5 மாறுதல்களில் அடைய முடியுமா?

மூக்கை கழுத்தாக மாற்றுதல் (7)

NOSE

POSE

POST

COST

COAT

CHAT

CHIT

CHIN

நீலத்தை இளஞ்சிவப்பாக மாற்றுதல் (9)

BLUE

GLUE

GLUT

GOUT

POUT

PORT

PART

PANT

PINT

PINK

குரங்கை மனிதனாக மாற்றுதல் (6)

APE

ARE

ERE

ERR

EAR

MAR

MAN

ஏழையைப் பணக்காரனாக மாற்றுதல் (6)

POOR

BOOR

BOOK

ROOK

ROCK

RICK

RICH

பேனாவை மையாக மாற்றுதல் (5)

PEN

TEN

TON

ION

INN

INK

லூயிஸ் கரோலின் இயற்பெயர் சார்லஸ் லட்விட்ஜ் டாட்ஸன் (CHARLES LUTWIDGE DODGSON) ஆகும். "வேலை வெட்டி" இல்லாதவனுக்கு இதைச் செய்யும்படி ஆலோசனை கூறுவார் அவர்! தனது புதிரை விளக்கி அவர் ஒருமுறை கடிதம் எழுதினார் இப்படி:-

"எனது அன்பான எடித், உனக்குத் தலைவலி இருந்தால், இந்த விளையாட்டு அதைத் துரத்திவிடும். தலைவலி இல்லை என்றாலோ அது வந்துவிடும்." இவ்வாறு நகைச்சுவை இழையோட தனது DOUBLET பற்றி எழுதி உள்ளார் லூயிஸ் கரோல்!

பல வருடங்களுக்குப் பிறகு நபகோவ் என்ற கவிஞர் இதை வார்த்தைக் கோலம் என்றார்.

இதை வார்த்தை ஏணி என்றும் கூறுவர். ஒரு எழுத்தை மாற்றி அடுத்த படிக்குச் செல்வதை 'Link' அல்லது 'Step' என்று கூறுவார்கள். குறைந்த படிகள் இருப்பதே சிறப்பாகும்!

21. OXYMORONS

Oxymorons என்றால் என்ன?

ஆங்கிலத்தில் சில சொற்றொடர்களில் ஒன்றையொன்று எதிர் அர்த்தம் தரும் இரு சொற்கள் இணைந்து இருக்கும். இப்படிப்பட்ட சொற்றொடர்களை Oxymoron என்பர். கிரேக்க வார்த்தையான இது, படுமுட்டாள்தனம் என்ற அர்த்தத்தைத் தரும்.

உதாரணத்திற்கு சில "Oxymoron" களைப் பார்க்கலாம்.

1. Advanced basic: Advanced என்றால் மிகவும் முன்னேறிய என்று அர்த்தம். Basic என்றாலோ மிகவும் அடிப்படையான என்று அர்த்தம். ஆனால் இவை இரண்டும் சேர்ந்து உருவான "Advanced basic" என்ற வார்த்தையை அடிக்கடி உபயோகிக்கிறோம். இதுதான் "Oxymoron"

2. Brief survey: “Survey” என்றாலே பெரிய அளவிலானது. அதில் “Brief” சேர்ந்து விசித்தரமாக Brief Survey ஆகிறது.

3. Civil War: “War” என்றாலே இரு எதிரி நாடுகளுக்கு இடையே நடப்பதுதான்! “Civil War” என்பது உள்நாட்டுப் போரைக் குறிக்க எழுந்தசொல்!

4. Crisis Management: “manage” என்றாலே நன்கு நிர்வாகம் செய்வதை மட்டுமே குறிக்கும். “Crisis” என்றாலோ அள்ளித் தெளித்த கோலத்தில் அவசரம் அவசரமாக முடிவை எடுக்கவேண்டிய நிலமையைக் குறிக்கும். இரண்டு வார்த்தைகளும் வினோதமாக இணைய உருவானது “Crisis Management”

5. Half empty: “Empty” என்றாலே முழுவதும் காலி என்று அர்த்தம். இதில் அரை காலியைக் குறிக்க “half empty” என்ற சொல்லை உபயோகிக்கிறோம். இது ஒரு ஆக்ஸிமொரான் தான்!

6. Honest Crook: “Honest” “ஆக இருப்பவன்” “Crook” ஆக இருக்க முடியுமா? ஆனால் இரு சொற்களும் இணைய உருவாகிய சொல் HONEST CROOK!

7. Perfect idiot: “Idiot” என்றாலே முட்டாள் (இடியட்) தான். இதில் “Perfect” வேறு உண்டா! என்ன? “Perfect idiot” என்று வடிகட்டிய முட்டாளைக் குறிக்கிறோம்.

8. Baby Grand: “Baby” எப்படி “Grand” ஆக இருக்க முடியும். பெரிய குழந்தையைச் சொல்ல நினைக்கிறோமோ!

9. Medium large: ஜவுளிக் கடைகளில் மீடியம் சைஸும் இருக்கிறது. லார்ஜ் சைஸும் இருக்கிறது. இரண்டுக்கும் இடையில் “medium large” என்று கேட்கிறோம். ஏன், “EXTRA LARGE” வேறு இருக்கிறதே!

10. Working vacation வேலையிலிருந்து விடுபடத்தானே ஓய்வு! இதில் வேலை பார்த்துக்கொண்டே ஓய்வு எதற்காக? Working vacation என்று அடிக்கடி குறிப்பிடுகிறோம் இல்லையா!

11. Alone together: “Alone” என்றாலே தனிமை, சோர்ந்து இருப்பது “together.” இரண்டும் இணைந்து உருவானது, “Alone together!”

12. Deafening silence: “Silence” என்றாலே நிசப்தம் தான்! இதில் “Deafening” எப்படி வர முடியும்? இரு சொற்களும் இணைந்து உருவாகிறது “Deafening silence”

13. Death Benefits: இறப்பது என்பது பேரிழப்பு. அதில் என்ன நன்மை இருக்க முடியும், இறந்தவனுக்கு? “Death Benefits” இறப்பதால் வாரிசுக்கு ஏற்படும் நன்மைகளை குறிக்கலாம்.

14. Fresh Frozen: “Frozen”என்றாலே இறந்து உறைநிலையில் இருப்பதையே குறிக்கும். அது எப்படி, “FRESH” ஆக இருக்கும்!

15. Friendly Argument: Argument என்றாலே ஒத்துப் போகாத இருவருக்கு இடையே நடக்கும் விவாதத்தையே சாதாரணமாகக் குறிக்கும். நண்பர்கள் எது பேசினாலும் அது விவாதம் இல்லையே. என்றாலும் நண்பர்களின் விவாதத்தைக் குறிக்கிறது “Friendly Argument”!

OXYMORONS – II

OXYMORONS களின் எண்ணிக்கை கணக்கிடலங்காது. மேலும் சில ஆக்ஸிமோரான்களைக் காண்போம்.

1. AMATXUR EXPERT: என்றாலே புதிதாகப் பழகுபவர். அவ்வளவாகத் தேர்ச்சி பெறாதவர் என்று அர்த்தம். அதில் நிபுணரர்என்பது சேர்ந்து AMATXUR EXPERT உருவாகி உள்ளது.

2. DOWN ESCALATOR: DOWN என்றால் கீழே என்பது பொருள். Escalator என்றால் மேலே என்பது பொருள். இரண்டும் இணைந்து Down escalator ஆனது.

3. LIGHT HEAVYWEIGHT: Light Weight போட்டிகள், Heavy Weight போட்டிகள் கேள்விப்பட்டிருக்கிறோம். இரண்டும் இணைந்து Light Heavy Weight என்ற புதிய வார்த்தையைத் தந்துள்ளது.

4. OLD NEWS: NEWS என்றாலே புதிதாக நடந்த செய்தி. பழையது எதுவும் செய்தியே அல்ல. என்றாலும் இரண்டு சொற்களும் சேர்ந்து Old news உருவாகி உள்ளது.

5. PLASTIC GLASSES: PLASTIC என்பது ஒரு தனிப் பொருள். கண்ணாடி இன்னொரு வகையானது. பிளாஸ்டிக்கும், கண்ணாடியும் இணைந்து பிளாஸ்டிக் கண்ணாடி உருவாகியுள்ளது.

6. PRETTY UGLY: Pretty என்றால் அழகிய என்று பொருள். ருபடல என்றால் அழகற்ற அவலட்சணம் என்பது பொருள். இரண்டும் இணைந்து Pretty Ugly உருவாகி உள்ளது.

7. PARTIALLY COMPLETED: Partial என்றால் பகுதி என்பது பொருள். COMPLETE என்றால் முழுமையான என்பது பொருள். பாதி முழுமையடைந்துள்ளது (பாதி முடிந்துள்ளது) என்பதைக் குறிக்க வந்த வார்த்தை Partially Completed.

8. SECOND BEST: Best என்றால் முதலாவதைக் குறிக்கும். Second என்றாலே இரண்டாவது தான்! Second Best ஒரு நல்ல ஆக்ஸிமொரான்!

9. ELEMENTARY CALCULUS: Calculus என்பது உயர் தரக் கணிதம். Elementary calculus என்பது ஆரம்ப நிலையைக் குறிக்கும். Elementary Calculus என்பது ஒரு ஆக்ஸிமொரான்.

10. STUDENT TEACHER மாணவன் கற்பவன். ஆசிரியர் கற்பிப்பவர். மாணவ ஆசிரியர் Student Teacher ஒரு Oxymoron

இப்படி Oxymoron களை சுவைபடத் தொகுத்து மகிழலாம். இவை ஆங்கிலத்தில் இன்னும் நிறைய உள்ளன.

22. பனக்ராம் (PANAGRAM)

'PANAGRAM' என்றால் என்ன?

ஆங்கில எழுத்துக்கள் இருப்பதாறையும் கொண்ட ஒரு வாக்கியமோ, பாராவோ பணக்ராம் எனப்படும்.

டைப் அடிப்பவர்கள் விரலின் வேகத்திற்காக 26 எழுத்துக்களை உடைய வாக்கியத்தை அடிப்பதுண்டு.

எடுத்துக்காட்டாக,

"A QUICK BROWN FOX JUMPS OVER THE LAZY DOG" என்ற வாக்கியத்தில் ஆங்கில எழுத்துக்கள் அனைத்தையும் காணலாம். 33 எழுத்துக்கள் உடைய வாக்கியம். இது

32 எழுத்துக்கள் உள்ள PANAGRAM இது:-

PACK MY BOX WITH FIVE DOZEN LIQOUR JUGS.

28 எழுத்துக்கள் உள்ள PANAGRAM இதோ:

WALTZ, NYMPH, FOR QUICK JIGS VES BUD. 26 எழுத்துக்கள் உள்ள பனக்ராமே கிடையாதா? இருக்கிறது. பெயர்களை வைத்து அமைக்கப்படும் இவை பனக்ராம் போல என்று கூறலாம். எடுத்துக்காட்டாக ஒன்று:

J. Q – SCHWARTZ FLUNG D.U.PICK MY BOX.

ஜேம்ஸ் அரசர்(KING JAMES) தொகுத்த பைபிளில் வரும் பனக்ராம் போல கருதப்படும் ஒரு பாரா:-

"AND, I EVEN I ARTAXERXES THE KING, DO MAKE A DECREE TO ALL THE TREASURES WHICH ARE BEYONG THE RIVER, THAT WHAT SO EVER EZRA THE PRIEST, THE SCRIBE OF THE LAW OF THE GOD OF HEAVEN,

SHALL REQUIRE OF YOU, IT BE DONE SPEEDILY" - EZRA 7:21

இதில் வராத எழுத்து 'J' ஒன்றுதான்.

23. TONGUE TWISTERS

நாக்குழற வைக்கும் சொற்றொடர்களை ஆங்கிலத்தில் Tongue twister என்பர். அவற்றில் சிலவற்றைக் கீழே பார்ப்போம். வேகமாக இந்தச் சொற்றொடர்களைச் சொல்லும் பொழுதுதான் Tongue twister என ஏன் இவை அழைக்கப்படுகின்றன என்பது புரியும். இவை எப்படி எங்கே தோன்றின என்று யாருக்கும் தெரியவில்லை. ஆனால் சுமார் 150 ஆண்டுகளுக்கு மேலாக கூறப்பட்டு வருகின்றன.

எடுத்துக்காட்டாக,

peter piper picked a piece of pickeled pepper என்ற இந்தத் தொடர்1819-ம் ஆண்டு வெளியிடப்பட்ட பிரிட்டிஷ் புத்தகத்தில் உள்ளது. புத்தகத்தின் பெயரே நாக்குழற வைக்கும்.

'peter piper's Practical Principles of plain and perfect pronounciation'

பிரபல பிரிட்டிஷ் சங்கீத விற்பன்னரான கென் பெர்க்கின் (ken perkin) என்பவர் அனைத்து tongue twiester களையும் தொகுத்து வெளியிட்டுள்ளார். அதில் மிக்க கஷ்டமானது இதுதான்:

The Sixth sick SheilK's sixth Sheep's sick

கீழே உள்ளவற்றை பலமுறை வேகமாகக்கூறிப் பாருங்கள்:-

A Block's back brake - block brake

A dozen double damsk dinnker hepkins

A fat thinghed freak fries thick fish.

A knapsack strap, strap, from a knapsack.

Are you copper bottoming ‘em my man?’ No, I am aluminiuming ‘em, mum’

A truly rural frugal ruler’s muel

A soft shot silk sash shop

Black bug’s blood

Diligence dismisseth despondency

Freedy thrush files through thick fog

She sells sea shells on the shore

இன்னும் சில கடினமான TONGUE TWIESTER களும் உண்டு. அவற்றில் சில –

Sue shoesmith sued the smith sun

Shimmering silver on the sands

Pep and pepper is pepping fun

Lisiten to the lilting lisping lullaby

Wordy words are not for the birds test, test the list in your fist

Josephine joyously joined jaunty Johnson in January’s jolly lingling jigs.

Malicious Melissa maliciously maligned

Millionaire Millicent in Miller’s Mansion

Where Miranda made marvelous Marsh

Mellows that Meltea in the mouth

"If peter piper picked a pick of pickled peppers, where is the peck of pickled peppers Peter piper picked?"

"How much wood could a wood chuck, if a woodchuck could chuckwood?"

இது போன்ற ஆயிரக்கணக்கான TONGUE TWISTER கள் அடங்கிய அகராதிகள் நிறைய உள்ளன.

24. பொருத்தமான பேச்சுக்கு ஒரு முடிவே இல்லை!

அவரவர் தொழிலுக்குத் தக்கபடி ஆச்சரியப்பட்டுக் கூவினால் எப்படி இருக்கும்? ஒரு கற்பனை:-

Geologist: What on Earth

Radio Announcer: For the love of mike?

Customer: Dear, Dear

Miner: Blast

Egoist: My, my

Astronomer: Good heavens!

Writer: My word!

Tailor: Darn it

பேசும் முறை

கீழ்க்கண்ட தொழிலில் இருப்பவர்களின் பேசும்முறை எப்படி இருக்கும்?

Statistician: point by point

Dancer: Step by step

எனது மனைவி

தங்களது மனைவியைப்பற்றி கூறுகிறார்கள் தங்கள் தொழில் பாஷையில்:

My Wife is a rare find says an archaeologist

My Wife is a class apart says a teacher

My Wife is one in a million says a statistician

My Wife is out of this world says an astronaut

வார்த்தை விளையாட்டுகளுக்கு ஒரு முடிவே இல்லை! ஒரு பாடகர்தையற்காரரர் ஆனார். Tune, suit என்ற இரு வார்த்தைகளையும் இணைத்து ஒரு வாக்கியம் பாருங்கள்.

Did you hear the musician turned tailor?

He changed his tune to suit the people.

இதேபோல சவப்பெட்டி தயாரிப்பவராக மாறிய எலெக்ட்ரிசியனைப் பற்றி 'LIGHT' 'GRAVE' என்ற இரு வார்த்தைகளை வைத்து அமைக்கப்பட்ட வாக்கியம் இது –

Did you hear the electrician turned coffin maker? He turned from light to grave matters!

Fine என்ற வார்த்தைக்கு அபராதம் மற்றும் நேர்த்தியான என்ற அர்த்தங்கள் உண்டு. அதை வைத்து எழுந்த ஜோக் இது:

Judge: "Tell me, Why did you park your car here?"

Motorist: Well, there was a sign for vehicles that said "Find for parking"

Address என்பதற்கு பேசுதல் என்றும் முகவரி என்றும் அர்த்தங்கள் உண்டு. அதை வைத்து எழுந்த ஜோக் ஒன்று:

"Speaker after speaker addressed the audience. Boredom replaced discomfort which in trun increased the boredom. Therefore when the master of ceremonies rose and stated "John Jones will now present his address" that is exactly what happened!

Jones rose, walked to the rosetrum and spoke:- "I live at 191, Staker Street, Drop in for a visit!" Jones returned to his seat. The audience applaused widely.

ஜோன்ஸ் பேசுவார் என்றபோது முகவரியைத் தருவதாக அவர் எடுத்துக் கொண்டதால் எழுந்த ஜோக் இது? ஆங்கில வார்த்தை பிரயோகத்தில் எப்பொழுதும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்!

2. சொற்கள் பிறந்தவிதம்

சொற்களின் மூலம் - I

சொற்களின் மூலத்தைக் (Origin) கண்டுபிடிப்பது ஒரு சிறந்த பயனுள்ள விசயம். சிலருக்கு இது பொழுதுபோக்கு; விளையாட்டு. ஆயிரக்கணக்கான சொற்களின் மூலத்தை ஆராய்ந்தால் பல விநோதங்களைக் காணலாம். அறிவும் பெருகும்.

எட்டு லட்சம் சொற்களைக் கொண்ட ஆங்கில மொழியில் வருடத்திற்கு 2000 வீதம் புறச்சொற்கள் கூடிக்கொண்டே போகின்றனவாம். எந்த மொழிச் சொல்லையும் ஆங்கிலம் விரட்டுவதில்லை; தனதென ஏற்றுக்கொள்கிறது. சொல்வளம் வாய்ந்த மொழி ஆங்கிலம் என்பது எதனால், காண்போமா?

ROBOT

இன்று நாம் அறிந்த வார்த்தை ரொபாட். இது வந்தவிதம் எப்படி?

1923–ம் வருடம் காரல்கேபக் (KARAL CAPEK) என்ற செக்கோஸ்லேவிய எழுத்தாளர் பிரசித்தி பெற்ற பயங்கரமான ஒரு நாடகத்தை எழுதினார்.R.U.R.. என்பது அதன் பெயர். ROSSUM'S UNIVERSAL ROBOTS என்பதன் சுருக்கமே R.U.R. ஆகும். செக் மொழியில் உள்ள ரொபாடா (வேலை) என்பதிலிருந்து பிறந்தது ROBOT இந்த நாவலில் வேலைக்காரர்கள் - அதாவது ரொபாட்ஸ் இயந்திர ராட்சர்கள். மனித உருவிலான இவர்கள் தங்கள் எஜமானருக்கு எதிராகத் திரும்பி விடுகின்றனர். இந்தக் கம்ப்யுட்டர் யுகத்தில் ரொபாட் பற்றிய காரலின் கற்பனை உண்மையாகிவிட்டது. இயந்திர மனிதனை ROBOT என்கிறோம் இப்போது.

MESMERISM

பிரடரிக் ஏ. மெஸ்மார்ர்(1734 – 1815) வியன்னாவிலும், பாரிஸிலும் ஒரு பெரிய பரபரப்பையே ஏற்படுத்தியவர். எதனால்? மிருகக் கவர்ச்சி (ANIMAL MAGNETISM) என்ற ஒரு சக்தி இருக்கிறது என்பதை அவர் நிரூபித்தார். வெகு சீக்கிரம் இந்த சக்தியை மெஸ்மெரிசம் என அழைக்க ஆரம்பித்தனார். இதை இன்று ஹிப்னாடிசம் (HYPNOTISM) என்கிறோம். என்றாலும் 'MESMERISM' என்ற சொல் இன்றும் வழக்கில் உள்ளது.

SANDWICH

ஹோட்டலுக்குப்போய் ஒரு சேண்ட்விச் வாங்கிச் சாப்பிடுவது இன்று இயல்பாகிவிட்ட ஒன்று. அந்த வார்த்தை எப்படி வந்தது தெரியுமா?

ஜான் மாண்டேகு (JOHN MONTACU) THE FOUTH EARL OF SANWICH சேண்ட்விச்சின் நான்காம் பிரபு ஒரு பிரபல சூதாடி. நேரம் போவது தெரியாமல் சூதாட்டம் ஆடுவார். சாப்பிட நேரம் இல்லாத அளவு ஒருநாள் அவருக்கு வேலை இருந்தது. ரோஸ்ட் செய்யப்பட்ட ரொட்டித் துண்டுகளுக்கு இடையே இறைச்சியை வைத்து சாப்பிட்டு திருப்திப்படி வேண்டியதாயிற்று அவருக்கு, அவர் பெயரால் வந்ததுதான் நாம் உண்ணும் சேண்ட்விச்!

BOYCOTT

சட்டசபையில் பாய்காட் - வெளிநடப்பு என்பது சர்வ சாதாரணமாகிவிட்டது. இன்று பாய்காட் என்ற சொல்லை அறியாதார் இல்லை. இது எப்படி தோன்றியது?

காப்டன் சார்லஸ் ஊ. பாய்காட் என்பவர் அயர்லாந்தில் வாழ்ந்த நில ஏஜண்ட். 1880–ல் நில குத்தகை தொகையை குறைக்க அவர் மறுத்ததைத் தொடர்ந்து அவரை அனைவரும் பகிஷ்கரித்தனர். அன்று தொடங்கி எந்த ஒரு தனி நபரையோ அல்லது ஒரு விதி அல்லது சட்டத்தையோ அல்லது எதை வேண்டுமானாலும் ஒட்டுமொத்தமாக புறக்கணிப்பதற்கு பாய்காட்டு செய்வது என்று சொல்ல ஆரம்பிக்கப்பட்டது.

A – 1

‘ஏ ஒன்’ என்றால் முதல் தரமானது, சிறந்தது என்ற அர்த்தத்தில் பயன்படுத்துகிறோம். இதில் எழுத்தும் உள்ளது (A) எண்ணும் உள்ளது (1). LLOYD’S REGISTER OF BRITISH AND FOREIGN SHIPPING என்ற நிறுவனம் கப்பல்களின் நிலை பற்றிய தர நிர்ணயம் செய்யும் நிறுவனமாகும்.

கப்பலின் தரம் பற்றிக்கூற ஒரு எழுத்தையும் அந்த சக்தியை நிர்ணயிக்க ஒரு எண்ணையும் அந்த நிறுவனம் பயன்படுத்தியது. கட்டுமானம் சிறப்பாகவும் சக்தி அபரிமிதமாகவும் உள்ள கப்பலை A 1 என்ற முத்திரையுடன் சான்று வழங்கியது. அன்றுமுதல் சிறப்பானது, முதல் தரமானது எதுவானாலும் அதை A 1 எனக் கூறுகிறோம்!

BETEL

தமிழ்நாட்டுப் பழக்கம், உண்ட பின்னர் வெற்றிலை போடுவது. வெற்றிலையில் சுண்ணாம்பைத் தடவி பாக்குடன் சேர்த்துச் சுவைப்பது தொன்றுதொட்டு இருந்துவரும் தமிழ் பழக்கம். வெற்றிலைக் கொடியைக் குறிக்கும் மலாய் மொழிச் சொல்லான ‘வெற்றிலை’யிலிருந்து உருவானதுதான் BETEL.

BIKNI

ஒரு பெண் அணியும் மிகக் குறைந்த இரண்டு முழ ஆடை பிகினி. நீச்சலடிக்கும்போது பொதுவாக உபயோகப்படுத்தப்படுவது இது. முதல் பிகினியை அணிந்த மாடல் பெண்மணிக்கு அவளது விசிறிகளிடமிருந்து 50000 கடிதங்கள் வந்ததாம்! பசிபிக் பிராந்தியத்தில் பிகினி என்ற இடத்தில் அணு பரிசோதனை நடத்தப்பட்ட நான்கு நாட்களுக்குப்பிறகு அறிமுகப்படுத்தப்பட்ட ஆடைக்கு இப்பெயரைச் சூட்டினார், இதைத் தயாரித்து லூயீஸ் ரியர்டு என்பவர். உண்மையிலேயே இரண்டும் பரபரப்பை ஏற்படுத்திவிட்டன!

CALCULATION

பழைய ரோமானிய நாட்டில் வண்களை ஓட்டும் வண்டியோட்டிகள் கட்டணத்தை நிர்ணயம் செய்ய ஒவ்வொரு முறை சக்கரம் சுழலும்போதும் ஒரு கூழாங்கல்லை கணக்குக்காகப் போடுவது வழக்கம்.

லத்தீன் சொல்லான சிறிய கல்லைக் குறிக்கும் சொல் ஊயுடுஒ என்பதாகும். இதன் அடிப்படையில், இப்படிக் கட்டணத்தை நிர்ணயிக்கும்முறை 'CALCULATION' ஆனது, ஆங்கிலத்தில் CALCULATION என்பது கணிதத்தில் கூட்ட, கழிக்க, பெருக்க, வகுக்க உபயோகப்படுத்தப் படுவதோடு மருத்துவத்துறையில் கற்களை உருவாக்கும் விதத்தைக் குறிக்கவும் இச்சொல் பயன்படுத்தப்படுகிறது.

CAMBRIDGE

இங்கிலாந்தின் பிரசித்தி பெற்ற பல்கலைக்கழகம் கேம்பிரிட்ஜ். 'கேம்' நதிமீது உள்ள பாலம் என்று குறிக்கும் சொல், அதைச் சார்ந்த நகருக்கும் வழக்கப்பட்டது. வெல்ஷ் மொழியின் மூலத்திலிருந்து வரும் சொல்லான கேம் என்பது வளைந்தது என்ற பொருளைத் தரும். வளைந்த நதியைக் குறிக்க வந்த 'கேம்' இன்று சிறந்த பல்கலைநகரைக் குறிப்பிடுவதாக ஆகிவிட்டது.

DACOIT

கொள்ளைக்காரனைக் குறிப்பிடும் இச்சொல், கொள்ளை அடிப்பதோடு மற்றவரை இம்சைப்படுத்தித் தாக்கும் கூட்டத்தைப் பொதுவாகக் குறிப்பதாகும். 'Dacoit' என்ற இந்தச் சொல்லுக்கும் இதே பொருள்தான்!

D – DAY

பொருள் தெரியாமல் அல்லது இதன் மூலம் தெரியாமல் பலரும் பயன்படுத்தி வரும் சொல் D - DAYஇ முதலில் உள்ள 'D' என்பது DAY என்பதைக் குறிப்பதாகும். அதாவது DAY DAY அல்லது THE

DAY என்பதே இந்தச் சொல்லின் பொருள் ஆகும்! முதல் உலகப்போரில் இந்தச்சொல் முதன்முதலாகப் பயன்படுத்தப்பட்டது. ஆனால், இரண்டாம் உலகப்போரில் நேசநாட்டுப் படையினர் மேற்கு ஐரோப்பாவின்மீது படையெடுத்த நாளான 1944–ம் வருடம் ஜூன் மாதம் ஆறாம் தேதியையே D – DAY என்று குறிப்பிடுகிறார்கள். இன்று D – DAY என்பது இறுதியாகச் செயல்படும் முடிவான நாளைக் குறிக்க வழங்கப்படுகிறது.

DELUXE

டீலக்ஸ் பஸ், டீலக்ஸ் ஹோட்டல், டீலக்ஸ் தியேட்டர் இன்று எதிலும் டீலக்ஸ், எங்கும் டீலக்ஸ். டீலக்ஸ் வந்தவிதம் எப்படி? செழிப்பைக் குறிக்கும் பிரெஞ்சு வார்த்தையான DELUXE சொகுசையும், செல்வ வளத்தையும் குறிக்கும். அதை வழங்கும் ஹோட்டல், கார், பஸ் இவற்றோடு டீலக்ஸ் இணைக்கப்பட்டு விட்டது இன்று!

DIOMOND

வைரத்தை – டயமண்டை அறியாதவர் யார்? ஆனால், ADAMANT க்கும் DIAMOND க்கும் சம்பந்தம் உண்டு என்பதைப் பலரும் அறியமாட்டார்கள்! ‘ADAMANT’ என்பது பிடிவாதத்தையும் விட்டுக்கொடுக்காத மனப்பான்மையையும் குறிக்கும். வடமொழி மூலமான அடைமனி (வெற்றி கொள்ள முடியாத அல்லது வழிக்கு வராத என்ற) சொல்லின் பொருளே ADAMANT ஆகும். வைரம் உண்மையாகவே வெல்ல முடியாத கல்! அதை அறுக்க எதனாலும் முடியாது. அதாலேயே வைரத்தை வைரத்தாலேயே தான் அறுக்கவேண்டும். ADAMANT என்ற சொல்லை ஒரு காலத்தில் இதைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டது. பிற்பாடு காலப்போக்கில் சிதைந்து மாறி DIAMOND ஆகிவிட்டது!

சொற்களின் மூலம் II

ஆங்கிலச் சொற்களின் மூலத்தை அறியும்போது ஆங்கிலமொழி வரலாற்றையும் சிறிது தெரிந்துகொள்ள வேண்டும்.

ஆங்கிலமொழி தோன்றி சுமார் ஐநூறு வருடங்களே ஆகிறது என்றாலும், பல ஐரோப்பிய மொழிகளைப்போல சுமார் 5000 ஆண்டு பழமைவாய்ந்த மொழியாகக் கருதவும் இடம்உண்டு, ஏதாவது பேச்சு வழக்கு மொழியாக நாடோடிக் கூட்டத்தினாறடையே இது தோன்றிய காலத்தையும் கணக்கில் எடுத்துக்கொண்டால்!

சுமார் கி.பி. 444 ஆம் ஆண்டு வாக்கில் ஆங்கிலோ – சாக்ஸன் (ANGLO SAXON) வெற்றிக்குப்பின்னர் பிரிட்டனுக்கு வந்தது ஆங்கிலம். இதிலிருந்து கி.பி. 1100–ம் ஆண்டுவரை உள்ள ஆங்கிலத்தை OLD ENGLISH என்று கூறுகிறோம். கி.பி. 1100 லிருந்து 1500 வரை வளர்ந்த ஆங்கிலத்தை MIDDLE ENGLISH என்கிறோம். கி.பி. 1500 –க்கு மேல் இன்றுவரை உள்ள ஆங்கிலத்தை MODERN ENGLISH என்கிறோம்.

வளப்பம் வாய்ந்த மொழியாகத் திகழும் ஆங்கிலம் தனது சொற்களைப் பல வழிகளின் மூலமாகப் பெருக்கிக் கொண்டது. பல மொழிகளிலிருந்து சொற்களை வாங்கி தனதாக்கிக் கொண்டதில் ஆங்கிலத்திற்கு ஈடு இணை இல்லை. இந்தக் "கடன் வாங்கிச் சொற்கள்" பெரும் பகுதியாக இருப்பது ஒரு பக்கம். இன்னொரு பக்கம் பலவழிகள் மூலமாக DERINING, COMPOUNDING, BLENDING, TELESCOPING, SHORTENING, ACRONYMS ஆகியவற்றின் மூலமாகப் பிறந்த சொற்கள் ஏராளம்.

DERINING

பழைய சொற்களின் முன்னாலோ, பின்னாலோ அல்லது இரு பக்கமுமோ புதிய எழுத்துக்களைச் சேசேர்த்துபுதுச்சொல்லை உருவாக்குவது DERINING. உதாரணமாக லத்தீன் மூலமான SCRIDERE என்பதிலிருந்து TO WRITE SCRIBE என்றசொல்

தோன்றியது. இதிலிருந்து SCRIPT, CONSERIPT, CONSERIPTION, DESCRIPTION, INSCRIPTION, PRESCRIPTION, PROSCRIOPTION, SUBSCRIOPTION, SUPERSCRIPTION தோன்றின.

COMPOUNDING

தெரிந்த சொற்கள் இரண்டை இணைத்து புதுச்சொல்லை உருவாக்குவது ஒருவிதம். FEEDBACK, CLEAN UP, PAPER BACK, FALLOUT, HEART BEAT இப்படி கூறிக்கொண்டே போகலாம். ஹைபன் - மூலமாக இணைக்கப்பட்ட சொற்களும் இப்படிப்பட்டவையே. SON – IN – LAW. COMMANDER – IN CHIEF, MATTER – OF - FACT என்பவை எடுத்துக்காட்டுகளாகும். இரண்டு தனிச்சொற்களாக எழுதப்பட்டு சேர்ந்து படித்தால் மட்டுமே பொருள் தரும் சொற்களும் உண்டு. AIR CONDITONING, BEST SELLER, CHAIR CAR என்பதை எடுத்துக்காட்டுகளாகும். இன்னும் ஒருபடி மேலேபோய் இதுபற்றி ஆராய்ச்சி செய்ய விரும்புவோருக்கு சுவையான விசயங்கள் கிடைக்கும்! எடுத்துக்காட்டாக,

ADVERB சொல்லும் VERB சொல்லும் இணைவது OUT CAST என்ற சொல்லில்! VERB சொல்லும் ADVERB சொல்லும் இணைவது SHOP OVER என்ற சொல்லில்!

NOUN–ம் NOUN ம் இணைவது SPACE CRAFT என்ற சொல்லில்!

ADJECTIVE சொல்லும் NOUN சொல்லும் இணைவது BLUE BEARD என்ற சொல்லில்!

VERB சொல்லும் NOUN சொல்லும் இணைவது BUBBLE GUM என்ற சொல்லில்!

BLENDING

இரண்டு சொற்கள் இணையும்போது முழுவதுமாக இல்லாமல், கலந்து புதிய சொல் பிறப்பதுண்டு. MOTORIST + HOTEL இணைந்து MOTEL ஆனது. SMOKE + FOG இணைந்து SMOG ஆனது ELECTRO + EXECUTE இணைந்து ELECTROCUTE ஆனது.

TELESCOPING

இரண்டு சொற்கள் இணைந்து இடையே ஒரு SYLLABLEஐ நழுவவிட்டு புதுச்சொல் உருவாவதுண்டு.

HOLY + DAY = HOLIDAY

PETIT + COAT = PETTICOAT

GOD + SPELL = GOSPEL

SHORTENING

பெரிய வார்த்தைகள் சுருக்கப்பட்டு தனி வார்த்தையாக ஆகிவிடுவதுண்டு!

OMNI BUS சுருங்கி BUS ஆகவும்

FANATIC சுருங்கி FAN ஆகவும்

POPULAR சுருங்கி POP ஆகவும்

BICYCLE சுருங்கி CYCLE ஆகவும்

STENOGRAPHER சுருங்கி STENO ஆகவும் மாறியது இப்படித்தான்.

ACRONYMS

ஒரு சொற்றொடரில் உள்ள சொற்களின் முதல் எழுத்துக்களையெல்லாம் சேர்த்துஉருவாகும் புதுச்சொல் ACRONYM எனப்படுகிறது.

RADAR – RADIO DETECTING AND RANGING

SONAR – SOUND NAVICATION AND RANGING

SCUBA – SELF CONTAINED UNDERWATER BREATHING APPARATUS

FIFTH COLUMN

என்ன, ஐந்தாம்படை வேலைசெய்துவிட்டானா என்று, கூட இருந்தே காலை வாரிவிடும் பழக்கத்தைக் குறிக்க உபயோகப்படுத்தப்படும் சொல் FIFTH COLUMN. இது எப்படித் தோன்றியது.

போர்க்களத்தில் நால்வகைப் படைகளோடு நேருக்கு நேர் மோதும் மன்னர்கள் எதிர்படையில் உளவுசொல்லி, நமக்கு உதவ ஆட்களை வைத்திருப்பர். இதையே FIFTH COLUMN என்பர்.

ஸ்பானிஷ் நாட்டு படைத்தலைவரான (1936) ஜெனரல் மோலா, மாட்ரிட் நகரைத் தனது நால்வகைப் படைகளோடு முற்றுகை இட்ட சமயம் தனக்கு ஐந்தாம் படை ஒன்று இருப்பதாகவும் பெருமை அடித்துக் கொண்டார்! அன்றிலிருந்து வழக்குக்கு வந்தது இந்தச்சொல்.

GAZATTE

கெஜட்டை அறியாதவர் யார்? அரசாங்க கெஜட்டில் அதிகாரப்பூர்வ அறிவிப்பு வந்தாலேயே அது செல்லுபடியாகும்!

GAZZETA என்ற சிறிய இத்தாலிய நாணயத்திலிருந்து பிறந்தது இந்தச் சொல்!

16–ம் நூற்றாண்டில் இத்தாலியில் வெளியான முதல் செய்திப் பத்திரிகையின் விலையாக அளிக்கப்பட்டது. இந்தச் சிறிய கெஜட்டார் நாணயம். நாளடைவில் இந்த நாணயத்தின் பெயரே பத்திரிகைக்கு ஆனது. இன்று எந்தப் பத்திரிகையையும் கெஜட் எனக் கூறலாம். எனினும் அரசாங்கம் வெளியிடும் பேப்பரையே கெஜட் என்று கூறுகிறோம்!

HAT TRICK

கிரிக்கெட் அபிமானிகள் அறிந்த வார்ததை HAT TRICK.

மூன்று விக்கெட்டுகளை அடுத்தடுத்த பந்துகளினால் வீழ்த்தினால் அதை HAT TRICK சாதனை செய்ததாகக் கூறுகிறோம். கிரிக்கெட் அல்லாத இதர துறைகளிலும் அடுத்தடுத்து மூன்றுமுறை சாதனைகளை நிகழ்த்தியவருக்கும்கூட பொதுவாக இந்தச் சொல் பயன்படுத்துமளவு வந்துவிட்டது.

முந்தைய நாட்களில் கிரிக்கெட் விளையாடுவோர் தலையில் தொப்பி அணிவது வழக்கம். மூன்று விக்கெட்டுகளை அடுத்தடுத்து வீழ்த்திய சாதனையாளருக்கு கிரிக்கெட் சங்கத்தின் செலவில் ஒரு புதிய தொப்பியை இலவசமாகப் பெறும் உரிமை உண்டு. இதுவே நாளடைவில் HAT TRICK ஆனது.

JEEP

ஜீப் வாகனத்தைக் குறிக்கும் சொல்லான JEEP பிறந்த விதம் சுவையானது.

இரண்டாவது உலக மகாயுத்தத்தின்போது அமெரிக்க அரசாங்கம் எல்லாவற்றிற்கும் பயன்படும் வகையிலான GENERAL PURPOSE வாகனம் ஒன்றைத் தயாரிக்க உத்தரவிட்டது. இந்தப் புதிய தயாரிப்பு G.P. (ஜீப்பி) என அழைக்கப்பட்டது. General, Purpose என்ற இரண்டு வார்த்தைகளின் முதல் எழுத்துக்கள் இணைந்து வழங்கப்பட்ட GP நாளடைவில் JEEP ஆனது போர் முடிந்தபிறகு இதேபோன்ற வாகனங்களின் வர்த்தகப் பெயராக ஆகிவிட்டது.

KARATE

கராத்தே கலை பயின்றோர் வெறுங்கையால் செங்கல்லை உடைப்பதைப் பார்க்கலாம். ஜப்பானியச் சொல்லான கராத்தே அப்படியே ஆங்கிலத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டுவிட்டது. கராத்தே என்றால் ஜப்பானிய மொழியில் வெறுங்கை என்று அர்த்தம். (‘கரா என்றால் வெறும்’, தே என்றல் ‘கை’)

LATIN

பழைய மொழியான லத்தீன் மொழியிலிருந்தே ஆங்கிலத்தில் உள்ள சொற்களில் அறுபது சதவிகிதம் வந்துள்ளது. இத்தாலிய நாட்டில் டைபர் (TIBUR) நதிக்கரை மீது அமைந்த ஊரின் பெயர் LATIUM ஆகும்.

LASER

லேசர் என்பது ஒரு கருவி. புல வண்ண ஒளியை அதிக சக்தியுள்ள ஒரே வண்ண ஒளிக்கற்றையாக, சக்தியாக மாற்றுவது லேசர். LIGHT AMPLIFICATION BY STIMULATED EMISSION OF RADIATION என்ற வார்த்தைகளில் உள்ள முதல் எழுத்துக்களான L.A.S.E.R. என்பதைச் சேர்த்துஉருவான வார்த்தை LASER ஆகும்.

MANGO

தமிழர்கள் பெருமைப்பட வேண்டிய விசயம் MANGO என்ற ஆங்கில வார்த்தை தமிழிலிருந்து எடுக்கப்பட்டது என்பதாகும். மாங்காயே ஆயுNபுமு ஆனது. கூலி, பறையா, கயிறு (COOLIE, PARIAH, COIR) ஆகிய சொற்கள்கூட தமிழிலிருந்து ஆங்கிலத்திற்குப் போயுள்ளன.

MARATHON

மாரத்தான் ஓட்டப்பந்தயத்தை அனைவரும் கேள்விப்பட்டிருப்போம்.

கிறிஸ்துவுக்குமுன் 490–ம் ஆண்டு பொர்ஸியர்களுக்கும், ஏதன்ஸ் வாசிகளுக்கும் மாரதான் என்ற இடத்தில் நடந்த யுத்தத்தில் பொர்ஸியர்களை ஏதன்ஸ்வாசிகள் தோற்கடித்தனர். யுத்தத்தின் வெற்றிச் செய்தியை அறிவிக்க செய்தி அறிவிப்போன் ஒருவன் சுமார் 26 மைல் தூரம் ஓடி ஏதன்ஸ் நகரை அடைந்தான். இதேபோன்ற ஓட்டம் நவீன ஒலிம்பிக் பந்தயத்தில் 1896–ம் வருடம் ஆரம்பிக்கப்பட்டது. அதிலிருந்து மாரதான் ஓட்டப்பந்தயம் ஒலிம்பிக்கில் தவறாது இடம்பெறுகிறது. இன்றைய உலகில் நடைபெறும் பலவகைப் போட்டிகளில் பொறுமையின் சிகரமாக உள்ளவரைக் குறிக்கவும் MARATHON என்றசொல் பயன்படுத்தப்படுகிறது.

ACQUIT

AT REST என்று பொருள்தரும் லத்தீன் சொல்லான QUIETUS என்பதிலிருந்து பிறந்தது ACQUIT ஆகும். கோர்ட்டில் வழங்கப்படுவது இது. வழக்கு விசாரணை எல்லாம் முடிந்து ACQUIT ஆகிவிட்டால் அவனுக்கு மிஞ்சுவது நிம்மதிதானே! அமைதி தானே! பொருத்தமாக அமைந்த சொல் இது. இத்துடன் சேர்த்துபார்க்கப்பட வேண்டிய சொற்கள் QUIT, QUIET ACQUIESCE எல்லாம் மன அமைதியைக் குறிக்கும் சொற்களே!

கடற்படை ஆபீசரைக் குறிக்கும் சொல் இது. AMIR – AL – BHAR என்னும் அரபிச் சொல்லுக்கு அர்த்தம் COMMANDER OF THE SEA - (கடலின் தலைவன்). முதல் இரு சொற்கள் சேர்ந்து ADMIRAL ஆக பிரெஞ்சில் மாற ADMIRAL ஆக ஆங்கிலத்தில் உருப்பெற்றது.

ALPHABET

அகர வரிசைப்படி அமைந்துள்ள மொழியின் எழுத்துக்களை ALPHABET குறிக்கும். கிரேக்க மொழியில் முதல் இரு எழுத்துக்களை ALPHA, BETA என்று சொல்வர். இதற்கு மூலம் ஆங்கில மொழியில் முதல் இரு எழுத்துக்களான ALEPH மற்றும் BETM ஆகும். இதிலிருந்து பிறந்ததே ALPHABET.

BANK

பழைய இத்தாலி மொழிச் சொல்லான BANCA என்பதிலிருந்து வந்தது BANK. BANCA என்றால் பெஞ்சு ஆகும். மரப்பலகையில் அமர்ந்து, பணத்தை தம் முன்னே வைத்துக் கொண்டு கொடுக்கல் வாங்கலை வணிகர்கள் செய்வர். இந்த பெஞ்சு உடைக்கப்பட்டதென்றால் அந்த 'பணவியாபாரி' BANKRUPT ஆகிவிட்டான் என்று அர்த்தம். BANCAE = BENCH + ROTTA = BROKEN பெஞ்சு உடைவது என்பது அலங்கார வார்த்தை பிரயோகம்தான். அந்த வியாபாரி மூழ்கிவிட்டான் என்பதை BANKRUPT என்னும் சொல் குறிக்கும்.

BEAT

'பழுப்பானது' என்பதைச் சொல்லும் ஆங்கிலச் சொல் கரடியை அதன் உண்மைப் பெயரால் சொல்லக்கூடாது என்ற அடிப்படையில் தோன்றியது. ஏன் அந்த மிருகத்தின் பெயரைக் கூறக்கூடாதா? அதன் ஆவி பெயர் சொல்பவரைப் பிடித்துக் கொள்ளுமாம். இதில் விசித்திரம் என்னவெனில் கரடி பற்றி இதே நம்பிக்கையை ஹிந்துக்களும், ஸ்லாவ் இனத்தவரும் கொண்டிருந்ததாகும். வடமொழியில் 'தேன் அருந்துவது' எனப்படும் 'மத்வாத்' என்ற சொல்லாலேயே கரடி குறிப்பிடப்படுகிறது. வெல்ஷ் மொழியிலே 'தேன் பன்றி' (MELFOCHYM) எனக் கூறப்படுகிறது.

BLACKSHEEP

பண்டைய நாட்களில் கறுப்பு ஆட்டிற்கு மதிப்பு மிகவும் குறைவு. இந்தக் கறுப்பு நிறத்தைக் கண்டு மற்ற ஆடுகள் பயந்ததால் இதை லேசில் மந்தையில் சேர்க்கமாட்டார்கள். இன்று தன் கூட்டத்தாரால் மதிக்கப்படாதவனையோ அல்லது ஒரு குடும்பத்தில் நல்ல நிலைமைக்கு வரமுடியாதவனையோ குறிக்க இச்சொல் பயன்படுத்தப்படுகிறது.

CABARET

முதலில் சிறிய SHEDஐக் குறித்த இச்சொல் பின்னால் குடிக்கும் இடத்தைக் குறித்தது. இன்றோ ஹோட்டலில் நடைபெறும் ஒருவித நடனத்தைக் குறிக்கிறது.

CANDIDATE

வெண்மையைக் குறிக்கும் லத்தீன் சொல்லான CANDIDUS என்பதிலிருந்து பிறந்தது இந்தச் சொல். தேர்தல் நடைபெறவதற்கு முன்னால், அரசியலில் ஈடுபட விளைவோர் (பழைய காலத்தில் ரோமானியர் அணியும்) வெள்ளை நிற மேலங்கியை அணிந்துகொள்வது அங்கே வழக்கம். இதன் அடிப்படையில் வந்த சொல்லே CANDIDATE.

CANTEEN

மதுபானம் விற்கும் விடுதியைக் குறிக்கும் லத்தீன் சொல்லான CANTENA என்பதிலிருந்து வந்தது, CANTEEN. வீட்டின் உபயோகப்படுத்தப்படாத பகுதிகளில் சிறிய உணவு அங்காடியை நடத்துவது பண்டைய நாட்களில் பழக்கமாய் இருந்தது. மதுபானம் விற்பதை நிறுத்திய பின்னரும்கூட இன்றுவரை இவை CANTEEN என்றே அழைக்கப்படுகின்றன. முதல் உலகப்போரின் போது

படைவீரின் உணவு விடுதி CANTEEN என அழைக்கப்பட்டது. இப்போது எல்லா உணவு விடுதிகளையும் CANTEEN என்கிறோம்.

DAME

வீட்டுப் பெண்மணி என்ற பொருளைத் தரும் DOMINA என்ற லத்தீன் சொல்லிலிருந்து வந்தது இது. ஸ்பானிஷ் மொழியில் DUENNA என்றும், பிரெஞ்சு மொழியில் DAMME என்றும் வழங்கப்பெறும், இதன் இன்னொரு வடிவம் DAMSEL ஆகும். இது GIRL, MAIDEN என்ற பொருளைத் தரும். MADAME = MA DAME என்றால் 'எனது லேடி' என்றாகும். இப்போது கன்னியைக் குறிக்கும் MISS என்ற சொல் MADAMOISELLE அல்லது 'எனது இளம் பெண்' என்பதாகும்.

DEMOCRACY

உலகில் பலவித அரசியல் நடத்தும் அரசாங்கங்கள் உள்ளன. மக்களால் மக்களுக்காக நடத்தப்படும் ஜனநாயக அரசாங்கமே, கிரேக்கச் சொற்களான DEMOS = மக்கள் + KRATOS = சக்தி என்பவை இணைந்து DEMOCRACY என்று குறிப்பிடப்படுகிறது. தனி ஒருவன் கையில் அபரிமிதமான அதிகாரம் வந்து அவன் ஆண்டால் AUTO தனி ஒருவன் + KRATOS என்பவை இணைந்து AUTOCRACY எனப்படுகிறது. அரசாங்கத்தின் அதிகாரம் தகுதிவாய்ந்த, குறிப்பிட்ட சிலர் கையில் குவிந்தால் அந்தவித அரசை ARISTOCRACY என்கிறோம். ARISTOS = BEST (சிறந்த) + KRATOS என்ற சொற்கள் இணைந்து வந்தது இது.

நிர்வாக அதிகாரிகளைக் கொண்டு நடத்தப்படும் அரசு BUREAUCRACY ஆகும். BUREL என்பது உல்லன் துணியால் மூடப்பட்ட மரடெஸ்க்குகளை குறிக்கும். இந்த அதிகாரிகள் தங்கள் DESKக்குகளின் முன்னால் இருந்து நிர்வாகம் செய்ததால் BUREAUCRACY உருவானது.

DICTIONARY

அகராதியை அறியாதவர் இல்லை. லத்தீன் சொற்களான DICTO என்றால் வார்த்தை என்றும் DICO என்றால் பேசு, சொல் என்றும் அர்த்தம். இந்த மூலத்திலிருந்தே DITTO, CONTRADICTION, VERDICT, DICTATOR, DICTION ஆகியவை எழுந்தன. மக்கள் “சொன்னதன்” தொகுதியே DICTIONARY. மீண்டும் மீண்டும் கூறியதே DITTO. எதிராகக் கூறியது CONTRADICTION (லத்தீன் சொல்லான CONTRA என்றால் எதிராக என்று அர்த்தம்) VERDICT என்றால் (நீதிபதி கூறிய) உண்மையான சொற்கள் அதாவது தீர்ப்பு ஆகும்.

EAVESDROP

ஒட்டுக் கேட்பதற்கும் EAVESDROPற்கும் என்ன சம்பந்தம் என்று ஊகிக்க முடியவில்லை அல்லவா? கட்டிடங்களில் மழைத்தண்ணீர் சுவரின்மீது பட்டு சுவர் கெடாமல் இருக்க ஜன்னலுக்கு மேலாக (சன்ஷேட்) விதானம் இருக்கும். அடுத்த வீட்டில் பேசுவதை ஒட்டுக்கேட்க விரும்புவோர் ஜன்னல் அல்லது கதவுக்கு மேலே இருக்கும் விதானத்தின் கீழே நின்று காதைத் தீட்டிக் கொள்வர். EAVESDROP என்பது இந்த இடத்திற்குப் பெயர். EAVESDROPPER இங்கிருந்து ஒட்டுக்கேட்பவர்கள் ஆனார்கள்.

ECCENTRIC

சாதாரணமாக அனைவராலும் ஒப்புக் கொள்ளப்படும் நடத்தையிலிருந்து மாறுபட்ட நபரை ECCENTRIC என்கிறோம். “நடுவை விட்டு விலகியவர்” (OFF CENTRE) இவர். கிரேக்கச் சொற்களான EK = OUT OF + KENTRON = CENTRE இணைந்து உருவான சொல் இது.

EDUCATION

லத்தீன் சொற்களான இணைந்து "வெளியே கொண்டு வருவதை" அல்லது கல்லுவதைக் குறிப்பிடும் EDUCATION என்ற சொல் உருவானது. குழந்தையின் உள்ளிருக்கும் திறமைகளைக் கொணர்வது தாயோ, ஆசிரியரோ யாரானாலும் அவர்கள் தருவது கல்வியைத்தான்!

FAMILY

அம்மா, அப்பா, குழந்தைகள் அடங்கிய இனிய குடும்பத்தை முதலில் FAMILY என்ற சொல் குறிப்பிடவில்லை என்றால் உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கும். லத்தீன் சொல்லான FAMILIA என்றால் எஜமானும் அவனது வேலைக்காரர்களும் தான். பின்னால் அர்த்தம் மாறி குடும்பத்தைக் குறிப்பிடலாயிற்று இந்தச் சொல்.

FANATIC

லத்தீன் சொல்லான FANOM என்றால் கோவில் என்று பொருள். புராதன ரோம் நகரில் கோவிலுக்குச் செல்லும் பக்தர்களை FANATICS என்பர். பல நூற்றாண்டுகள் கழித்து விளையாட்டில் FAN என்ற சொல் பயன்படுத்தப்பட்டது. இன்றோ தமிழில் இதை நேரடி மொழி பெயர்ப்பாக விசிறி ஆக்கிவிட்டோம். அதாவது FANATIC இன் சுருங்கிய வடிவமே FAN.

FATE

லத்தீன் சொல்லான FATUM என்பதிலிருந்தே வந்தது FATE. "சொல்லப்பட்டது எதுவோ அது" என்பது இதன் அர்த்தம். மனிதனின் தலைவிதி கடவுளின் வார்த்தைக்குள் அடங்கியது என முன்னோர் நம்பினர். FARI என்றால் பேசுவது என்று பொருள். இதிலிருந்து FATUM வந்து, பின் FATE ஆனது. NEFARIOUS என்ற வில்லத்தனத்தை அல்லது அயோக்கியத்தனத்தைக் குறிக்கும் சொல் "பேசப்பட்டதற்கு எதிரானது" என்ற அர்த்தத்தைத் தருகிறது (NE = NOT + FARI = TO SPEAK)

GEM

அரும்பு அல்லது மொட்டைக் குறிக்கும் லத்தீன் சொல்லான GEMMA என்பதிலிருந்து பிறந்தது இது. மோதிரத்தின் நடுவில் வைக்கப்பட்ட கல்லோ அல்லது நன்கு செதுக்கப்பட்ட கல்லோ மொட்டைப்போல இருந்ததால் GEM ஆனது.

GESTAPO

இரண்டாம் உலகப்போரின்போது ஜெர்மனியை ஆண்ட சர்வாதிகாரி ஹிட்லர் ஒரு ரகசியப் படையை அமைத்தான். இதன்பெயர் GESTAPO இது செய்த நாசவேலையும், அழிவும் கொஞ்சநஞ்சமல்ல. ஜெர்மன் சொற்களான GE (HEIME) STA (ATS) PO (LIZE) : SECRET STATE POLICE அல்லது GESTAPO உருவானது.

GIANT

ராட்சஸன், பெரிய உருவமுடையவனை GIANT என்கிறோம். யுரேனஸ் மற்றும் GAEA என்பவர்களை கிரேக்கர்கள் குடும்பத் தலைவனாகவும், மனைவியாகவும் கருதினர். இவர்களுக்குப் பிறந்த குழந்தைகள் அதிக சக்தி வாய்ந்த பெரும் உருவமுடையவர்களாக இருந்ததால் GIANTES எனப்பட்டனர்.

MARSHAL

பீல்டு மார்சல் என்ற ‘தரைப் படையில் உயர்பதவி’ ஒரு காலத்தில் குதிரையைப் பார்த்துக் கொள்பவனையே குறித்தது. பழைய ஜெர்மன் வார்த்தையான MARAHSCALC (MARAH – குதிரை SCALC – வேலைக்காரன் என்பதிலிருந்து வந்தது மார்சல். ஜெர்மனியிலிருந்து பிரெஞ்சு மொழியில் MARESCHAL ஆக மாறி, ஆங்கிலத்தில் MARSHAL ஆனது. முதலில் தரைப்படை அதிகாரிகளாக இருந்த பிரபுக்களின் வீடுகளில் வேலை செய்பவரைக் குறித்த மார்சல் தற்போது தரைப்படை உயர் அதிகாரியைக் குறிக்கிறது!

MESS

லத்தீன் சொல்லான MISSUS என்பதிலிருந்து வந்தது MESS. உணவின் ஒரு பகுதியைக் குறிக்கும் சொல்லான இது, சேனையில் பலர் ஒன்றுகூடி உட்கார்ந்து உணவருந்துவதைக் குறிக்க ஆரம்பித்தது. இதேசொல் குழப்புவது அல்லது பலவற்றைத் தாறுமாறாகச் செய்வது என்று அர்த்தமானது.

MIRROR

லத்தீன் சொல்லான MIRROR அப்படியே ஆங்கிலத்தில் வந்துவிட்டது. இதன் உண்மையான அர்த்தம் - "பார்த்து வியப்பது!" கண்ணாடி முன் நாம் அதைத் தானே செய்கிறோம். கண்ணாடியைக் குறிக்க MIRROR என்ற சொல் எழுந்தது.

MISTRESS

இந்த வார்த்தை MISTER என்ற ஆண்பால் சொல்லுடன் பெண்பால் விகுதியான 'ISSA' வைச் சேர்த்து உருவானது லத்தீன் சொல்லான MAGESTER என்பது பெரிய "சேனைத் தலைவன்" 'தலைமைப் பொறுப்பாளன்' என்பதைக் குறிக்கும். இதுவே MASTER ஆக மாறி MISTER ஆனது கடைசியில் MISTRESS என்பது முதலில் இல்லத் தலைவியையே குறிக்கும்.

MONEY

புராதன ரோம் நகரில் எச்சரிக்கை தரும் வேதனையாக விளங்கியது 'JUNO'. அந்த தேவதைக்கு நன்றிக் காணிக்கையாக ஆலயங்களில் தங்களது புதுக்காசுகளை அர்ப்பணித்தனர் ரோமானியர். JUNO MUNETA என்று அந்த தேவதையைக் குறிப்பர் அவர்கள். MONET என்ற வார்த்தை லத்தீன் சொல்லான ஆமுநேலு எச்சரிக்கை – என்பதிலிருந்து வந்தது. நாம் இன்று கூறும் MONEY, MONEYTARY, MONITOR இவையெல்லாம் இந்தச் சொல்லிலிருந்தே உருவாயின.

MONKEY WRENCH

ஸ்பானருக்கும் குரங்குக்கும் என்ன சம்பந்தம் என்று மண்டையை உடைத்துக் கொள்கிறோம் அல்லவா? இந்த வார்த்தைக்கும் குரங்குக்கும் கொஞ்சம்கூட சம்பந்தமே இல்லை. இதன் உண்மையான ஸ்பெல்லிங் MONCKE ஆக இருந்தது. முதலில், 'CHARLES MONCKE' என்பவர் தான் இந்த ஸ்பானரைக் கண்டுபிடித்தவர். அவர் பெயரால் அழைக்கப்பட்டது, ஸ்பெல்லிங் மாறியதால் விபரிதமான அர்த்தத்தைத் தருவதாயிற்று.

MOTEL

இரு சொற்கள் இணைந்து புதிதாக உருவாகும் சொல் வரிசையில் MOTEL-ம் ஒன்று. MOTEL என்பது காரில் பயணம் செய்வோர் காரிலிருந்தவாறே ஹோட்டலின் ஒரு பகுதியை அடைந்து சாப்பிட்டுச் செல்லும் HOTEL ஆகும். MO(TOURIST) என்ற சொல்லுடன் (HO)TEL இணைந்து MOTEL ஆனது.

MUSIC

நுண்கலைகளுக்கு அதிதேவதைகளான ஒன்பது தேவதைகளை கிரேக்க புராணங்கள் 'MUSES' என்று குறிக்கும். கவிதை நாடகம் போன்ற கலைகள் அனைத்தும் மெல்லிய இனிய ஓசையுடனேயே பழைய நாட்களில் அமைந்திருந்ததால் இந்த ஒலி MUSIC என அழைக்கப்பட்டது. MUSES தேவதைகளுக்காக அமைக்கப்பட்ட ஆலயங்கள் கலை பயிலும் இடமாக இருந்தன.

இவைகள் MUSIUM என அழைக்கப்பட்டன. ஆனால், இன்றைய உலகில் MUSIUM என்பது கலை அல்லது விஞ்ஞானத் துறையில் ஏதேனும் ஒரு பொருள் பற்றிய அபூர்வ சேகரிப்புகள் அடங்கிய இடமாகக் குறிப்பிடப்படுகிறது.

NAZI

சமீபத்தில் உருவான சொல் இது. ஜெர்மானிய மொழியில் அமைந்த என்ற கட்சியின் பெயரில் அமைந்த NATIONAL SOZIALISTICHE (NATIONAL SOCIALISTIC)என்ற எழுத்துக்கள் சேர்ந்து அமைக்கப்பட்டுது NAZI. அந்தக்கட்சி 1919–ம் வருடம் தோன்றியது. ஹிட்லார்ர்தலைமையின்கீழ் 1933–ல் மிகவும் சக்திவாய்ந்த இயக்கமாக இது மாறிற்று. இரண்டாம் உலகப்போரில் ஜெர்மனி தோல்வியைத் தழுவியபின் 1945–ல் இந்த இயக்கம் தடை செய்யப்பட்டது.

NUN

லத்தீன் சொல்லான ‘NUNNA’ என்பதிலிருந்து பிறந்தது NUN. ‘NUNNA’ என்றால் அம்மா என்பது பொருள்.

ஆஸ்பத்திரி மற்றும் சிறையில் பெண்களை மேற்பார்வை பார்க்கும் MATRON என்ற சொல்லிற்கும் பொருள் - அம்மா தான்! லத்தீன் சொல்லான MATERNE, MOTHER என்பதிலிருந்தே இது வந்தது.

O.K.

ஓ.கே. என்று சொல்லாதவர் இன்றில்லை. இந்த சொல்பிறந்த விதத்தைப் பல விதமாக பலரும் விவரிக்கின்றனர். ஆனால் அனைவரும் ஒப்புக்கொள்வது அமெரிக்காவில் தோன்றியது இந்த சொல் என்பதை! 1840–ல் புழக்கத்திற்கு இது வந்தது.

1840–ல் அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்ட ஜேம்ஸ் வான் ப்யுரன் (JAMES VAN BUREN) என்பவரை ஆதரித்த அரசியல் கட்சியின் பெயர் OLD KINDERHOOK (OK) CLUB என்பதாகும். இதிலிருந்து OK வந்தது என்று சொல்பவர்கள் அனேகம்.

இன்னும் சிலர் இந்த சொல் அமெரிக்க இந்தியர் கூறும் அப்படியே ஆகட்டும் என்ற அர்த்தத்தை தரும் சொல்லான 'OKEH' என்பதிலிருந்து பிறந்தது என்கின்றனர். இன்னும் சிலர் தப்பான ஸ்பெல்லிங் மூலம் பிறந்த சொல் இது என்கின்றனர். ORL KERRECT என்பதற்குப் பதிலாக OK என்று சட்ட தஸ்தாவேஜுகளில் எழுதி வந்ததன்மூலம் புழக்கத்திற்கு வந்த சொல் இது என்கின்றனர். (இப்படி சொன்னவர் JOHN JACOB ASTON என்று கூறுவர்)

இன்னும் இதைப்பற்றி பல கதைகள் உண்டு. சிகாகோ ரெயில்வே ஸ்டேசனில் வேலைபார்த்த கிளார்க் OBADIAH KELLY என்பவர், தான் வாங்கிய எல்லா பார்சல்களிலும் தனது இனிசியல்களை 'OK' என்று போட்டார். அதிலிருந்து ஆரம்பித்தது ஒகே சொல்லும் பழக்கம் என்கின்றனர் சிலர்.

PACIFIC (பசிபிக் கடல்)

ஃபொர்டினான்டு மெகல்லன் என்பவர் போர்த்துகீசிய மாலுமி ஆவார். ஆர்ப்பரிக்கும் அட்லாண்டிக் கடலைக் கடந்து இந்தப் பகுதிக்கு வந்தபோது, அமைதியாக இருக்கும் கடலை பார்த்து PACIFIC எனப்பெயர் வைத்தார். PACIFIC என்பது PACIFICUS என்ற லத்தீன் சொல்லிலிருந்து வந்தது. அமைதியானது என்று இதற்கு அர்த்தம்.

PALACE

பாலஸ் என்றால் அரண்மனை. PALATIUM என்ற சொல்லிருந்து பிறந்தது PALACE. ரோமானிய மன்னனான நீரோவின் அரண்மனையின் பெயர் PALATIUM. இது ரோமில் PALATINE என்ற குன்றின்மீது அமைந்திருந்ததால் இந்தப் பெயரைப் பெற்றது.

PANTS

இத்தாலியில் தமாஷ் செய்யும் கோமாளிகள் அணியும் ஆடையின் பெயர் PENTALOONS ஆகும். இந்த PENTALLONS என்ற சொல்லே வெனிஸ் நகர முனிவரான ST.PANTALEONE என்ற பெயரிலிருந்து வந்தது. வயதான இவர் கோமாளிகளின் ஜோக்குகளுக்கு இலக்கானவர். PENTALOONS சுருங்கி PANTS ஆனது. இன்று நாம் அணியும் ஆடையின் பெயரானது.

POLITICS

அரசையும் அதன் அங்கமான குடிமக்களையும் சார்ந்த POLITICS, POLICE ஆகிய இரண்டு சொற்களும் கிரேக்க வார்த்தையான POLITES என்பதிலிருந்து வந்தது.

POLIS என்றால் CITY என்று அர்த்தம். CITY – CITIZEN – POLICE - POLITICS இப்படி உருவானவை இந்த சொற்கள்.

QUARANTINE

நாற்பது என்ற எண்ணைக் குறிக்கும் இத்தாலிய சொல்லான QUARANTENA என்பதிலிருந்து வந்தது QUARANTINE. ஒரு சமயம் வெனிஸ் நகரில் பிளேக் தொத்து வியாதி பரவியபோது கீழ்த்திசை நாட்டு யாத்ரிகர்களை நாற்பது நாட்கள் கப்பலிலும் ஆஸ்பத்திரியிலும் நோய்பரவாமல் தடுக்க தனியாக வைத்திருந்தனர்.

இப்போது தடையை மட்டும் குறிக்கும் இச்சொல் 40 நாட்களையோ அல்லது தொத்து வியாதி பரப்ப வாய்ப்புள்ளவர்களாக சந்தேகிக்கப்படும் மிருகங்கள் அல்லது மனிதர்களையோ குறிக்கவில்லை.

RACKET

ராக்செட் என்பது டென்னிஸ், பாட்மின்டன் விளையாட்டுகளில் உபயோகப்படுத்தப்படும் லேசான பேட்டை குறிக்கும். நீள்வட்ட வடிவில் இழைகளால் பின்னப்பட்ட சட்டத்துடன் அமைந்த பேட் HANDLE உடன் கூடியது.

HANDLE ஐப் பிடித்து பேட்டை இயக்குவது கையே. இந்த சொல் உள்ளங்கை எனப் பொருள்படும் RAHAT என்ற அரபிச் சொல்லிலிருந்து வந்தது.

RED TAPE

'சிவப்பு நாடா' – தாமதத்தைக் குறிப்பிடும் சொல்லாக வழங்கப்படுகிறது இன்று. இங்கிலாந்தில் 8–ம் நூற்றாண்டில் அரசு தஸ்தாவேஜூகளை சிவப்பு நாடாவினால் கட்டி வைக்கும் பழக்கமிருந்தது. இன்றைய 20–ம் நூற்றாண்டில் அரசின் மெத்தனப் போக்கையும் தாமதத்தையும் விளக்கும் சொல்லாக RED TAPE விளக்குகிறது.

R.S.V.P.

நமக்கு வரும் இன்விடேசன் கார்டுகளில் R.S.V.P. என்று போட்டிருப்பதை பார்க்கிறோம். அர்த்தம் புரிவதில்லை. பிரெஞ்சு சொல்லான REPONDEZ SIL VOUS PLAIT என்ற சொற்றொடரின் முதல் எழுத்துக்களான R.S.V.P. குறிப்பது என்ன தெரியுமா? REPLY, IF YOU PLEASE தயவுசெய்து பதில் போடுங்கள் என்பதைத்தான். விசேசத்திற்கு அல்லது விருந்திற்கு வருவதை உறுதிப்படுத்துங்கள் என்பதையே RSPV சொல்கிறது.

SONAR

இன்னொரு ACRONYM சொல் SONAR. SONAR. SOUND NAVIGATION AND RANGING என்ற சொற்களின் முதல் எழுத்துக்கள் அதிர்வுகளைப் பதிவுசெய்து நீரில் மூழ்கியுள்ள ஒரு வஸ்துவின் மீது பட்டுத் திரும்பும் ஹை ப்ரிகூவன்சி அலைகளை அனுப்பும் கருவி SONAR எனப்படும்.

THIRD WORLD

அடிக்கடி செய்தித்தாளில் வரும் THIRD WORLD COUNTRIES என்பதைப் பார்க்கும்போது குழப்பமாக இருக்கும்.

மூன்றாம் உலக நாடுகள் என்றால் என்ன? ஆசியா, ஆப்பிரிக்காவில் உள்ள வளர்ச்சி அடையாத நாடுகளை மூன்றாம் உலக நாடுகள் என்கிறோம். இவைகள் கம்யுனிஸ்டு நாடுகளுடனோ (முதல் உலக நாடுகள்) அல்லது கம்யுனிஸ்டு அல்லாத நாடுகளுடனோ (இரண்டாம் உலக நாடுகள்) சேராத மூன்றாம் உலக நாடுகள் ஆகும். இப்போது தெளிவாக இருக்கிறதா?

UNIVERSITY

ஒரே குறிக்கோளை மனதில்கொண்டு, ஒரேவித வழியைத் தேர்ந்தெடுத்து ஒருமனதாக ஒரே மனிதனைப்போல இணைந்து செயல்படும் தனிநபர்களின் குழு இடைக்காலத்தில் UNIVERSITES எனப்பட்டது. லத்தீன் சொல்லான UNUS = ONE + VERTERE = TO TURN இணைந்து UNIVERSITY ஆனது. இப்போது கல்வி கற்பிக்கும் பல்கலைக்கழகத்தை மட்டும் குறிப்பிடுகிறது இச்சொல்.

VICTOR

போர்க்களத்தைக் குறிக்கும் பழைய ஜெர்மன் சொல்லான ‘WIC’ என்பதிலிருந்து வந்தது VICTORY. போரில் ஜெயித்தவனை VICTOR எனவும், வெற்றி VICTORY எனவும் கூறப்பட்டது.

YELLOW JOURNALISM

ஆபாசமான விசயங்களை வெளியிட்டு வாசகரைக் கவரும் பத்திரிகைகளை மஞ்சள் பத்திரிகைகள் என்று குறிப்பிடுவர். 1895–ம் வருடம் அமெரிக்க பேப்பரான NEWYORK WORLD தான் வெளியிட்ட காமிக் தொடரான ‘YELLOW KID’ என்ற தொடரை வாசகரைக் கவரும் வண்ணம் மஞ்சள் வண்ணத்தில் பிரசுரித்தது. அதிலிருந்து பிறந்தது இச்சொல்! இப்போது ஆபாச பத்திரிகைகளைக் குறிப்பிடுகிறது இச்சொல்.

HEART

இதயம் தோன்றிய விதம் எப்படி? ஹருதயம் என்பது வடமொழி. இந்தச் சொல்லே லத்தீனில் CORDA ஆகவும் கிரேக்கத்தில் KARDIA ஆகவும் ஆனது. உடலின் மையமாகக் கருதப்பட்டதால் ‘CORE’ எனப்பட்டது லத்தீனில்.

HELICOPTER

சமீபத்திய காலத்துச்சொல் இது. சுழல்வது என்ற பொருளைத் தரும் HELICOS என்ற கிரேக்கச் சொல்லும் இறக்கை எனப்பொருள் தரும் PTERON எனப்படும் சொல்லும் இணைந்து சுழல் இறக்கைகள் கொண்ட HELICOPTER உருவானது.

IDIOT

முட்டாள் எனப்படும் இச்சொல் கிரேக்க மூலமான IDIOTES = தனிப்பட்ட என்ற சொல்லிருந்து பிறந்தது. IDIOS என்றால் விசித்திரமான என்று அர்த்தம். இதிலிருந்து IDIOT முட்டாளைக் குறிக்க ஆரம்பித்தது.

KINDER GARDEN

குழந்தைகளின் தோட்டம் KINDER GARDEN ஜெர்மன் மொழியில் KINDER என்றால் குழந்தைகள் GARDEN என்றால் தோட்டம் 4 முதல் 6 வயது வரையிலான குழந்தைகள் அடங்கிய கற்குமிடம் ஆங்கிலத்தில் KINDERM GARDEN ஆயிற்று.

LAUNDRY

பழைய காலத்தில் ஆடைகளைச் சலவை செய்தபின்னர் நறுமணமூட்டும் சென்ட்டை அதன்மீது தெளிப்பது வழக்கம். பிரெஞ்சுச் சொல்லான LAUNDE நறுமண திரவத்தைக் குறிக்கும். அந்த திரவத்தைத் தெளிக்கும் LAUANDIERE (பெண் கலவையாளி) எனக் குறிப்பிடப்பட்டார். இதுவே ஆங்கிலத்தில் ஆக மாறி, சலவையகம் LAUNDRY ஆகிவிட்டது.

MERCEDES

உலகின் தலைசிறந்த காரான மெர்சிடீஸ் அறியாதவர் யார்? 1902–ம் வருடம் இதை உருவாக்கிய நிறுவனம் DAIMLER AUTOMOBILE CO ஆகும். இந்த நிறுவனம் தனது பெரிய வாடிக்கையாளரின் பெண்ணின் பெயரான MERCEDES என்பதைத் தனது காருக்குச் சூட்டியது. அன்றிலிருந்து MERCEDES பிறந்தது.

NOVEL

அவள் முகம் வெளுத்து, உடல் மெலிந்து காணப்படுகிறாள்.

9. RUN DOWN: TO STOP THROUGH WANT OF WINDING இயந்திரம் (கடிகாரம்) ஓடாது நின்றுவிடல்

THE CLOCK HAS RUN DOWN PLEASE WIND IT UP.

கடிகாரம் ஓடாது நின்றுவிட்டது. தயவுசெய்து சாவிகொடு.

10. SACK: வேலையிலிருந்து நீக்கி விடுதல்

IF YOU DON'T PERFORM I WILL SACK YOU.

நீ நன்றாக வேலை செய்யவில்லை என்றால் உன்னை நீக்கிவிடுவேன்.

IDIOMS AND PHRASES - 11

1. Look after:- To take care of கவனித்தல்; பொறுப்பாயிருத்தல்.

He left me in charge, chiefly to look after his garden.

முக்கியமாய், தனது தோட்டத்தை எனது பொறுப்பில் விட்டுவிட்டு அவன் போனான்.

2. To be made of: To be composed of (ஒன்றினால்) உருவாக்கப்பட்டிருத்தல்.

The chariot is made of wood.

ரதம் மரத்தால் உருவாக்கப்பட்டிருக்கிறது.

3. Pack off: To send off quickly and unceremoniously. சீக்கிரமாகவும் சம்பிரதாயமின்றியும் ஒருவனை அனுப்பல்.

He packed the begger off.

அவன் பிச்சைக்காரனை சீக்கிரமே அனுப்பிவிட்டான்.

4. Pass by:- To imit, to overlook பார்க்காது விட்டுவிடுதல்

I passed by this essay inadverdently.

இந்தக் கட்டுரையைப் பார்க்காது விட்டுவிட்டேன்.

5. Vote against for:- எதிராகவும், ஆதரித்தும் வோட்டுப்போடுதல்

Hundred members voted for the motion and five against it.

தீர்மானத்தை ஆதரித்து 100 உறுப்பினர்களும், எதிர்த்து ஐந்து பேரும் ஓட்டுப்போட்டனர்.

6. Radical idea: Great principle:உயர்ந்த கொள்கை.

Raja Ram Mohan Rai's radical ideas caused a revolution.

ராஜாராம் மோகன் ராயின் உயர்ந்த கொள்கைகள் பெரிய புரட்சியைத் தோற்றுவித்தது.

7. At any rate:- at all events எப்படிப் பார்த்தாலும்.

At any rate I have to pay my debts.

எப்படிப் பார்த்தாலும் நான் என் கடன்களைச் செலுத்தியே ஆக வேண்டும்.

8. In Camera: in secret: ரகசியமாக

The judge heard the witness in camera.

நீதிபதி சாட்சியை ரகசியமாய் விசாரித்தார்.

9. Lead a dog's life: to lead a miserale life துயரமான – வாழ்வு நடத்தல்

After loosing his job, he leads a dog's life.

தனது வேலையை இழந்தபிறகு, அவன் துயரமான வாழ்வு வாழ்கிறான்.

10. Let the cat out of the bag: To reveal a secret ரகசியத்தை வெளியிடுதல்

The Finance Manager let the cat out the bag when he hinted that the company could not pay back the deposit money.

நிதி மேலாளர் நிறுவனம் டெபாசிட் பணத்தைத்திருப்பித்தர இயலாது என்றுகூறி (நிறுவனத்தின் உண்மை நிலை பற்றிய) ரகசியத்தை வெளியிட்டு விட்டார்.

IDIOMS AND PHRASES – 12

1. Turn Away: To dismiss: To avert நிராகரித்தல்.

He has turned away ten applicants.

அவன் பத்து விண்ணப்பத்தாரர்களை நிராகரித்தான்.

2. Turn against: to become hostile to பகைத்தல்

The secretary suddently turned against the President of the party.

கட்சிச் செயலாளர் திடீரென்று தலைவரைப் பகைத்துக் கொண்டார்.

3. Turn aside: To avert, To deviate பிறழ்ந்து செல்லல்.

How can a wicked man hope to turn aside the judgement of God?

கடவுளின் தீர்ப்பிலிருந்து கயவன் எப்படி தப்புவதற்கான நம்பிக்கை கொள்ள முடியுமா?

4. Turn out: To Assemble; பேரளவில் திரளுதல்

The Whole city of Delhi turned out to welcome the Leader. தலைவரை வரவேற்க டெல்லி நகரமே திரண்டு வந்தது.

5. Turn out: To expel; வெளியேற்றல்

He was expelled from the party.

அவர் கட்சியிலிருந்து நீக்கப்பட்டார்.

6. Turn out: To produce as a result of labour. உழைப்பினால் உருவாக்கும் பொருள்களின் உற்பத்தி

How many cars this factory turns out in a day?

இந்தத் தொழிற்சாலை ஒரு நாளைக்கு எத்தனை கார்களை உற்பத்தியாக்குகிறது?

7. Turn out என்பதற்கு மேலும் To put a pasture, to result. To be outwards, to make tidy, to get ஆகிய அர்த்தங்கள் உண்டு.

Let them turn out all the cattle to pasture.

அவர்கள் கால்நடைகளையும் மேய்ச்சலுக்கு விடட்டும்.

8. Turn out to be: prove to

The fellow turned out to be a fool.

அந்த ஆசாமி முழு முட்டாள் எனத் தன்னை நிரூபித்தான்.

9. Turn to: Turn toward: நோக்குதல்

Turn to god for mercy and help.

கருணைக்கும், உதவிக்கும் கடவுளை நோக்கித் திரும்பு.

10. Turn in: go to bed. படுக்கச் செல்லல்.

I will turn in by 10 p.m.

நான் இரவு பத்து மணிக்குப் படுக்கப்போவேன்.

IDIOMS AND PHRASES – 13

'Get' என்ற வினைச்சொல் பல Adverb மற்றும் Preposition களுடன் சேர்ந்து வெவ்வேறு அர்த்தங்களைத் தரும்.

1. Get About:- To go about: to move from place to place இடத்திற்கு இடம் செல்லுதல்

The Storm is so severe today that is it impossible to get about.

இன்று புயல் பலமாக இருப்பதால், வேறு இடத்திற்குச் செல்ல முடியாது.

2. Get about:- Higher than either literally or figuratively உயரத்தில் இருத்தல்

Neela has got above Leela in the class.

வகுப்பில் நீலா, லீலாவைவிட உயர்ந்து நின்றாள்.

3. Get about:- To circulate; பரவுதல்

Strange roumers about that famous actress have been getting about.

அந்தப் புகழ்பெற்ற நடிகையைப்பற்றி விசித்திரமான வதந்திகள் அண்மையில் பரவலாயின.

4. Get Along:- To advance முன்னேறுதல்

He seems to be getting along well in his business.

அவன் தனது வியாபாரத்தில் நன்கு முன்னேறுவதாகத் தெரிகிறது.

5. Even though we earn three thousand rupees only, we manage to get along. நாங்கள் மூவாயிரம் ரூபாய் மட்டுமே சம்பாதித்தாலும்கூட அதிலேயே குடும்பத்தை நடத்துகிறோம்.

6. Get at:- To reach; to attain to அடைதல்

The object in this inquiry is to get at the truth.

இந்த விசாரணையின் நோக்கம் உண்மையை அடைவதே! (கண்டுபிடிப்பதே)

7. Get away:- To escape; to leave; to get free தப்புதல்; சுதந்திரமாதல்

The thief got away with the motorcycle.

திருடன் மோட்டார் சைக்கிளுடன் தப்பிவிட்டான்.

8. Get back – to return; திரும்புதல்

He has just got back from his long journey. தனது நீண்ட பயணத்திலிருந்து அவன் இப்போதுதான் திரும்பினான்.

9. Get back:- To receive back; மீண்டும் பெறுதல்

I have just got back the jwelleries that were stolen from the shop.

எனது கடையிலிருந்து திருட்டுபோன நகைகளை இப்போதுதான் திரும்பப் பெற்றேன்.

10. Get above – To arrive in front of; to arrive further forward மற்றவரை மீறி முன்னேறுதல்; முன்னேறிப் போதல்

Do not allow your friend get before you in learning.

உன் நண்பனைப் படிப்பில் உன்னைவிட முந்தவிடாதே.

IDIOMS AND PHRASES – 14

‘

Get’ என்ற வினைச்சொல்மூலம் ஏராளமான Phrases உருவாகின்றன. மேலும் சிலவற்றைப் பார்ப்போம்.

1. Get behind – to lag; to fall into the rear; to get into backward position - பின்னேறுதல்

Raman gets behind in business.

ராமன் வியாபாரத்தில் பின்னேறுகிறான். (முன்னேற்றம் அடையவில்லை)

2. Get between:- To arrive in between - இருவருக்கும் இடையே வருதல்

A body of police got between the opposite mobs.

எதிரிக் கும்பல்களின் இடையே போலீஸ் வந்தது.

3. Get beyond:- To go outside a limit - எல்லையை மீறுதல்

He went into the river to bathe, but getting beyond his depth, he was carrier off by the current.

அவன் ஆற்றில் குளிக்கப்போனான்; தான் சமாளிக்கக்கூடிய ஆழத்தின் எல்லையை மீறவே, வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டான்.

4. Get down:- To descend from a higher position to lower - உயர்ந்த இடத்திலிருந்து தாழ்ந்த இடத்திற்கு இறங்குதல்

They have climbed up the precipice; How will they get down?

செங்குத்தான மலைமீது அவர்கள் ஏறினார்கள்; எப்படிக் கீழே இறங்குவார்கள்?

5. Get forward:- To proceed; to advance:- முன்னேறுதல்

I hope that your son is getting forward with his education.

உன் மகன் படிப்பில் முன்னேறுகிறான் என்று நம்புகிறேன்.

6. Get off:- To escape, to dismount:- தப்புதல், இறங்குதல்

He got off his car and went into the house

அவர் காரிலிருந்து இறங்கி வீட்டிற்குள் சென்றார்.

7. Get near:- To approach:-நெருங்குதல்

It will be dangerous if the ship gets near the rocks.

கப்பல் பாறைகளை நெருங்கினால் ஆபத்து.

8. Get on:- To succeed; to advance; to fare – வெற்றி பெறுதல்; முன்னேறுதல்

How is your daughter getting on at college?

கல்லூரியில் உனது பெண் எப்படி இருக்கிறாள்?

9. Get over:- To overcome; to surmount – சமாளித்து மீளுதல்

You have got over all your difficulties, have you?

உனது கஷ்டங்களை சமாளித்து மீண்டுவிட்டாய் இல்லையா?

10. Get up:- To rise (from bed) படுக்கையிலிருந்து எழுதல்

I get up usually at 6.00 clock.

வழக்கமாக ஆறு மணிக்கு எழுந்திருப்பேன்.

IDIOMS AND PHRASES – 15

Give என்ற சொல்லுடன் இணைந்து Preposition வரும்போது பல புது அர்த்தங்கள் பெறப்படுகின்றன.

1. Give away:- To transfer, to part with மற்றவருக்கு தருதல்

He gave his daughter away in marriage.

அவர் தன் மகளுக்குத் திருமணம் செய்தார்.

2. Give back: to restore, to return திருப்பித் தருதல்

Please give me back the book you borrowed from me.

என்னிடமிருந்து வாங்கிய புத்தகத்தை தயவுசெய்து திருப்பித் தா.

3. Give in: To yield; to submit சரணடைதல்

He was compelled to give in.

அவன் சரணடைய நிர்பந்திக்கப்பட்டான்.

4. Give up; to abandon; இறுதியாக விட்டுவிடல்.

I gave up smoking.

நான் புகைப்பதை நிறுத்திவிட்டேன்.

5. Give over: to transfer; to handover from one to another.

He gave over charge of his office to his successor today.

தனக்கு அடுத்து வருபவரிடம் தன்வேலைப் பொறுப்பை அவர் ஒப்படைத்தார்.

6. Give off: To emit; to exhate

Some flowers give off their fragrance at night.

சிறு மலர்கள் இரவில் நறுமணத்தை வெளியிடுகின்றன.

7. Give out: to announce; to emit அறிவித்தல், வெளியிடுதல்

The jasmine give out a sweet perfume.

மல்லிகை இனிய நறுமணத்தை வெளியிடுகிறது.

He gave out that he was going to America.

அமெரிக்கா செல்வதாக அவன் அறிவித்தான்.

8. To dig one's grave; to ruin oneself. ஒருவரை அழித்துக் கொள்ளல்

Don't dig your own grave by doing wrong things.

தவறான செயல்களைச் செய்து உன்னை நீயே அழித்துக் கொள்ளாதே.

9. Light up: to illuminate ஒளி பெறச்செய்ய

It will take five lamps to light up this room.

இந்த அறை ஒளிபெறச் செய்ய ஐந்து விளக்குகள் வேண்டும்.

10. Light up: to become cheerful மலர்ந்திருத்தல்

His face lighted up when he saw his wife.

தனது மனைவியைப் பார்த்தவுடன் அவன் முகம் மலர்ந்தது.

IDIOMS AND PHRASES – 16

இதுவரை சுமார் நூற்றிற்கும் மேற்பட்ட IDIOMS AND PHRASES களைப் பார்த்துள்ளோம். கரை காண முடியாத ஆங்கிலக் கடலில் உள்ள ஆயிரக்கணக்கான Idioms and phrases – களில் 100 என்பது எத்தனை சிறிய எண்ணிக்கை என்பதை முற்றும் கற்றவரே உணர முடியும்! மேலும் தொடர்வோம்:- 'MAKE' என்ற சொல்லுடன் இணைந்து Prepositions மற்றும் யுனஎநசடிள வரும்போது நிறைய Idoms and prases உருவாகின்றன.

1. MAKE AFTER – TO RUN AFTER பின்னால் ஓடிச் செல்லுதல்

The constable made after the thief.

திருடனைத் துரத்திக்கொண்டு கான்ஸ்டபிள் பின்னால் ஓடினார்.

2. MAKE AWAY WITH:- TO REMOVE IN AN UNDERHAND MANNER; ABSCOND WITH

The cashier made away with ten thousand rupees.

காஷியர் பத்தாயிரம் ரூபாயை எடுத்துக்கொண்டு தலைமறைவாகிவிட்டார்.

3. MAKE FOR:- TO MOVE TOWARDS, TO TEND TOWARDS; TRY TO REACH நோக்கிச் செல்லுதல், அடைய முயற்சித்தல்

Sheela must make for home before it is midnight.

'ஷீலா நள்ளிரவு ஆகு முன்னர் வீடு செல்லவேண்டும்.

4. MAKE OF:- TO UNDERSTAND; புரிந்துகொள்ளல்.

I am unable to make anything

என்னவென்று என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.

5. MAKE OF: CONSTRUCT; அமைத்தல் கட்டுதல்

The chariot is made of iron.

இந்த ரதம் இரும்பால் ஆனது.

6. MAKE OFF WITH:- TO RUN AWAY WITH ஓடிவிடுதல்

She has made off with my clothes.

என் ஆடைகளுடன் அவள் ஓடி விட்டாள்.

7. MAKE OUT:- TO WRITE OUT; எழுதுதல்

Make out a cheque for one thousand rupees.

ஆயிரம் ரூபாய்க்கு ஒரு செக் எழுது.

8. MAKE OUT:- TO DISCOVER; TO FIND OUT - கண்டுபிடித்தல்

He cannot make out the meaning of this poem.

அவனால் இந்தக் கவிதையின் பொருளைக் காண முடியவில்லை.

9. MAKE OVER:- TO TRANSFER TO ANOTHER PERSON - இன்னொருவருக்கு மாற்றுதல்.

The old lady made over all her properly to her son.

வயதான மூதாட்டி தனது சொத்துக்களை தன் மகன் பெயருக்கு மாற்றிவிட்டாள்.

10. MAKE FUN OF:- FIDICULE; பரிகாசம் செய்தல்.

When she slipped down they made fun of her.

அவள் கீழே விழுந்தபோது எல்லாரும் அவளைப் பார்த்து சிரித்தார்கள்.

IDIOMS AND PHRASES – 17

'MAKE' சொல்லை ஒட்டி எழுகின்ற மேலும் சில ஐனழைஅள யனெ Phசயளநள களைப் பற்றி பார்ப்போம்.

1. MAKE A CLEAN BREAST OF:- GIVE COMPLETE CONFESSION. விஷயத்தை முழுவதுமாக ஒப்புக்கொள்ளல்

The witness made a clean breast of the matter.

சாட்சி விஷயத்தை முழுமையாக ஒப்புக்கொண்டார்.

2. MAKE TOWARDS:- TO GO IN THE DIRECTION OF திசைநோக்கிச் செல்லல்.

The swimmer made towards the right bank of the river.

ஆற்றின் கரையை நோக்கி நீச்சல் வீரர் சென்றார்.

3. MAKE HEAD OR TAIL:- TO UNDERSTAND புரிந்துகொள்ளல்.

I con't make head or tail of this story.

என்னால் இந்த கதையைப் புரிந்துகொள்ள முடியவில்லை.

4. TO MAKE UP ONE'S MIND:- TO DETERMINEஇறுதியான முடிவுக்கு வருதல்

She made up her mind to dismiss the servant maid.

அவள் வேலைக்காரியை நீக்கிவிட முடிவுசெய்தாள்.

5. MAKE UP:- TO SUPPLY WHAT IS DEFECIENT. குறைபாடுள்ள மீதி தேவையை பூர்த்திசெய்தல்.

They have collected twenty thousand rupees but they wanted five thousand rupees more. A patron made it up.

அவர்கள் இருபதினாயிரம் ரூபாய் சேர்த்தார்கள். ஆனால் அவர்களுக்கு இன்னும் ஐயாயிரம் தேவையாய் இருந்தது. ஒரு ஆதரவாளர் அந்தப் பணத்தை அளித்தார்.

6. MAKE UP:- TO COMPENSATE ஈடுகட்டல்

Why should you expect your father to make up your loss?

உனது நஷ்டத்தை உனது தந்தையார் ஈடுகட்ட வேண்டுமென்று ஏன் எதிர்பார்க்கிறாய்?

7. TO MAKE UP TO PRESCRIPTION – TO COMPOUND THE MEDICINE டாக்டர் மருந்துச்சீட்டு எழுதித்தருதல்

The Doctor made up the prescription for the patient.

டாக்டர், நோயாளிக்கு மருந்துக்குரிய சீட்டை எழுதித் தந்தார்.

8. MAKE SURE:- TO BE CERTAIN உறுதிப்படுத்தல்.

Make sure that you buy the correct book.

சரியான புத்தகத்தை வாங்குவதை உறுதிப்படுத்துங்கள்.

9. TO MAKE MONEY:- TO EARN MONEY: பணம் சம்பாதித்தல்

I HAVE TO MAKE MORE MONEY TO MEET MY NEEDS.

எனது தேவைகளைச் சமாளிக்க நான் அதிகப் பணம் சம்பாதிக்க வேண்டும்.

10. MAKE IN APOLOGY:- TO APOLOGISE மன்னிப்பு வேண்டல்

Make an apology for your mistake.

உன் தவறுக்கு மன்னிப்புக் கேள்.

11. Mediate Between:- சமாதானம் செய்தல்

America tried to mediate between Indian and Pakistan.

இந்தியா, பாகிஸ்தான் இருநாடுகளுக்கிடையே அமெரிக்கா சமரசம் செய்விக்க முயன்றது.

12. To make both ends meet:- To live within income; வருவாய்க்குள் வாழுதல்

I can't make my both ends meet.

என்னால் வரவுக்கும் செலவுக்கும் ஈடுகட்டி வாழ முடியவில்லை.

13. Meet with:- encounter; எதிர்கொள்ளல்.

He has met with serious losses in his business.

அவன் தனது வியாபாரத்தில் பெரும் நஷ்டங்களை எதிர்கொண்டான்.

14. Mad about:- Foolishly fond of வெறித்தனமான ஈடுபாடு

He was mad about her.

அவனுக்கு அவளிடம் வெறித்தனமான ஈடுபாடு இருந்தது.

15. Below the mark:- Below the standard சராசரிக்கும் கீழ்.

In my class, ten students are below the mark.

எனது வகுப்பில் பத்து மாணவர்கள் சராசரிக்கும் கீழானவர்கள்.

16. Maiden speech: First Speech

I made my maiden speech in my college yesterday.

எனது கல்லூரியில் முதன்முறையாக நேற்றுப் பேசினேன்.

17. To get into a mess:- To get into difficulties; சங்கடங்களில் மாட்டிக்கொள்ளல்.

Don't associate with fools; you will soon get it into a mess.

முட்டாள்களுடன் சேராதே! (சேர்ந்தால்) சீக்கிரமே சங்கடங்களில் மாட்டிக் கொள்வாய்.

18. To cry over split milk:- To indulge in useless regrets: தேவையற்ற விஷயங்களைப்பற்றி வருந்தல்

It is not use crying over split milk.

தேவையற்ற விஷயங்களைப்பற்றி வருந்துவதில் பயனில்லை.

19. Mind one's own business:- Not interfere with the affairs of others: மற்றவர் விஷயத்தில் தலையிடாதிருத்தல்.

It is always better to mind your own business.

எப்பொழுதுமே மற்றவர் விஷயத்தில் தலையிடாமல் இருப்பதே நல்லது. (உனது விஷயத்தைக் கவனிப்பதே நல்லது)

20. To make a mountain out of a molehill:- To exaggerate things: அனாவசியமாக விஷயங்களைப் பெரிதுபடுத்துதல்.

You are making Mountains out of molehills as you always do.

எப்பொழுதும் செய்வதுபோலவே நீ சிறிய விஷயங்களைப் பெரிதுபடுத்துகிறாய்.

21. Beyond measure:- Boundless; எல்லையற்ற.

His talents are beyond measure.

அவனது திறமைகளுக்கு எல்லையில்லை!

22. Make up one's mind:- To decide; தீர்மானித்தல்

You have to make up your mind soon, whether to join in medical or engineering course.

மருத்துவப் படிப்பிலா அல்லது பொறியியல் துறையிலா, எதில் சேர்வது என்பதை நீ சீக்கிரமே தீர்மானிக்க வேண்டும்.

23. More or less:- Roughly; சுமாராக

It will cost more or less hundred rupees.

இதன் விலை சுமார் நூறு ரூபாய்.

24. Make a move:- start going; கிளம்புதல்.

It is eight o'clock, let us make a move.

மணி எட்டாகிவிட்டது; நாம் கிளம்புவோம்.

25. Mourn for:- To grieve மறைவிற்கு வருந்துதல்

The people mourned for Diana.

டயானா மறைவிற்கு மக்கள் வருந்தினர்.

26. Muse on; Muse upon:- To think on closely உன்னிப்பாக சிந்தித்தல்

She mused upon the new situation

அவள் புதிய நிலையைப்பற்றி உன்னிப்பாக சிந்தித்தாள்.

27. Miss the bus:- miss the opportunity:- வாய்ப்பைத் தவறவிடல்.

Kamala got the jobs, since you did not turn up yesterday; you missed the bus. நேற்று நீ வராததால் கமலாவிற்கு வேலை கிடைத்துவிட்டது நீ வாய்ப்பை இழந்துவிட்டாய்.

28. More and More:- அதிகம் அதிகமாய். பணம் தேவையாய் இருக்கிறது.

He needs more and more money.

அவனுக்கு இன்னும் அதிகமாய்ப் பணம் தேவையாய் இருக்கிறது.

29. March on:- To invade; படையெடு

Alexander marched with his troops on India but turned back after the war.

அலெக்ஸாண்டர் இந்தியா மீது படை எடுத்தான். ஆனால், போருக்குப்பின் திரும்பிவிட்டான்.

30. Make a lot:- to gain profit; லாபமடைதல்

He made a lot in the race on that bet.

அவன் அந்தக் குதிரைப் பந்தயத்தில் லாபமடைந்தான்.

IDIOMS AND PHRASES – 18

1. Mug up:- மனப்பாடம் செய்தல்.

Students should not mug up market notes.

மாணவர்கள் சந்தை நோட்ஸ்களை மனப்பாடம் செய்தல் கூடாது.

2. To eats one's mutton:- To dine; சாப்பிடுதல்

(இது ஆங்கிலப் பழக்கத்தின் அடிப்படையில் எழுந்தது)

Will you eat your mutton with me today?

நீ என்னுடன் இன்று சாப்பிடுவாயா?

3. Name after:- To give a name to a baby; குழந்தைக்குப் பெயரிடுதல்.

The boy was named his grandfather.

பையனுக்குத் தாத்தாவின் பெயர் வைக்கப்பட்டது.

4. Nail a lie:- To expost a falsehood; தவறை வெளிப்படுத்தல்.

The opposition leader nailed the lie spread by the ruling party leader.

ஆளுங்கட்சியின் தலைவர் பரப்பிய தவறான செய்தியை எதிர்க்கட்சி தலைவர் வெளிப்படுத்தினார்.

5. Narrow down:- To reduce to a minimum. அபிப்ராய பேதம் வெகுவாகக் குறைதல்

The differences between the committee members were narrowed down at least.

கமிட்டி உறுப்பினர்களிடையே இருந்த அபிப்ராயப் பேதங்கள் கடைசியில் வெகுவாகக் குறைக்கப்பட்டன.

6. Object to:- To oppose in words; (Argument) மறுத்துக்கூறல்; விவாதம்.

I object to party politics being dragged into this discussion unnecessarily.

அனாவசியமாக இந்த விவாதத்தில் கட்சி அரசியல் நுழைக்கப்படுவதை நான் எதிர்க்கிறேன்.

7. Originate in:- Originate in a place as a cause; முதலில் ஒரு இடத்தில் ஒரு விஷயம் தோன்றும் காரணம்.

The fire originated in the third compartment.

தீ முதலில் மூன்றாவது கம்பார்ட்மெண்டில் பிடித்தது.

8. Off the beaten track:- New புதிய (சம்பிரதாய முறையில் அல்லாத)

The theme of the novel is off the beaten track.

நாவலின் மையக்கருத்து (சம்பிரதாயத்திலிருந்து மாறுபட்ட) புதிதான ஒன்று!

9. Once for all:- Finally; முடிவாக.

Leave me alone once for all.

முடிவாக என்னைத் தனியே விடு.

10. Offend against:- Violate; மீறுதல்

There was nothing in my speech in offend against the law.

சட்டத்திற்கு மீறியதாக எனது பேச்சில் ஒன்றும் இல்லை.

பல்வேறு லத்தீன், பிரெஞ்சு, இத்தாலிய மற்றும் கிரேக்கச் சொற்களை ஆங்கில வாக்கியங்களில் பார்க்கும்போது ஒன்றுமே புரிவதில்லை! ஏனெனில் இந்தத் தொடர் அல்லது தனிச் சொற்களைப் புரிந்துகொண்டால் தான் வாக்கியத்தின் பொருளே புரியும். அவற்றில் சிலவற்றைப் பார்ப்போம்.

1. ad hoc: For this purpose:- இந்த நோக்கத்திற்காக (லத்தீன் சொல்)

அட்ஹாக் கமிட்டி என்பது ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக நியமிக்கப்படுவது ஆகும். ஒரு குறிப்பிட்ட பணி அல்லது நோக்கம் நிறைவேறி விட்டால் அதன் ஆயுள் காலம் முடிந்துவிடுவதாக அர்த்தம்.

An ad hoc committee was formed to deal with house tax matters.

வீட்டுவரி சம்பந்தமான விஷயங்களுக்காக ஒரு அட்ஹாக் கமிட்டி அமைக்கப்பட்டது.

2. Ad interim:- For the time being அப்போதைக்கான (லத்தீன் சொல்)

The road to success does not lie through an ad interim teaching of false creeds.

தவறான கோட்பாடுகளை அப்போதைக்குக் கற்பிப்பதன்மூலம் வெற்றிக்கான சாலை அமைக்கப்படுவதில்லை.

3. Ad valorem:- According to value: According to worth மதிப்பிற்குத் தக்கபடி (லத்தீன் சொல்)

An ad valorem duty of ten percent is imposed on all goods coming from USA.

அமெரிக்காவிலிருந்து இறக்குமதியாகும் எல்லாப் பொருட்களுக்கும் பத்து சதவீத தீர்வை விதிக்கப்பட்டது.

4. Alias:- Otherwise 'என்னும்' (லத்தீன் சொல்)

சாதாரணமாக பெயர்களோடு வரும்சொல்

Senthil murugan married valli alias baby.

செந்தில் முருகன் வள்ளி என்னும் பேபியை மணந்தான்.

5. Alma mater:- In the place of mother; கல்லூரி, பள்ளி, பல்கலைக்கழகம் இவற்றை இரண்டாவது தாய் என்று குறிப்பிடுவது வழக்கம்.

A goodmen – they who have any character who have that within them which can reflect credit on their alma mater – They come throught scathless.

நற்பண்புகளை உடைய நல்ல மனிதர்கள் தான் படித்த இடத்தின்பெயரைப் பிரதிபலிக்கும் வகையில் வசையின்றி வருவர்.

6. Anno Domini:- In the year of our Lord. கிறிஸ்து பிறந்த வருடம் (லத்தீக் சொல்)

Plassi war was held in 1757 A.D.

பிளாஸி யுத்தம் (கிறிஸ்துவிற்குப்பின்) 1757–ல் நடந்தது.

7. Ante meridian; (a.m.) :- forenoon; முற்பகல்.

Please come at 10 a.m.

தயவுசெய்து காலை பத்து மணிக்கு வா.

8. Post meridian (p.m.) :- Afternoon;- பிற்பகல்

Please come at 3 p.m.

தயவுசெய்து பிற்பகல் மூன்று மணிக்கு வா.

9. Bonafide; Banafides:- in good faith; sincere, genuine உண்மையான.

We do not question his bonafides.

நாங்கள் அவரை சந்தேகப்படவில்லை. (அவர் பற்றிய உண்மை விவரங்களைப் பற்றிக் கேள்வி எழுப்பவில்லை)

10. Ars longa; Vita brenis; Art is long; life is short (லத்தீன் தொடர்)

கலையோ பெரிது; கற்பவர் நாள் சிறிது!

இன்னும் சில லத்தீன், மற்றும் பிரெஞ்சு தொடர்களைப் பார்க்கலாம்.

1. Bon voyage:- (Wish you a) Pleasant journey (பிரெஞ்சு சொல்) வாழ்த்தி பயணத்தில் விடைகொடுத்தல்

Mohan! Bon voyage. மோகன் உன்பயணம் இனிதாக ஆகுக!

2. Magnum Opus:- Great Work; master piece (லத்தீன் சொல்) பெரிய படைப்பு; நேர்த்தியான, தலையாயப் படைப்பு.

I shall never achieve any great work in Madras; For my magnum opus, I must have the tranquility of my village.

எனது சிறந்த படைப்பை சென்னையில் உருவாக்க முடியாது. அதற்கு அமைதி தவழும் என் கிராமம் (சூழ்நிலை) வேண்டும்.

3. Prima facie:- On first appearance; முதல் பார்வையில்.

We had enough evidence to establish a prima facie cape of conspivacy.

எங்களிடம் சதி நடந்ததற்கான போதுமான ஆதாரங்கள் முதல் பார்வையிலேயே உள்ளன.

4. Extempore:- Without preparation; தயாரிப்பு இன்றி.

He made an extempore speech in the function.

அவன் தயாரிப்பு இன்றி அங்கேயே விழாவில் பேசினான்.

5. In toto:- Completely; முற்றிலும் (லத்தீன்சொல்)

I disagree with you in toto.

நான் உன்னிடமிருந்து முற்றிலும் மாறுபடுகிறேன்.

6. Modus operadi; The way of working

I don't find an MO (Modus Operandi) for myself now.

நான் வேலை செய்யும் வழிமுறையை என்னால் இப்போது வகுக்க முடியவில்லை.

7. Resume:- A Summary தொகுப்பு (பிரெஞ்சுசொல்)

I don't find an MO (Modus Operandi) for myself now.

உன்னைப் பற்றிய ஒரு தொகுப்பைத் தயாரித்து எனக்கு அனுப்பு.

8. Sanctum Sanctorum:- Sacred place; கர்ப கிரஹம்

The foreigners are not allowed in the Sanctum Sanctorum of Sri Meenakshi temple.

அருள்மிகு மீனாட்சி ஆலய கர்பகிரஹத்தினுள் அயல்நாட்டார் அனுமதிக்கப்படுவதில்லை.

9. Ibidium; ibid:- In the same place; அதுபோலவே,

கட்டுரை மற்றும் புத்தகங்களை எழுதுவோர் தனது கருத்திற்கு ஆதாரமான நூலின் பெயரையும், பக்கத்தையும் குறிப்பிடுவர். ஒரே புத்தகத்திலிருந்து மீண்டும் மீண்டும் மேற்கோள்கள் தரப்பட்டால் 'Ibid' (அதே புத்தகம்) என்று குறிப்பிடுவது வழக்கம்.

Ibid கம்பராமாயணம் - பால காண்டம்.

10. Viva Voice: With the living voice, orally. (நேரே) பேசுதல்

Have you completed, your viva voice test?

உனது 'நேர்முக பேசும்' தேர்வை முடித்துவிட்டாயா?

'Pass' என்ற வார்த்தையை இணைத்து பல Idioms and Phrases உருவாகி உள்ளன. அவற்றைப் பார்ப்போம்.

1. Pass from:- To leave; to get away from விட்டுவிடுதல்.

Let us now pass from this; we have discussed it enough.

இதை விட்டுவிடுவோம்; போதுமான அளவு இதை விவாதித்தாகிவிட்டது.

2. Pass for:- To be regarded as; மதிக்கப்படுதல்

He faster for a learned man in our village

நமது கிராமத்தில் அவர் படித்தவராக மதிக்கப்படுகிறார்.

3. Pass into:- to go into; செல்லுதல்

He passed into his house.

அவன் தனது வீட்டிற்குள் சென்றான்.

4. Pass on:- To convey; தெரிவித்தல்.

Pass on the message to all.

எல்லோருக்கும் செய்தியைத் தெரிவியுங்கள்.

5. Pass over:- To pass by; Omit ஒதுக்கு, நிராகரி.

I passed over many candidates and selected him.

நான் பல விண்ணப்பதாரர்களை நிராகரித்து இவரைத் தேர்ந்தெடுத்தேன்.

6. Pass through:- to go through to the other side. மறுபக்கம் செல்லல்.

இந்த குழாய் வழியே தண்ணீர் (மறுபக்கம்) செல்கிறது.

7. Pass the time:- To spend the time, நேரத்தைச் செலவழித்தல்.

Don't pass your time gossipying with your friend.

உனது நண்பனிடம் அரட்டை அடித்து நேரத்தைச் செலவழிக்காதே.

8. Pass out:- To faint; மயங்குதல்.

He was unable to bear the heat and passed out on the road side.

வெப்பத்தை அவனால் தாங்க முடியவில்லை; சாலை ஓரத்தில் மயங்கி விழுந்தான்.

9. Pay attention:- To show More care. அதிகமாக கவனித்தல்

Doctor advised the patient to pay attention to his health.

மருத்துவர் நோயாளியிடம் உடல்நலத்தில் அதிக கவனம் செலுத்துமாறு அறிவுறுத்தினார்.

10. Pick out:- To select, to choose தேர்ந்தெடுத்தல்.

I picked out the book I wanted.

நான் விரும்பிய புத்தகத்தைத் தேர்ந்தெடுத்தேன்.

1. Play with: To engage in fun with: விளையாட்டில் ஈடுபடல்.

Please go and play with the children.

தயவுசெய்து போ, குழந்தைகளுடன் விளையாடு.

2. Play with – To trifle with: அசட்டையாய் விளையாடுவது

It is dangerous to play with fire.

தீயுடன் விளையாடுவது ஆபத்து.

3. Play on:- Discharge water on; தண்ணீர்விடல்

The fire engines played on the flames.

தீ அணைப்பு வண்டிகள் தீ ஜுவாலைகளை தண்ணீர்விட்டு அணைத்தது.

4. Play between:- Operate between; இரு இடங்களுக்கிடையே பயணித்தல்.

The boat plies between the two cities.

படகு இரு நகரங்களுக்கிடையே செல்கிறது.

5. Put down:- To suppress: ஒடுக்குதல்.

The army put down the riot.

ராணுவம் கலகத்தை ஒடுக்கியது.

6. Put off:- To postpone ஒத்திப்போடல்.

Never put of till tomorrow what you can today.

இன்று செய்யக்கூடியதை நாளை வரை ஒத்திப்போடாதே.

7. Put off:- to lay aside; ஒதுக்கி வைத்தல்.

He put off his shoes before entering into the house.

வீட்டினுள்ளே செல்வதற்கு முன் அவன் ‘ஷூக்களை கழற்றி ஒதுக்கிவைத்தான்.

8. Rule out:- To Exclude; தள்ளுதல்.

The leader ruled out strike as the solution to their problems.

தலைவர் வேலை நிறுத்தத்தை, பிரச்சினைக்குத் தகுந்த முடிவல்ல என்று தள்ளிவிட்டார்.

9. Send away:- To dismiss; to dispatch; அனுப்புதல்

Send him away; he is nuisance.

அவனை அனுப்பு; அவன் ஒரு தொந்தரவு.

10. Side with:- To embrace the opinions of; கொள்கைக்கு ஒத்துப்போதல்.

He has always sided with the ruling party.

அவன் எப்போதும் ஆளும் கட்சியின் கொள்கைகளுடன் ஒத்துப்போயிருக்கிறான்.

IDIOMS AND PHRASES – 19

1. Set off:- To depart; பயணம் தொடங்குதல்.

We plan to set off next Monday.

அடுத்த திங்களன்று பயணம் தொடங்கத் திட்டமிட்டுள்ளோம்.

2. Set out:- To start on a journey; பயணம் தொடங்குதல்.

He set out on his travels.

அவன் தனது பயணத்தைத் தொடங்கினான்.

3. Set up:- To bring a new Business. புது வியாபாரம் தொடங்குதல்.

He set up a branch office in Madurai

அவன் ஒரு புதிய கிளையை மதுரையில் ஆரம்பித்தான்.

4. Set upon:- To attack; தாக்குதல்.

Two dogs set upon the begger.

இரு நாய்கள் வயது முதிர்ந்த பிச்சைக்காரனைத் தாக்கின.

5. Set apart:- Reserve:- ஒதுக்கிவைத்தல்.

One day in seven is set apart as a holy day.

ஏழு நாட்களில் ஒரு நாள் புனித நாளாக ஒதுக்கப்பட்டுள்ளது.

6. Set forth:- To manifest; to proclaim.

He set forth his views with clearness and force

அவன் தன் கருத்துக்களை தெளிவாகவும், அழுத்தமாயும் கூறினான்.

7. Stand up for:- To defend; ஆதரித்தல், நீதிமன்றத்தில் எதிர்த்து வாதாடுதல்.

I mean to stand up for my rights.

எனது உரிமைகளுக்காக நான் வாதிடுவேன்.

8. Start up:- To come suddently without noticed. திடீரென தோன்றுதல்.

A new shop has started up here.

ஒரு புதிய கடை இங்கே துவக்கப்பட்டுள்ளது.

9. Strike out:- To try to hit, தாக்க முயலல்.

He struck at me; but I avoided the blow.

அவன் என்னைத் தாக்கினான். நான் அடி விடுவதைத் தவிர்த்தேன்.

10. Strike out; to erase: நீக்குதல்

He took a penvil and struck out two paragraphs from his essay.

அவன் தனது பென்சிலை எடுத்து இரு பாராக்களைத் தன் கட்டுரையிலிருந்து நீக்கினான்.

IDIOMS AND PHRASES – 20

1. Take Away:- (அகற்றுதல்) To Remove; To Deprive one of

Take away the thorns from the path – வழியில் கிடக்கும் முட்களை அகற்று.

2. Take back:- To withdraw திரும்பப் பெறுதல்.

You take back all you have said – நீ சொன்னதை எல்லாம் திரும்பப் பெறு.

3. Take down:- To record; சொல்வதை எழுதல்.

Please take down my notes, தயவுசெய்து நான் சொல்வதைக் குறிப்பெடு.

4. Take down:- To bring down; கீழிறக்கல்

Take down that scaffolding – அந்தச் சாரத்தைக் கீழிறக்கு.

5. To take anything to heart:- To bear it seriously; To be much affected by it - ஒன்றால் பெரிதும் பாதிக்கப்படுதல்.

Please forget what I said; Don't take it to heart, - தயவுசெய்து நான் சொன்னதை மறந்துவிடு; அதனால் வருந்தாதே; (சீரியஸாக அதை எடுத்துக்கொள்ளாதே)

6. Take in:- To escort to a room - அறைக்கு கூட்டிச் செல்லல்.

He requested to take her into dinner – அவளை இரவு சாப்பாட்டிற்கு அழைத்துச் செல்லுமாறு அவன் வேண்டினான்.

7. Take in:- To enclose with a fence – சுற்றி வேலிபோடுதல்.

He has taken in a piece of ground for a garden – அவன் ஒரு சிறிய இடத்தை தோட்டமாக்கிச் சுற்றி வேலிபோட்டான்.

8. Take in:- to include or comprise – உள்ளடக்குதல்.

This map includes India, Nepal, Pakistan, Burma and Sri Lanka - இந்த வரைபடம் இந்தியா, நேபாள், பாகிஸ்தான், பர்மா மற்றும் ஸ்ரீலங்காவை உள்ளடக்கி உள்ளது.

9. Take in:- To receive regularly – வழக்கமாகப் பெறுதல்.

I take in Dinaboomi and Champion:- நான் வழக்கமாக தினபூமி மற்றும் சாம்பியனைப் பெறுகிறேன்.

10. Take off:- To remove; - அகற்றுதல்.

He used to take his shoes off – அவன் தனது 'ஷூ'க்களை அகற்றுவான்.

11. Take off:- To begin flight; - விமானப் பயணத்தை தொடங்கல்.

The plane carrying my son took off at 10 a.m. எனது மகனை ஏற்றிச்சென்ற விமானம் காலை பத்து மணிக்குக் கிளம்பியது.

12. Take over:- To assume charge; புதிய பொறுப்பு ஏற்றல்

I took over as Manager today. நான் மேலாளராக இன்று பொறுப்பு ஏற்றேன்.

13. Talk Over:- To discuss; விவாதித்தல்.

They talked over the scheme till midnight. அவர்கள் அந்த திட்டத்தை நள்ளிரவு வரை விவாதித்தனர்.

14. Tamper with:- To meddle with அனாவசியமாக குறுக்கிடல்.

Don't tamper with the official records. அனாவசியமாக அலுவலக ரிக்கார்டுகளை மாற்றாதே (குறுக்கிடாதே)

15. Think over:- To meditate upon. தீவிரமாக யோசித்தல்.

I was left alone to think over the sudden events of the day. அன்றைய தினம் திடீரென நடந்த நிகழ்ச்சிகளை தீவிரமாக யோசித்துப் பார்க்க தனியே விடப்பட்டேன்.

16. Tide over:- To surmount சமாளித்தல்.

Give me fifty thousand rupees to tide over my present difficulties. இப்போதைய எனது கஷ்டங்களை சமாளிக்க ஐம்பதாயிரம் ரூபாய்கொடு.

17. Touch up:- To repair or improve by giving slight touches மெருகேற்றும் வேலை.

Paint touch up work alone is pending in the bus. பெயிண்ட் மெருகேற்றும் வேலை மட்டுமே பஸ்ஸில் முடிக்கப்பட வேண்டி உள்ளது.

18. Talk big:- To speak in a boastful manner; தற்பெருமையுடன் பேசுதல்.

He talk big and hence we avoid him. அவன் தற்பெருமையுடன் பேசுபவன். ஆகவே அவனை விலக்குகிறேன்.

19. Throw light on:- To unearth new facts; புதிய உண்மைகளைக் கண்டுபிடித்தல்.

The excavations are throwing light on ancient civilization of Harappa.ஹரப்பாவின் அகழ்வாராய்ச்சிகள் அங்கு உள்ள பழைய நாகரிகத்தைப் பற்றிய புதிய உண்மைகளைக் கண்டுபிடித்தன.

5. சில வினாக்களும் விடைகளும்

தொடர் - 1

“Good morning sir”

“Good morning”

“சில சந்தேகங்களைப் போக்கிக் கொள்ள வந்திருக்கிறோம்”

“கேளுங்கள், பதில் அளிப்பதில் எனக்கும் மகிழ்ச்சிதான்”

கல்லூரி வகுப்பிலே ஆங்கில ஆசிரியை அடிக்கடி OED I Refer செய்யுங்கள் என்கிறார். OED என்றால் என்ன? என்று கேட்க கூச்சமாக இருக்கிறது.

சந்தேகத்தைக் கேட்பதில் கூச்சமே இருக்கக் கூடாது! OED என்றால் “OXFORD ENGLISH DICTIONARY” என்று பொருள். சொற்களின் அர்த்தம், உச்சரிப்பு, அதன் மூலம் இவற்றைச் சரியாகப் புரிந்துகொள்வதற்காக OED I REFER செய்யுங்கள் என்று கூறுகிறார் உங்கள் ஆசிரியை, என்ன உமா, கலா இப்போது புரிகிறதோ OED என்றால் என்வென்று?”

“அடடா, இவ்வளவு தானா? ஆமாம், ஆக்ஸ்போர்ட் இங்கிலீஷ் டிக்சனரியில் மட்டும் அப்படி என்ன விசேஷம்?”

“ஆங்கிலத்தில் எட்டு லட்சம் சொற்கள் உள்ளன. அனைத்துச் சொற்களையும் நிபுணர் குழு ஆராய்ந்து அவ்வப்பொழுது சேர்க்க வேண்டியதைச் சேர்த்து சரியாகத் தருவதால் ஆக்ஸ்போர்டு டிக்சனரி உலகம் முழுவதும் புகழ் பெற்றுள்ளது.

அதை எப்படி பயன்படுத்துவது என்ற குறிப்பை நன்கு படித்துப் பார்த்து புரிந்துகொள்ள வேண்டும்”

“சாரி, இன்று காலை அடுத்த பிளாட்டில் வசிக்கும் பஞ்சாபி அங்கிள் உமாவைப் பார்த்து அப்பா இருக்கிறாரா? என்று கேட்டார். He is gone என்று உமா பதில் சொன்னாள். அவர் ஒரு மாதிரியாக எங்களைப் பார்த்துச் சிரித்துவிட்டுப் போனார். உமா ஏதாவது தவறாகச் சொல்லிவிட்டாளா?”

“நிச்சயமாக! He has gone out என்று சொன்னால் அவர் வெளியில் போய் இருக்கிறார் என்று அர்த்தம்.

He is gone அவர் ஒரேயடியாகப் போய்விட்டார் என்று அர்த்தம். அதாவது இறந்துவிட்டார் என்று அர்த்தம். இப்போது புரிகிறதா? பஞ்சாபி அங்கிள் ஏன் உமாவைப் பார்த்து சிரித்தார் என்று!”

“ஐயையோ இப்படி விபரீதமாகவா கூறிவிட்டோம்! நல்ல வேளை, இனிமேல் இது போன்ற தவறைச் செய்யமாட்டோம். அதிருக்கட்டும், என்னை ‘INTROVERT’ என்று எனது அங்கிள் கூறுகிறாரே! அப்படி என்றால் என்ன அர்த்தம்!”

“உமா, தனக்குத் தானே சிந்தித்து உள்முகமாகவே இருப்பவர் INTROVERT. யாருடனும் பழகாமல் இருப்பது, வெட்கப்படுவது, எப்போதும் மிகவும் அமைதியாக இருப்பது, அதாவது கலகலப்பாக இல்லாமல் இருப்பவரை இண்ட்ராவர்ட் என்று சொல்வார்கள்.

இதற்கு எதிர்மாறாக இருப்பவரை Extrovert என்று சொல்வார்கள். மற்றவர்கள் மேல் அக்கறை செலுத்துவது, கலகலப்பாகப் பழகுவது, அனைவருடனும் இணைந்து இருப்பது, இது Extrovert!

சரி நேரமாகிறது நாளை பார்ப்போமா?

“Thank you sir நிறைய சந்தேகங்களுடன் அடுத்தவாரம் வருகிறோம்”

தொடர் - 2

‘சார் வணக்கம்’

“வணக்கம், என்ன ஒரு மாதிரியாக இருக்கிறீர்கள்!”

“ஆஸ்பத்திரியில் கலாட்டா சார்”

“என்ன கலாட்டா”

“அடுத்த வீட்டுப் பெரியவர் கண் ஆபரேஷனுக்காக ஆஸ்பத்திரியில் அட்மிட் ஆகி இருந்தார். ஆங்கிலம் சரியாகத் தெரியாததால் கண் மருத்துவர் என்று சரியாகச் சொல்லத் தெரியாமல் ஆர்த்தோபீடிஸ்ட், கார்டியாலஜிஸ்ட் என்று ஒவ்வொரு நிபுணராகப் பார்த்தோம்! கடைசியில் பிரசவ வார்டுக்கே போய்விட்டோம்”

அப்படியா கண் மருத்துவரை “Ophthamologist” என்கிறோம். மூளை சம்பந்தப்பட்ட வியாதிகளைத் தீர்ப்பவரை Neurologist என்கிறோம்.

“பிரசவம் பார்ப்பவரை”

“Gynaecologist (பிரசவம் பார்க்கும் மருத்துவர்) என்று சொல்லவேண்டும்.”

‘Peadiatrist’ என்றால் குழந்தை நல மருத்துவர்.

கார்டியாலஜிஸ்ட் என்றால் இதய சம்பந்தமான வியாதிகளைப் போக்கும் மருத்துவ நிபுணர். Dermotologist என்றால் தோல் சம்பந்தமான வியாதிகளைப் போக்குபவர். Orthopeadist எலும்பு சம்பந்தமாக பார்ப்பவர்.

“நல்ல வேளை பைத்தியமே பிடித்திருக்கும்!”

“அதைத் தீர்க்க Psychiatrist – டம் தான் போகவேண்டும்”

“நல்ல வேளை உங்களிடம் வந்தோம்! பைத்தியம் என்பதற்கு என்ன சொல்வது?”

“INSANE” என்றால் பைத்தியம். SANE என்றால் புத்தியுடன் இருப்பது. மனது பேதலித்தவரை ஆயன என்றும் கூறலாம்.

“Psychotic” என்கிறார்களே, என்ன அர்த்தம் சார்?”

“மனம் முழுதுமாக பேதலித்து இருப்பவர் Psychotic. Psyche என்பது கிரேக்க சொல், இதன்பொருள், மனம்! இதிலிருந்து பிறந்தது “psychotic”

“இன்று நிறைய தெரிந்துகொண்டோம். இனிமேல் ஆஸ்பத்திரி சென்றால் சரியான மருத்துவரை அணுக முடியும்!”

“Patient–ஐப் பார்க்கப் போங்கள். ஆனால் Patient- ஆகப் போகாதீர்கள்!”

“தேங்க்ஸ் சார்” Be patient, Doctor is in என்று போர்டு போட்டிருக்கிறதே ஆஸ்பத்திரியில். பொறுமையாக இரு என்றும் கூறலாம். நோயாளியாக இரு என்றும் கூறலாமோ!”

“அட சிலேடை கூட வருகிறதே, உங்களுக்கு!”

“உங்களிடம் அல்லவா ஆங்கிலம் கற்கிறோம்!”

சிரித்துக் கொண்டே வெளியேறினார்கள்.

தொடர் - 3

“சார் கலா என்னை ரொம்ப அவமானப்படுத்தி விட்டாள்!”

“என்ன, கலா, உமாவை என்ன செய்தாய்?”

Notorious என்பதற்கு WELL KNOWN என்று அகராதியில் போட்டிருந்தார்கள். ஆகவே notorious உமா என்று சொன்னவுடன் காலேஜில் எல்லோரும் சிரித்துவிட்டார்கள்.

"அடடா, notorious என்றால் Widely known, but unfavourably என்று அர்த்தம்! பிரபலமான திருடன் என்கிறோமே, அது போல! அனைவருக்கும் தெரிந்த மோசமான பேர்வழி என்பதற்கு Notorious" என்ற வார்த்தையை பயன்படுத்த வேண்டும். உதாரணமாக Notorious liar என்று கூறலாம்.

"புகழ் பெற்றவர் என்பதற்கு என்ன சொல்வது சார்?"

"Famous என்று சொல்ல வேண்டும். பிரபலமாய் புகழ்பெற்று இருப்பவர் Famous"

"ஆஹா, Famous uma என்று சொல்லி விடுகிறேன் இனிமேல்"

"அப்படித்தான், அம்மாவை, குழந்தைபோல மனசு என்று சொல்ல நினைத்தவள் என்ன சொன்னாள், தெரியுமா?"

"என்ன சொன்னாள்?"

"Childish என்றுசொல்லி விட்டேன். வந்ததே கோபம் அம்மாவிற்கு!"

"Childish என்றால் சிறு பிள்ளைத்தனம் என்று பொருள். கோபம் வராமல் என்ன செய்யும்?" CHILDLIKE என்பதே குழந்தைபோன்ற என்ற Complimentary அல்லது புகழ்மொழிக்கு உரிய சொல். Childlike face என்பது புகழ் மொழி! Childish என்றால் அர்த்தமே அனர்த்தமாகிவிடும். அது சரி Egoist - க்கும் Egotist – க்கும் வித்தியாசம் தெரியுமா?"

"சொல்லுங்கள், சார்"

"சுயநலம், பேராசை, அதிக கர்வம் இவற்றோடு தான் என்ற அகங்காரத்துடன் இருப்பவர் Egoist. உன்னை பற்றிய அனைத்துமே எண்ணுவது; உதாரணமாக எவ்வளவு நல்லவள் எப்படி பெரிய பிரச்சனைகளைத் நீ தீர்த்துவிட்டாய் என்று இப்படி உன்னை பற்றியே சிந்திப்பது EGOTIST.

“நாங்கள் இருவரும் Egoist ஆகவோ EGOTIST ஆகவோ விரும்பவில்லை சார் அடுத்த வகுப்பில் பார்க்கிறோம்.”

“சரி அடுத்த வகுப்பிலே பார்க்கலாம்.”

தொடர் - 4

“வணக்கம் சார்”

“வணக்கம். ஏன் டல்லாய் இருக்கிறீர்கள்?”

“அப்பாவிற்கு தெரிந்த நண்பர் ஒருவர் இறந்துவிட்டார். அவர் Dead house போய்விட்டு வந்தார். அதுதான் டல்லாய் இருக்கிறோம்.”

Dead house ஆ.... அப்படி என்றால்....?

இறந்தவர் வீட்டிற்குப் போய் ஈமச்சடங்கு முடியும்வரை இருந்தார் என்கிறேன்.

ஈமச்சடங்கிற்கு போனார் என்பதை, ‘He attended a funeral’ என்று சொல்லவேண்டும். Funeral என்றால் ஈமச்சடங்கு. Dead house என்றாலோ பிணங்களை புதைப்பதற்கு முன் வைத்திருக்கும் சாவுக் கிடங்கு என்று பொருள்.

“ஐயையோ! அப்படியா! இப்படி பொருள் மாறிவிடுமா, என்ன?”

Dead march என்றால் என்ன அர்த்தம்?

“இறந்தவர்களின் அணிவகுப்பு என்று பொருள் கொண்டு விடாதே! படைவீரர்களின் சாவு ஊர்வல இசைக்கே Dead march என்று பெயர். Dead march என்றால் என்ன தெரியுமா?”

ஒ வழியே இல்லாத முட்டுச்சந்து. அத்துடன் திரும்ப வேண்டிய பாதையில்லாத வழி... சரியா, சார்?

“அட, சரியாகச் சொல்லிவிட்டாயே! Dead letter என்றால் உரியவரிடம் ஒப்படைக்காமல் அஞ்சலகத்தில் கேட்பாரற்றுக் கிடக்கும் கடிதம் என்று பொருள்!”

“சார், Dead Shot, Dead Water, Dead Weight என்றெல்லாம் கூறுகிறோம், குழப்புகிறதே, இது மாதிரியான வார்த்தைகள்”

“Dead Shot என்றால் குறி தவறாது சுடுபவர் என்று அர்த்தம். Dead Water என்றால் தேங்கி நிற்கும் நீர் அல்லது கப்பல் செல்லும்போது அதன் பின்புறத்தில் தேங்கிச் சுழலிடும் நீர் என்றுபொருள். Dead Weight என்றாலோ பாழும் பளு அல்லது தாங்கமுடியாத சுமை என்று அர்த்தம்!”

“Dead language என்கிறோமே. அப்படி என்றால்.....?”

“வழக்கொழிந்த மொழி என்று அர்த்தம்”

“அப்பப்பா, DEAD என்ற ஒரு வார்த்தையில் இன்னொரு வார்த்தை சேர்ந்தால் இப்படியெல்லாம்கூட அர்த்தம் மாறுமா?”

“நான் சொல்வதற்கு Dead Against ஆக இல்லாமல் அதாவது முற்றிலும் மாறாக இல்லாமல் ஒப்புக்கொண்டு புரிந்துகொண்டீர்களே, அதுபோதும்!”

Lively Discussion ஆக இருந்தது சாரி!”

“அட மங்கலமாக முடிந்துவிட்டாயே! Best of luck: அடுத்த வகுப்பில் பார்ப்போம்!”

“நன்றி சார்.”

தொடர் - 5

ஒப்பிடும் சொற்றொடர்கள்

"வணக்கம் சார்"

"வணக்கம், வாருங்கள்"

"கலாவின் அலங்காரம் ஜோராராக இருக்கிறது. அவள் அழகைப் புகழ் நினைக்கிறேன். வார்த்தை தெரியவில்லையே!"

"ஒன்றை ஒன்று உவமித்துச் சொல்வதை உவமை அணி என்போம், சந்திரன் போல முகம் என்பது உவமை!"

"இங்கே கலாவை As fair as a rose என்ற phrase மூலம் ரோஜாப்பூபோல அழகு என்று சொல்லலாம்"

"அட, பிரமாதமாக இருக்கிறதே! அப்போது கருப்பிற்கு என்ன சொல்வதாம்?"

"As black as a crow" காக்கை கறுப்பு என்று சொல்லலாம்"

"வலிமைக்கு?"

"As broqe as a lion" சிங்கம்போல தைரியம் என்று கூறலாம்.

"வஞ்சகத்திற்கு?"

"As cunning as a fox" – நரிபோல நயவஞ்சகம் என்று சொல்லவேண்டும்.

"குண்டாக இருப்பவரை....."

"As fat as whale என்பார்கள்"

"புத்திக்கூர்மை உடையவரை எப்படி ஒப்பிடுவது"

"As sharp as a razor"

“முட்டாளை?”

“As Stupid as a donkey”

“இனிமைக்கு?”

“As sweet as a honey”

“சுறுசுறுப்பானவரை எப்படிச் சொல்வது.”

“As busy as a bee”

“உறுதியை எப்படி ஒப்பிடுவது”

“As firm as a rock”

“இது என்ன திருவிளையாடல் சினிமாபோல கேள்வி – பதில்? வலிமைக்கு, வஞ்சகத்திற்கு என்று அடுக்கிக்கொண்டே போகிறாயே!”

“சார் உங்கள் பதில்களும். ஆங். As quick as lightening மின்னல்போல விரைவாக வந்தனவே....”

“அட, எனக்கே ஆங்கிலம் கற்றுத் தருகிறாயா?”

அனைவரும் சிரிக்கிறார்கள்.

“o.k. அடுத்த வகுப்பில் சந்திப்போம்.”

தொடர் - 6

“வணக்கம், சார்”

“வணக்கம், என்ன சிரித்துக் கொண்டே வருகிறீர்கள்.”

“சோமு ஒரு Chronic liar. அவன் பேச்சைக் கேட்காதே! என்றார் என் அங்கிள், CHRONIC PATIENT கேள்விப்பட்டிருக்கிறேன். Chronic liar உண்டா சார்?”

“நல்ல கேள்வி! “Chronos” என்ற கிரேக்கச் சொல்லிலிருந்து பல சொற்கள் பிறந்துள்ளன. இதற்கு காலம் Time என்று பொருள். Chronic liar என்றால் காலம் காலமாக, திருப்பித் திருப்பி பொய் சொல்பவன் என்று பொருள். Chronic patient என்றால் நீண்ட காலமாக நோயாளி என்று பொருள். இதற்கு Noun form என்ன சொல்லுங்கள் பார்ப்போம்!”

“Chronicity” – யா சார்?”

“கரெக்ட் Anachronism என்றால் ஆனது. வேறு ஒரு காலத்தைச் சேர்ந்தது என்று பொருள். சோழகால ராஜகுமாரி போலப் பேசினால் அது Anachronism!

“சரி, எதிர்கால கதாபாத்திரம் போல – சயின்டிஃபிக் ஃபிகரினில் வரும் பாத்திரம் போல பேசினால்……”

“அதுவும் தான்! அதாவது வேறுபட்ட காலத்தைச் சேர்ந்தது! ANA என்று நெகடிவ் சொல்லால் காலத்திற்கு எதிர் என்று பொருள்!”

“புரிகிறது சார். INCONGRUOUS என்றால் OUT OF PLACE என்று பொருளா?”

“சரியாகச் சொல்கிறாய்! பட்டுப்புடவை அணிய வேண்டிய கல்யாண சமயத்தில் நீ ஜீன்ஸ் INCONGRUOUS அணிவது இதனுடைய noun form incongruity.”

“காட்கில் சம்பவத்தை CHRONOLOGICAL ஆகப் பார்க்க வேண்டும் என்று பேப்பரில் பார்த்தேனே…..”

“Chronological” என்றால் ஒரு சம்பவம் நடந்ததை வரிசைப்படி பார்த்தல் என்று பொருள்.

தேதி வாரியாக வருடம் வாரியாக முறையாக ஒழுங்காகப் பார்ப்பது Chronological ‘இதில் எக்ஸ்பர்ட் Chronologist’.

“கடிகாரத்தை Chronometer என்று சொல்லலாமா?”

Chronos என்றால் வு்அந என்று பார்த்தோம். Metron என்றால் அளப்பது Measurement என்றுபொருள். இரண்டும் சேர்ந்தது CHRONOMETER. மிகத் துல்லிமாக நேரத்தை அளக்க உதவும் கருவி CHRONOMETER. இதைக் கப்பல்களில் கருவியாகப் பயன்படுத்துகிறார்கள். CHRONOMETERY என்றால் காலத்தை அளப்பது என்று அர்த்தம். இதன் Adjective form Chronometric!

“Synchronize என்ற வார்த்தையில் Chronos வருகிறதே சார்?”

“Syn என்றால் Together என்று பொருள். Synchronize என்றால் To time together அதாவது நீங்கள் இருவரும் சேர்ந்து ஒரே நேரத்தில் வாட்சில் நேரத்தை சரிசெய்தால் அதை Synchronize Your watches என்று சொல்லலாம். Synchronise the activity என்றால் ஒரே மாதிரி செய்வது”

“நல்லது சார். காலம் பற்றி இவ்வளவு தெரிந்துகொண்டோம்.”

“ஓ நேரம் ஆகிவிட்டதா சரி அடுத்த வகுப்பில் சந்திப்போம்.”

தொடர் - 7

பேச்சில் பலவகை!

“வணக்கம், சார்”

“வாருங்கள், வணக்கம். இன்று என்ன விசேஷம்?”

“வகுப்பில் காரசாரமான விவாதம் நடந்தது. அதை அப்படியே சொல்ல விரும்புகிறேன். இதை ஆங்கிலத்தில் எப்படி வெளிப்படுத்துவது?”

“Verbatim report என்ற வார்த்தைக்கு வார்த்தை அப்படியே சொல்லுவது என்று அர்த்தம்! VERBUM என்ற லத்தீன் சொல்லுக்கு

Word – வார்த்தை அல்லது சொல் என்று அர்த்தம். இதிலிருந்தே Verb – வினைச்சொல் என்கிறோமே அது பிறந்தது."

"வாய்ச் சண்டையை குறிப்பது என்ன சொல் சார்?"

"Verbal fight என்றால் வாய்ச்சண்டை என்று அர்த்தம்."

"Verbal agreement என்றால் வாயாலேயே செய்துகொண்ட ஒப்பந்தம் என்று அர்த்தம். Written Agreement என்றால் எழுத்து மூலமாக செய்துகொண்ட ஒப்பந்தம் என்று பொருள்."

"She is quite verbal என்றால்.....?"

"அவள் வார்த்தைகளால் எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் வெளிப்படுத்த வல்லவள் என்று அர்த்தம். Verbiase என்றால் அதிகமான சொற்கள் என்று பொருள். Verbose person என்றால் என்ன தெரியுமா?"

"அதிகம் பேசக்கூடியவர் என்று அர்த்தம், இல்லையா சார்?"

"கரெக்ட்! Verbosity என்றால் அதிகமான சொற்களை வைத்துப் பேசுவது. வார்த்தை சிலம்பம் ஆடுவது என்றே சொல்லலாம். சுருங்கச் சொல்லி விளங்க வைப்பதற்கு எதிரிடை Verbosity!"

"அதிகம் பேசக்கூடியவரை Verbose people என்று சொல்லலாம் அல்லவா?"

"அதுமட்டுமல்ல, Loquacious, voluble, Garrulous இவர்கள் எல்லாமே talaktive தான்! பேசுபவர்களுக்கான சொற்கள் இவை? ஆனால் ஒவ்வொரு சொல்லையும் இடம் அறிந்து பயன்படுத்த வேண்டும்!"

"விளக்கமாகச் சொல்லுங்கள் சார்!"

"சொல்கிறேன். VOLUBLE என்றால் வேகமாக, கோர்வையாக தடங்கலின்றிப் பேசுவது"

"GARRULOUS என்றல்...."

“குறிக்கோள் இல்லாமல், அர்த்தம் இல்லாமல் மனம் போனபடி பேசுவது Garrulous. Garrulous old man என்றால் மனம்போனபடி பேசும் கிழவன் என்று பொருள். Laquor என்றால் To speak என்றுபொருள். இதிலிருந்து வந்ததே Eloquent நன்கு பேசக் கூடியவன் என்ற வார்த்தை.”

“பேச்சில் இப்படிப் பலவகை இருக்கிறதா, நன்கு புரிந்து கொண்டோம்!”

“அது சரி வகுப்பில் என்ன நடந்தது? Verbatim என்ன ஆயிற்று?”

“Written report-ஐ தந்து விடுகிறேன் சார்!”

“Verbosity இல்லாமல் அழகாக எழுதிக் கொண்டுவா”

“நன்றி, சார்”

தொடர் - 8

ஒப்பற்ற ஒன்று!

“வணக்கம் சார்”

“வணக்கம், என்ன அபிநயத்தோடு வணக்கம் சொல்கிறாயே!”

“சரியாகச் சொல்லிவிட்டீர்களே! கல்லூரியில் MONOACT செய்யப் போகிறேன்.

“Monos என்ற கிரேக்கச் சொல்லுக்கு தனி, ஒருவன் என்று பொருள். இதிலிருந்து பல சொற்கள் பிறந்துள்ளன, தெரியுமா!”

“Monoarch என்றால் Supreme ruler ஒப்பற்ற அரசன் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். வேறு என்ன சொற்கள் உள்ளன?”

“Monocle என்றால் ஒரு கண்ணாடி மட்டும் உள்ள கண்ணாடி என்று பொருள். Oculus என்றால் கண் என்று அர்த்தம்.

Monogamy என்றால் ஒருவன் ஒருத்தியை மணம் செய்வது ஆகும்.

Gamos என்ற கிரேக்கச் சொல்லுக்குத் திருமணம் என்று அர்த்தம்.

Monoவும் Gamoம் சேர்ந்து MONOGAMY வந்தது.

“Monogram, Monograph என்றால் என்ன சார்?”

“Monogram என்றால் இரண்டு அல்லது மூன்று எழுத்துக்களை சேர்ப்பது. அல்லது இரண்டு அல்லது மூன்று இனிஷியல்களை இணைத்துச் சொல்கிறோம் இல்லையா? உதாரணமாக TTK என்பதுபோல! மானோகிராம் என்றால் ஒரு தனி பொருள் பற்றி – Subject பற்றி எழுதுவதாகும்.”

“Monopoly என்றால்....”

“மானோபொலி என்றால் தான் மட்டும் உரிமை கொண்டாடுவது அல்லது கட்டுப்பாட்டில் வைத்திருப்பது. ஆட்டோமொபைல் துறையில் ஒரு கம்பெனி மானொபொலியாக இருக்கிறது என்றால் அத்துறையில் அந்தக் கம்பெனி மட்டுமே இருக்கிறது என்று அர்த்தம். ‘Monotheism’ என்றால் ஒரே ஒரு கடவுள் தான் உண்டு என்ற கொள்கையாகும்.”

“ஒன்று என்ற சொல்லுக்கு UNIT என்று சொல்லலாமா, சார்?”

“Unus என்பது லத்தீன் சொல், ஒன்று என்பது இதன் பொருள். இதிலிருந்து வந்தது Unit. Unity, Union என்பது இதன் அடிப்படையில் பிறந்த சொற்கள்.

“பத்திரிகையில் Unilateral, Bilateral என்று அடிக்கடி படிக்கிறோமே, அப்படி என்றால் என்ன?”

“Unilateral என்றால் Onesided ஒருபக்கமாக என்று அர்த்தம். Bilateral talk என்றால் இருதரப்பு பேச்சுவார்த்தை என்று பொருள். புரிகிறதா?”

“ஆஹா, ஒன்று பற்றிய இன்றைய பாடம் Unique”

“அதாவது One of its kind என்று சொல்லலாமா?”

“கரெக்ட் Unique என்றால் தனித்தன்மை வாய்ந்தது, ஒப்பற்றது என்று பொருள். சரி, அடுத்த வாரம் சந்திப்போம்.”

தொடர் - 9

“வணக்கம் சார்”

“வருக, கையில் என்ன ரசீது”

“கார்கில் நிதிக்கு டொனேஷன்”

“நல்ல காரியம். லத்தீன் வார்த்தையான Done என்றால் கொடுப்பது என்று அர்த்தம். அதிலிருந்து வந்ததே Doner கொடையாளி என்ற வார்த்தை. Donate என்றால் to give. Donation என்றால் Gift என்று அர்த்தம்.”

“Condone என்கிறோமே”

“Condone என்றால் TO FORGIVE மன்னித்துவிடுதல் என்றுபொருள். இதற்கு noun form condonation இந்த நன்கொடையை எப்படி யார் தூண்டுதலில் கொடுத்தாய்?”

“யாரும் தூண்ட வேண்டுமா, என்ன? இது நம் கடமை! Voluntary ஆகத் தந்தோம்”

“Voluntary என்றால் தன்னிச்சையாக என்று அர்த்தம், இல்லையா? ‘Volo’ என்ற சொல்லுக்கு To wish, to will என்று பொருள். இதிலிருந்து வந்ததே voluntary, involuntary, volunteer ஆகிய சொற்கள்.

“Volition என்றால்?”

“அதுவும் இதிலிருந்து வந்ததே! Against her volition என்றால், அவள் விருப்பத்திற்கு மாறாக என்று அர்த்தம்.”

“நமது நாட்டிற்கு Terms dictate செய்ய யாருக்கும் உரிமை இல்லை. தெளிவாக இருக்கிறோம் இதில், இல்லையா சார்?”

“நிச்சயமாய்! Dico அல்லது Dictus என்றால், To say, to tell என்று அர்த்தம். இதிலிருந்து வந்ததே Distate, அதாவது சர்வாதிகாரி, மற்றும் dictation, Dictator, dictatorial போன்ற வார்த்தைகள்.”

“Benediction, Malediction ஆகிய வார்த்தைகளும் இந்த Dico, Dictus ஆகியவற்றிலிருந்து வந்தவைதானா?”

“ஆமாம், Dico என்றால் நான் சொன்னதைச் செய் என்று கட்டளை இடுவதுபோல ஆகும். Predict என்றால் முன்கூட்டியே சோதிடமாகச் சொல்வது ஆகும்.”

“contradict என்றால்......”

“மறுத்து விடுவது. Dico உடன் contra என்ற வார்த்தையும் இணைந்து வருவது Contradict. contra என்றால் Against எதிரானது என்று பொருள்.”

“Dicta phone என்றால் dico மற்றும் phone இணைந்த சொல்தானே சார்?

“கரெக்ட், இன்னும் அதிகமாக நிதி சேர்த்து கார்கில் நிதி பெருக உதவுங்கள்.”

“செய்வோம் சார், நன்றி.”

ஆசிரியரைப் பற்றி

திரு ச.நாகராஜன் பாரம்பரிய மிக்க தேசபக்த குடும்பத்தில் பிறந்தவர். இவரது தந்தையார் திரு வெ.சந்தானம் இந்திய சுதந்திரப் போரிலே ஈடுபட்டுச் சிறை சென்றவர். மணிக்கொடி பி.எஸ்.ராமையாவுடன் இணைந்து தமிழ் பத்திரிக்கை உலகில் ஒரு புது சகாப்தத்தை ஏற்படுத்தியவர். தஞ்சை மாவட்டம் கீவளூரில் பிறந்த நாகராஜன், இது வரை சுமார் 1200க்கும் மேற்பட்ட கதைகள், கவிதைகள், நாடகங்கள், கட்டுரைகள் எழுதியுள்ளார். அறிவியல் விண்வெளி விஞ்ஞானம், ஜோதிடம், நட்சத்திரங்கள், வரலாறு, இலக்கியம், சுற்றுலா இடங்கள், புலன் கடந்த உணர்வு, கடல் வளம், மிருக இயல், இசை, மந்திரம், இயந்திரம், சாதனையாளர்கள், ஹாலிவுட் சினிமா, பெண்கள் முன்னேற்றம், சுய முன்னேற்றம், படைப்பாற்றல் உள்ளிட்ட பல பொருள்களிலும் கட்டுரை படைத்திருப்பது இவரது தனிச் சிறப்பு! திருச்சி வானொலி நிலையம் வாயிலாக இவரது நாடகங்கள் ஒலிபரப்பப்பட்டுள்ளன. ரேடியோவில் அவ்வப்பொழுது உரை ஆற்றி வருகிறார். ஜெயா டி.வியில் ஒளிபரப்பாகும் இவரது நிகழ்ச்சிகள் பெரிய வரவேற்பைப் பெற்றுள்ளன. இதுவரை இவரது 14 புத்தகங்கள் வெளி வந்துள்ளன. மேலும் பல அச்சில் உள்ளன. இவரது படைப்புகள் பாக்யா, மங்கையர் மலர், தினமணி, தினபூமி, ஆனந்த விகடன், சினேகிதி, ஞான ஆலயம், கோகுலம் கதிர், ஹிந்து, மஞ்சரி, கலைமகள் உள்ளிட்ட பல்வேறு இதழ்களில் இடம் பெறுகின்றன. இணைய தள இதழ்களில் நிலாச்சாரலில் இவரது படைப்புகளைக் காணலாம். வாகனக் கட்டுமான இயல் எனப்படும் வெஹிகில் பாடி எஞ்சினியரிங் தொழில் வல்லுனர் இவர்! மனைவி மற்றும் இரு மகன்களுடன் சென்னையில் வசித்து வருகிறார்.